மே 31 - ஜுன் 06, 2004 28 பக்கங்கள் 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI

වාර මලර්

வார மலர்



ஆதரவற்ற சிறுவர் சீரழியும் அபாயம்

தவிக்கிறார் திருடா திருடி

சந்திரிகாவின் அரசியல் சதுரங்கம் நெருக்கடிக்குள்

குழப்புவாரா டிக்ஸிற்?

# ஜனாதிபதி உடன்படும் விடயங்களும் ஜே.வி.பி வெளிப்படுத்தும் முரண்பாடுகளும்

**2004** பொதுத் தேர்தலின் போது விடுதலைப்புலிகளுக்கெதிரான பிரசாரத்தை மையமாகவைத்து ஆரம்பிக்கப்பட்ட பொது ஜன ஐக்கிய முன்னணி – ஜே.வி.பி. கூட்டு இன்று பெரும் நெருக்கடி நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்கவின் புலிகளுடனான சமாதான முயற்சிகளை தேச விரோத நடவடிக்கையாக பறைசாற்றுவதன் மூலம் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை அரசொன்றை அமைக்கலாம் என்ற நம்பிக்கை




யில்தான் ஜே.வி.பி.யுடனான இந்த கூட்டு ஆரம்பிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் கட்சியும் ஜே.வி.பி.யும் இணைந்து ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கையும் அதன் தேர்தல் விஞ்ஞாபனம் வெளிப்படுத்திய கருத்துக்களும் விடுதலைப்புலிகளை ஒரு தேச விரோத சக்தியாகவே வெளி உலகுக்கு காண்பிக்க முற்பட்டன.

இது விடயத்தில் இரு தரப்பினரும் இணைந்துகொண்டபோதும், தாம் முன்வைத்த திட்டங்களை விட தத்தமது கட்சிகளின் நலன்களில்தான் இவர்கள் குறியாக இருந்தனர். இவர்களுக்கிடையிலான பிந்திய முரண்பாடுகள் இதனையே வெளிப்படுத்துகின்றன.

எல்லாவற்றையும் விட தனக்குக் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த ஆசனங்கள் ஜே.வி.பியின் கைக்கு மாறியிருப்பதுதான் ஜனாதிபதியின் கட்சிக்கு மிகவும் ஜீரணிக்க முடியாத விடயமாகப் போய்விட்டிருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், ஜே.வி.பி கோரிய அமைச்சுக்கள் ஜனாதிபதிக்கு பெரும் தலைவலியாகவும் மாறியுள்ளன. ஜே.வி.பி கோரிய அமைச்சுக்களைக் கொடுப்பதற்கு ஜனாதிபதி காலம் தாழ்த்தியதும், பின்பு கொடுத்த அமைச்சுக்களில் ஒரு பகுதியை தம் வசம் எடுத்துக் கொண்டு விட்டதும் ஜே.வி.பிக்கு வேறு ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இதில் பிரதானமாக குறிப்பிட வேண்டிய விடயம், ஜனாதிபதியும் – ஜே.வி.பியும் ஏற்படுத்திக் கொண்ட தேர்தல் உடன்படிக்கை ஆகும்.

இதில் உள்ள முக்கியமான விவகாரம் என்னவெனில், தற்போது ஜனாதிபதி ஒத்துக்கொண்டுள்ள அனைத்து விடயங்களும், அந்த உடன்படிக்கையில் எதிர்மாறாக தீர்மானிக்கப்பட்டே கைச்சாத்திடப்பட்டிருக்கின்றன என்பதுதான்.

குறிப்பாக விடுதலைப்புலிகளுடன் எந்தப் பேச்சுக்களையுமே வைத்துக் கொள்ளக் கூடாது என்பது, நோர்வேயின் பிரசன்னத்தை மறுதலிப்பது, இடைக்கால தன்னாட்சி அலகை நிராகரிப்பது, புலிகளை யுத்தம் ஒன்றின் மூலம் வெற்றி கொண்ட பின்னரே அவர்களுடன் பேசுவது, ரணிலின் பேச்சுவார்த்தை முறைமை நாட்டை தாரைவார்ப்பதற்கு ஒப்பானது. எனவே முன்னைய பேச்சுக்களின் முறைமையில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கக் கூடாது. இவை உடன்படிக்கையின் பிரதான அம்சங்களாக இருந்திருக்கின்றன.

ஆனால், 2004 தேர்தல் முடிந்த பின்பு எதிர்பார்த்தவை எல்லாம தவிடு பொடியாகி விட்டன.

புதிய அரசில் ஜே.வி.பி சிறுபான்மைச் சக்தியாக இருக்கும் என ஜனாதிபதியும் அவரது கட்சியினரும் எதிர்பார்த்தார்கள். அதுமட்டுமன்றி, தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும், இப்போது கிடைத்திருப்பதில் பாதியையே எதிர்பார்த்தார்கள். தாம் பலம் வாய்ந்த சக்தியாகவும், ஜே.வி.பி உட்பட தென்னிலங்கை சிறுபான்மைக் கட்சிகள் மற்றும் மலையக, முஸ்லிம் கட்சிகள் தமிழ்த் தரப்பின் ஆசனங்கள் யாவும் தம்மால் இலகுவாக வளைத்துப் பிடிக்கக் கூடிய நிலையிலேயே இருக்கும் எனவும் எதிர்பார்த்தார்கள்.

அதுமட்டுமன்றி ஜே.வி.பியினரின் தேர்தல் பிரசாரத்துக்கான பரந்துபட்ட ஏற்பாடுகள் குறித்தும் ஜனாதிபதியின் தரப்பு அசட்டையாகவே இருந்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

சிலவேளை ஜனாதிபதியின் தரப்பு தேர்தலுக்கு முன்பு, விடுதலைப்புலிகள் தொடர்பாக ஒரு கருத்தையும், பின்பு நாடாளுமன்றத்தில் ஆளும் தரப்பாக வந்ததன் பின்பு நிலைமைக் கேற்றால் போன்று சுருதியை மாற்றி வாசிக்கலாம் என்ற நம்பிக்கையுடன் கூட இருந்திருக்கலாமோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது.

அந்தஎதிர்பார்ப்புக்குஏற்றவாறேஏனைய சிறுபான்மைக் கட்சிகளின் நிலையும் இருக்கும் என ஜனாதிபதியின் தரப்பு நம்பியிருக்கலாம்.

ஆனால், தேர்தலுக்குப் பின்பு நிலைமைகள் தலைகீழாகப் போய்விட்டிருப்பது ஜனாதிபதியைப் பொறுத்தவரை மிகவும் சங்கடமாகத்தான் இருக்கிறது.

கடந்த மாதம் 22 ஆம் திகதி நடைபெற்ற சபாநாயகர் தெரிவின் போது நாடாளுமன்றத்தின் நிலையை நாடிபிடித்தறிந்த ஜனாதிபதி, அடுத்த நாளே ஜே.வி.பி.யுடனான தனது உடன் படிக்கைகள் எதுவும் இனிமேல் பலனளிக்கப் போவதில்லை என்ற முடிவுக்கு வந்து விட்டார்.

சமாதானத்தின் பேரால் தான் ஆற்றப் போகும் காரியங்கள் நூற்றுக்கு நூறு தனது பங்காளியான ஜே.வி.பியுடன் ஏற்கனவே ஒத்துக் கொண்டதற்கு முரணானது என்று அவருக்கு நன்றாகவே தெரியும். இந்த உடன்பாட்டை அவர் மீறுவதற்கு தனக்கு வாக்களித்தத் தவறிய தேசத்தின் மீது அதன் மக்கள் மீது பழியை சுமத்தித்தான் இதில் இருந்து அவர் தப்பிக்க இயலும்.

அதாவது, விடுதலைப்புலிகளுக்கு எதிரான தனது செயற்பாடுகளுக்கு சிங்கள தேசம் முழுமையான ஆணையைத் தரவில்லை. எனவே தற்போதைய சங்கடமான நிலையில் இந்த உடன்பாடுகளை மீறுவது என்னால் தவிர்க்க முடியாது என தனக்குத் தானே ஜனாதிபதி சமாதானம் சொல்லிக் கொள்ளலாம்.

கடந்த தேர்தல் முடிவுகள் பொதுஜன ஐக்கிய முன்னணி மீதான மக்களின் நம்பிக்கை என்பதற்குப் பதிலாக ஜே.வி.பி.யின் தமிழ் தேசத்தின் மீதான புலிகள் பற்றிய பீதி குறித்த அறிவிட் புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றுதான் கூற வேண்டும.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆசனங்கள் இந்தத் தேர்தலில் ஜே.வி.பியிடம் கைமாறி இருப்பது அதனையே வெளிப்படுத்துகிறது.

இப்போது ஜனாதிபதி தனது கட்சியின் மீதான சிங்கள தேசத்தின் நம்பிக்கையீனத்தையும் கூடவே ஜே.வி.பியின் சிங்கள தேசத்தின் மீதான அதன் அறிவிப்புக்கு மக்கள் செவி சாய்த்திருப்பதையும் ஜனாதிபதி நன்கு கவனத்தில் கொண்டுள்ளார்.

தற்போதைய நிலைமையில், ஜே.வி.பியுடன் இணைந்து ஏற்படுத்திக் கொண்டுள்ள உடன்பாட்டுக்கமைய நடந்து கொள்வது நேர்மையானதாக ஜனாதிபதிக்குத் தோன்றி




னாலும், அதன் மூலமான பலன்கள் மென்மேலும் ஜே.வி.பிக்கே போய்ச் சேர்ந்து விடும் என்பதும் அவருக்குத் தெரியும்.

அதுமட்டுமல்ல, ஏனைய சிறுபான்மை இனக் கட்சிகளின் ஆதரவும் இல்லாமற் போய், தன்னை ஒரு சமாதானத்துக் கெதிரான சக்தி என்ற பழிப் பெயருக்கும் தான் உள்ளாக வேண்டி ஏற்பட்டுவிடும் என்ற பீதி வேறு ஜனாதிபதியை அலைக்கழித்துக் கொண்டிருக்கிறது.

தனக்கிருக்கும் அதிகாரங்களின்படி நாடாளுமன்றத்தில் தான் கூறியவற்றுக் எதிராக நடைபெறும் சில்லறைச் சர்ச்சைகளுக்கெல்லாம் பொறுப்புக் கூற வேண்டிய அவசியம் தனக்கில்லை என்பது அவருக்குத் தெரியும்.

சமாதான முயற்சிகளை தொடர்வது குறித்த தனது பிந்திய அறிவிப்புக்களில் தனது முன்னெடுப்புகள் ஜே.வி.பியுடனான உடன்படிக்கைக்கு எதிரானவை என்றாலும், தனது கட்சியின் சமகால, எதிர்கால இருப்புக்கு இதனை மீறுவதை தவிர வேறு நடவடிக்கைகள் எதுவும் அவரிடம் இருப்பதாகத் தெரியவில்லை.

இப்போது ஜனாதிபதி அறிவித்துள்ள விடயங்கள மூலம் அவருக்கு நல்ல பெயர் கிடைக்க வேண்டும். ஆனால் அவர் அறிவித்த விடயங்கள் எதுவும் சாத்தியமாக நடைபெறக் கூடாது. இதற்கு ஜே.வி.பியின் எதிர்ப்பு ஜனாதிபதிக்கு அவசியம் தேவைப்படுகிறது.

நெருக்கடியின்றி விடுதலைப்புலிகளுடன்தொடர்ந்து சமாதான முயற்சிகளைத் தொடர்வதற்கு அதாவது ஜனாதிபதி அறிவித்துள்ள இணக்கப்பாடுகள் சாத்தியமாவதற்கு தற்போது தளம்பல் நிலையில் இருக்கும் தனது கட்சியின் நாடாளுமன்றப் பெரும்பான்மைப் பலம் ஒரு போதும் உதவப் போவதில்லை என்பதும ஜனாதிபதிக்குத் தெரியும்.

அதுமட்டுமன்றி இந்த நிலை தொடர்வதே அவருக்கு மிகவும் பிடித்தமான விடயம் தான் ஒத்துக் கொண்ட விடயங்களை சாத்தியமாகாமல் செய்வதற்கும், மிகப் புத்திசாலிகளான ஜே.வி.பியை குழப்புவதற்கும் அவர் அறிவித்துள்ள இந்த இணக்கப்பாடுகளே போதுமானவைகளாக இருக்கின்றன.

இப்போது பந்தை எதிர்த் தரப்புக்கு அடித்துவிட்டேன் என்ற நிம்மதியில் ஜனாதிபதி அமைதியாக இருக்கலாம். ஆனால், அவர் வளர்த்துவிட்டிருக்கும் கடாக்கள் அவர் மார்பில் பாயும் காலம் வெகு தூரத்தில் இல்லை என்பதை – எச்சரிக்கையுடன் அவர் புரிந்து கொள்ள வேண்டும். தவறின் தற்காப்பு நிலை எடுப்பதற்கான கால அவகாசம் கூட அவருக்கு இல்லாமல் போய்விடும். (ப)

**-சாலையூரான்-**

## ஜே.வி.பி ஆட்சேபித்திருக்கும் விடயங்கள்

- *சமாதான முயற்சிகள் மற்றும் விடுதலைப்புலிகளுடனான அணுகுமுறைகள் தொடர்பாக ஏற்கனவே தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒப்புக் கொண்டுள்ளபடி அரசு அதனை நடைமுறைப்படுத்த வில்லை. உடன்படிக்கையை மீறும் வகையிலேயே அரசு நடந்து கொள்கிறது.*
- *ஏற்கனவே ஜனாதிபதி ஒத்துக்கொண்டதற்கமைய அமைச்சுக்களை அரசு கையளிக்க வேண்டும். வழங்கப்பட்ட அமைச்சுக்களின் ஒரு பகுதியை மீளவும் ஜனாதிபதி தனது பொறுப்பில் எடுத்துக்கொள்வதை நாம் கண்டிக்கிறோம்.*
- *ஏற்கனவே தாம் ஒத்துக் கொண்டதற்கு இணங்க ஹெல உறுமய நாடாளுமன்றில் நடுநிலை வகிப்பதென்பதில் இருந்து தவறியுள்ளது. அதன் செயற்பாடுகள் விடுதலைப்புலிகளுக்கும் எதிர்க்கட்சிக்கும் ஆதரவாகவே தென்படுகின்றன. அவ்வாறான செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும் என அவர்களை எச்சரிக்கிறோம்.*
- *சமாதான முயற்சிகளில் மேற்குலகத்தின் பிரசன்னத்தை நாம் விரும்பவில்லை. ஆசிய நாடுகளில் குறிப்பாக இந்தியாவின் அனுசரணையை நாம் விரும்புகிறோம்.*
- *சமாதானப் பேச்சுக்களில் நடுநிலையாளராக ஒரு நாடு மட்டும் பங்கு பற்றுவதற்குப் பதிலாக பல நாடுகளின் பிரதிநிதிகள் பங்குபற்ற வேண்டும்.*
- *தமிழ் மக்களுக்கு இனப்பிரச்சினை என்பதாக குறிப்பான பிரச்சினைகள் எவையும் இல்லை. புலிகள் தான் ஏதோ பிரச்சினை இருப்பதாக கூறிக் கொண்டிருக்கிறார்கள்.*
- *புலிகளின் முன்னாள் தளபதி கருணாவை சரியாக கையாளுவதில் அரசு கவனயீனமாக இருக்கிறது. புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் கருணாவை அரசு சரியாகப் பயன்படுத்த வேண்டும்.*
- *புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அலகுக்கான யோசனைகள் தனிநாடு கோருவதற்கு ஒப்பானவை. இத்திட்டம் முற்றாக நிராகரிக்கப்பட வேண்டும்.*
- *பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தலைவர் நியமனங்கள் தொடர்பில் எம்முடன் ஆலோசிக்காது எதிர்க்கட்சியுடன் பேசி அரசு முடிவெடுத்தது கண்டத்திற்குரியது. இது ஏற்கனவே எழுதப்பட்டுள்ள கூட்ட உடன்படிக் கைக்கு முரணானதாகும்.*
- *புலிகளுடன் பேசவேண்டிய தவிர்க்க முடியாத நிலமைகள் இருப்பதால் அவர்களுடன் அரசு பேசுவதை அனுமதிக்கிறோம். அதற்காக விடுதலைப்புலிகள் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.*
- *ஹெல உறுமய எம்பியின் இராஜினாமா கடிதத்தை சபாநாயகர் பெற்றுக் கொண்டமை தவறான ஒரு விடயம். அவர் இராஜினாமா கடித்தை கையளித்ததற்கான காரணம். சபையில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.*
- *சமாதானப் பேச்சுக்கள் நடைபெறும் போது பாதுகாப்புப் படையின் முக்கிய உறுப்பினர்கள் கொல்லப்படுவது நிறுத்தப்பட வேண்டும். இதனை தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது.*
- *தமிழ் மக்களின் சார்பில் பல கட்சிகள் இருப்பதால் தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகளாக விடுதலைப்புலிகளை ஏற்றுக் கொள்ள முடியாது. ஜனநாயக நாட்டில் இது சாதாரண விடயமல்ல.*
- *ஜனாதிபதி புலிகளுடன் பேசுவதற்கு ஒப்புக் கொண்டுள்ள அனைத்து இணக்கப்பாடுகளையும் நிராகரிக்கிறோம். தேர்தலின் போது ஐக்கிய மககள் சுதந்திர முன்னணி அறிவித்த கொள்கைப் பிரகடனத்துக்கு அமைவாகவே புலிகளுடனான பேச்சுக்கள் எதிர்காலத்தில் அமைய வேண்டும்.*
- *எமக்குள்ள மக்கள் பலம் பற்றி சபாநாயகர் கவனயீனமாக நடந்து கொள்ளக் கூடாது. அவ்வாறு நடந்து கொள்வாரானால் லட்சக்கணக்கான மக்களைக் கூட்டி அவரது இல்லத்தை முற்றுகையிட்டு, பதவியில் இருந்து விலகுமாறு அவரை வலியுறுத்த வேண்டி ஏற்படும்.*
- *புதுடில்லியில் அமைச்சர் கதிர்காமர் புலிகளை தனித்தரப்பாகவும், ஏகப் பிரதிநிதிகளாகவும் ஏற்றுக் கொண்டு பேச்சுக்களில் ஈடுபடப் போவதாக கூறியிருப்பது அரசு செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு முரணானது. இவ்வாறான சம்பவங்கள் இனிமேல் இடம்பெறாதவாறு ஜனாதிபதி பார்த்துக் கொள்ள வேண்டும்.*




## ஒட்ட நறுக்கிடுவேன்!

''குன்றின் முகத்தார் மதுபாவனையாளர். அவர் சார்ந்த கட்சிக்கு வாக்களிப்பது அபத்தம்'' என, அவரின் கட்சியிலிருந்து அண்மையில் வெளியேறிய அந்த மகாகவியின் பின் பகுதியை மட்டும் பெயராகக் கொண்ட முன்னாள் சேவல் கொடியோன், போஸ்டர்களில் துல்லியமாக குறிப்பிட்டிருந்தாராம்.

இந்த போஸ்டர்களை அவதானித்த குன்றின் முகத்தார், திருப்படா வாகனத்தை அந்த மலைச் சந்திரன் வீட்டுக்கு என்றாராம்.

மலைச்சந்திரனோ தேர்தலில் மாய்ந்தகளைப்போடு கொஞ்சம் அசதியாக அயர்ந்திருந்தாராம். சீறிக்கொண்டு போன முகத்தார். ''அண்ணே! நான் அப்படியானவன் தான். அத நான் மறுக்கவே இல்ல. அந்த பயல்கிட்ட மட்டும் சொல்லுங்க, ஏங்கிட்ட வாலை ஆட்ட வரவேணாம்னு, பெறகு ஒட்ட நறுக்கிடுவேன்'' என்று சீறி விட்டு சென்றாராம்.

## செந்தளிப்பு இல்லாத நாயகன்

மரநாயகனுக்கு எதிராக உள்ளும் புறமும் சிலர் இசகு பிசகாகப் பேசிக்கொண்டிருந்தனர்.

முகத்தில் வழமையான செந்தளிப்பு எதுவுமின்றி சோர்ந்து போயிருந்த மரநாயகனோ கிழக்கில் இருந்து வந்த சில பிரதிநிதிகளுடன் மிகவும் சீரியசாக எதைப் பற்றியோ ஆராய்ந்து கொண்டிருந்தார்.

இந்த சமயத்தில்தான் பேனா நண்பரும் அவரை சந்திக்கச் சென்றிருந்தார். வாயிற்படி அருகில் நின்ற அவரது செயலாளர், ''இந்த எடத்துல ஒக்காருங்க, தலவரு ரொம்ப பிஸியா இருக்காரு'' என்றார். பேனா நண்பரும் சரி என்று விட்டு அந்த ஏசி காற்றில் சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்.

திடீரென உள்ளே வந்து அமர்ந்த இருவர் இப்படிப்பேசிக் கொண்டனர். 'அவனவன் எத்தனையோ பொம்பளைங்கள வச்சிக்கிட்டு அமைதியா இருக்கானுங்க. இவரு மேல ஒரு பொம்புள கேஸ இப்படி ஆக்கிட்டானுங்க பாரு'' என்றார்கள்.

## யாரென்று காட்டுறன்.

தேர்தல் நிலைவரங்களால் சோர்ந்து போயிருந்தார் அந்த ஆனந்தமானவர். ''எல்லாமே பொய், வடக்கிலே நடந்தது தேர்தல் அல்ல, அது திருவிழா. வழக்குப் போட்டு ஒரு கை பார்த்தே ஆகுவது'' என புலம்பிக் கொண்டிருந்த அவரின் செய்தியொன்றை பார்த்துவிட்டு, பேனா நண்பர் அவருக்கு தொலை பேசி அழைப்பு ஒன்றை விடுத்தார்.

மறுமுனையில் ஆனந்தமானவரே ரிசீவரை தூக்கி ஹலோ என்றார். பேனா நண்பரோ, ஐயா நான் தான் இந்த பேப்பர்ல இருந்து பேசுறேன்'' என்றார்.

வந்ததே கோபம் அவருக்கு, ''நீங்கள் எல்லாரும் சேர்ந்துதான் என்னைத் தோறகடித்துப் போட்டியள் கொஞ்சம் இருங்கோ, காலம் எல்லாவற்றுக்கும் பதில் சொல்லும். எனது நேர்மைக்குச் சிறந்த பெறுபேறு வெகுவிரைவில் கிடைக்கும் பாருங்கோ, அப்போ, நான் யாரென்று காட்டுறன்'' என்றார்.

பேனா நண்பரோ, ''சரி ஐயா நான் பிறகு கதைக்கிறன்'' என்று சொல்லிவிட்டு போனைக் கீழே வைத்தார்.

## போட்டார் ஒரு போடு

அந்த நாட்டின் தூதுவர் எப்போதும் தமிழ் ஊடகங்களை ஒரு விளாசு விளாசுவது வழமையாகிப் போனது. அதன் உதவித் தூதுவர் தமிழர் என்பதால் தமிழ்ப் பத்திரிகைகளை பார்த்துவிட்டு ஆணிவேறா அக்கு வேறா அந்த நாட்டை பாதிக்கும் செய்திகளை புட்டுபுட்டு வைத்துவிடுவாராம் தூதுவரிடம். அவரும் அதற்கேற்றாற் போல் விளாசித் தள்ளிவிடுவார்.

இப்படியொரு தினத்தில் கலைகளுக்கு சம்பந்தப்பட்ட அந்த இடத்தில் பேனா நண்பர்கள் சிலரை கண்ட அந்த உதவியானவர், ''எழுதுங்கள் அந்த சுதந்திரம் உங்களுக்கு உண்டு. ஆனால், உங்களுக்கு ஏதோ ஒரு அழுத்தம் மட்டும் இருப்பது எமக்கு தெளிவாக தெரியுது'' என்று போட்டாராம் ஒரு போடு.

## யெஸ், யெஸ் தட்ஸ் கரக்ட்

பதவி இருந்தாலும் இல்லாவிட்டாலும் சிலர் தம்மை பெரிய பிரமுகர் என்று காட்டிக் கொள்வதில் பிரியம் பாருங்கோ!

அந்த ம்முன்னாள் யாழ்.எம்.பி, அவரும் அந்த பதவியை விட்டுப்போய் கிட்டதட்ட மூன்று வருடத்துக்கு மேலாகவிருக்கும். இருந்தாலும் எங்கு அரசு சார்பாகவோ வெளிநாட்டு ராஜதந்திரிகள் சார்பாகவோ என்ன நிகழ்வு நடந்தாலும் அந்த ஆள் சேர்ட்டும் சூட்டும் போட்டுக்கொண்டு வரும் பிரமுகர்களை எல்லாம் கண்டு தொட்டதற்கெல்லாம் ''யெஸ், யெஸ் தட்ஸ் கரக்ட்'' என்றெல்லோ விடுது. உந்த ஆளின்ற ஆக்கினை தாங்க முடியாம டக் புக்குனு ராசாவே, துரையே ஆளைவிடு என்று ஓடி விடுராங்களாம்.

## தலைவர் விசுவாசம்

நாடாளுமன்றத்தில் அந்த பொலயின் பிரச்சினை பற்றி ஒத்திவைப்பு விவாதம் கொண்டு வரப்பட்டது. கொண்டு வந்தவர் மலைச் சந்திரன். எப்படியோ இருபகுதியிலும் இதுபற்றி பலர் ஏட்டிக்குப் போட்டியா பேசினார்கள். இறுதியில் அந்த செஞ்சட்டையினர் செய்த ஆர்ப்பாட்டத்தால் சபையே ஒத்திவைக்கப்பட்டது.

ஆனால், பாருங்க அந்த குன்றின் முகத்தார் மட்டும் அன்று சபைக்கே வரவில்லை. அங்க வந்தால் சப்பைக்கட்டு கட்டி விடுவார்கள் என்ற பயம் தான் பாருங்க, அவர் சார்பாக பேச அவரது சகபாடி சிகாமை உசுப்பி விட்டிருந்தார். அவரோ – நுவரெலியாவின் பொலிசாரை நேர்மை, திறம் வாய்ந்தவர்கள் என்று போட்டார் ஒரு போடு.

இதைக்கேட்ட மலைச்சந்திரனின் நண்பர் ஒருவர் சொன்னார், ''பாருங்கையா! உலகமே இந்தபிரச்சினைக்குபொலிசார்தான் காரணம் என்று சொல்லுது. இந்த ஆள் மட்டும் இப்படி ரெக்கார்டையே மறுபக்கம் திருப்பி பேசுறாறு என்றார்! நண்பர் சொன்னார் அதுதான் தலைவர் விசுவாசம்? என்று!


ஊடகமே உலகம்
(வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை)
ஊடக டிப்ளோமா கற்கை நெறி
DIPLOMA IN MASS MEDIA
இக்கற்கைநெறியை மேற்கொண்டு Dip. In. M.M. (Sri Lanka)
DIPLOMA IN BROADCASTING
இக்கற்கைநெறியை மேற்கொண்டு Dip. In. B.C. (Sri Lanka)
சான்றிதழை பெற்றுக்கொள்ளுங்கள்
தபால் மூலம்
6 மாத கால பாடநெறி
தொடர்பு: (011) 4512830
MMIC 50, 2nd Floor, "Colombo Plaza" Galle Road, Wellawatta, Colombo - 06.
Mass Media Institute of Ceylon (Pvt) Ltd.,

மனோதத்துவ வைத்தியம்
(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீர்ழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவ து போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

| கொழும்பில்... | கல்முனையில்.. |
| --- | --- |
| ஜுன் 24 - 28 வரை சந்திக்கலாம்<br>New Ahmed Turist Inn. Bang Bang Building<br>10 - 1/A, Bankshall Street, Colombo - 11.<br>TEl No. 5368426, 368427, Cell. 0722 910796<br>Hot Line: 0777 569205 | ஜூன் 05, 06, ஆம் திகதிகளில் சந்திக்கலாம்<br>T.M.M. பாமசி கல்முனை<br>Tel No. 067 2229329<br>Hot Line: 0777 569205 |
| **வவுனியாவில்...** | **யாழ்ப்பாணத்தில்...** |
| ஜுன் 11, 12, ஆம் திகதிகளில்<br>Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு<br>வவுனியா, Tel No. 024 2222074<br>Hot Line: 0777 569205 | ஜூன் 15 - 20வரை<br>A.S.N. கற்றுலாவிடுதி<br>392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்<br>Hot Line: 0777 569205<br>Tel No. 021 2223181<br>021 222 5399 |

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

STUDY IN INDIA

Engineering, Medicine & Pharamedical
ADMISSIONS 2004 - 05
VINAYAKA MISSIONS'GROUP OF COLLEGES
www.vinayakamissions.com

Vinayaka Missions' is the leader in the field of education for more than two decades running totally 25 Educational Institutions imparting. Medical, Engineering, Management and Computer education, in addition to various other courses.

A.V. INSTITUTE OF TECHNOLOGY (A.V. I. T)
(Approved by AICTE, New Delhi, Affiliated to Anna University)
Paiyanoor, Chennai, TAMIL NADU

B.Eng - 4 Years
* Electronics & Communication Engineering (ECE)
* Electrical & Electronics Engineering (EEE)
* Computer Science & Engineering (CSE)
* Mechanical Engineering (Mech)
Req. Pass in Maths, Physics & Chemistry at GCE A'Level.

V.M College of Pharmacy, Salem, TAMIL NADU
(Affiliated to Tamilnadu Dr.MGR Medical University)

B.Pharm - Bachelor of Pharmacy - 4 Years
Req. Pass in Biology, Physics & Chemistry at GCE A'Level.

Other under graduate courses available in
*Homeopathy & Surgery (BHMS)
* Physiotherapy (BPT)
* Optometry (B.Opto)
* B.Sc Nursing

Contact for more details:-
NN EDUCONSULT
181/1W.A.Silva Mawatha, Colombo-06.
Tel: 011 - 555 88 33 Fax: 011 - 555 88 44
E-mail: nnconsult@sltnet.lk

உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

எப்பேர்ப்பட்ட வியாதியானாலும் சரி, உடனே என்னை வந்து சந்தியுங்கள்

K. சிவசுப்பிரமணியம்
M.I.H.Ind-S.M.P.





எவ்வளவு நாட்பட்ட வியாதியானாலும் சரி, காலதாமதம் செய்யாமல் கீழ்க்கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வரமுடியாது போனால் கடிதமூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்

ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காக்கை வலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு, நரம்புத்தளர்ச்சி, வீரியக்குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதகவலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

RAJA BAJEEKARANA (Rasayana) LEGIUM
ராஜ வஜீகரண (ரசாயன) லேகியம்
(முஸ்லிம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது)





சாலாமிசிரி, பாதாம் பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்துத் தயாரானது. உல்லாச வாழ்விற்கு உறுதுணையானது. ஸ்திரி, புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி, தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி, சுறுசுறுப்பையும், தேகாந்தியையும் உண்டாக்க வல்லது உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச்சூடு தணியும், மூலச்சூட்டைப் போக்கும், இருமல், மார்பு, இடுப்பு வலி, கால், கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும், நீரிழிவு, பிளட் பிரஷர் உள்ளவர்களுக்கும் சிறுவர், சிறுமியருக்கும் சிறந்தது.

நாட்பட்ட பீனிசம், இளைப்பு, இருமல், மூலரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம். பத்தியமில்லை.

500 gram 300/-, 250 gram 150/-
வி.பி.பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.

வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும் வைத்தியரைச் சந்திக்கலாம்.

Ayur Dr. K. Sivasubramaniam, முருகானந்தா வைத்தியசாலை
G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கட், மீன்கடை மேல் (நிலமாடி)
கொழும்பு - 11. Tel: 2384645.

சுடர் ஒளி

மே 31 — ஜூன் 06, 2004

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14. டெலிபோன்: 011—4734401—6
பாக்ஸ் : 011 — 4734404
E-mail: editorial@sudaroli.com

## கவிழ்ப்பாரா டிக்ஸிற்?

இந்தியாவில் மீண்டும் காங்கிரஸ் கட்சி ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. சீக்கியரான மன்மோகன் சிங் புதிய பிரதமராக பதவி ஏற்றுள்ளார்.

அவர் பிரதமராகப் பதவி ஏற்றாலும் பின்னணியில் இருந்து அவரை இயக்கப் போகிறவர் சோனியா காந்திதான். பல எதிர்பார்ப்புக்களுடன் இந்திய மக்கள் புதிய அரசை பதவிக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த நிலையில் ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்தியா எத்தகைய போக்கைக் கடைப்பிடிக்கப் போகிறது என்ற கேள்வி எழுகிறது. புதிய அரசாங்கம் முன்னைய அரசாங்கத்தைவிட சிறிது மென்மையான போக்கைக் கடைப்பிடிக்கலாம் என்றே முதலில் கருத்து நிலவியது.

ஆனால், இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தனது ஐந்து நாள் வாஷிங்டன் விஜயத்தின் போது தெரிவித்த சில கருத்துக்கள் சிறிது சந்தேகத்தை ஏற்படுத்தி இருந்தன. கதிர்காமர் விஷயம் தெரியாமல் கதைக்கிறார் என்று நம்பினவர்களும் உண்டு. விடுதலைப்புலிகள் தலைவர் வே.பிரபாகரனை இந்தியாவுக்கு நாடுகடத்தும்படி கோரிக்கை விடுக்கப்பட்டால் அது இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு அமைந்ததாகவே செயற்படுத்தப்படும் என்று கதிர்காமர் கூறி இருந்தார்.

இந்த நிலையில் புலிகள் மீதான தடை மேலும் இரண்டு வருடகாலத்துக்கு நீடிக்கப்பட்டது.

ஈழத் தமிழர் விவகாரத்தைப் பொறுத்தவரை இந்தியாவில் ஆட்சிக்கு வரும் எல்லா அரசுகளும் ஒன்றுதான் என்று யோசித்துக் கொண்டிருக்க, தற்போது மற்றும் ஒரு அரசியல் நகர்த்தல் இடம்பெற்றிருக்கிறது. பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக ஜே.என்.டிக்ஸிற் நியமிக்கப்பட்டது தான் அது.

டிக்ஸிற்றைத் தெரியாதவர்கள் எவரும் இல்லை. 45 வருடங்களுக்கு மேலாக இந்திய ராஜதந்திரத்துறையில் டிக்ஸிற் சேவையாற்றி வருகிறார். இலங்கை இனப்பிரச்சினையின் மிக முக்கியமான கால கட்டத்தில் 1985 — 89 வரை இலங்கைக்கான இந்தியத் தூதுவராகக் கொழும்பில் கடமையாற்றியவர்.

புலிகளைப் பலவீனப்படுத்துவதற்காக இலங்கை அரச படைகள் வடமராட்சியில் நடத்திய ஒப்பரேஷன் லிபரேஷன், கரும்புலி மில்லர் நெல்லியடியில் நடத்திய முதலாவது தற்கொலைத் தாக்குதல், இலங்கை இனப் பிரச்சினையில் இந்தியாவின் நேரடித் தலையீடு, இந்தியப் படையினர் புலிகளுடன் நடத்திய யுத்தம் எல்லாம் டிக்ஸிற்றின் காலத்திலேயே இடம் பெற்றிருந்தன.

இலங்கையில் இந்தியாவின் நேரடித் தலையீடு காரணமாக இரு நாடுகளுக்கும் இடையில் பெரும் நெருக்கடி உருவாகக் காரணமாக இருந்தவரும் டிக்ஸிற்தான்.

முற்று முழுதாக இந்தியாவின் நலனை கருத்தில் கொண்டு செயற்பட்ட பெருமை டிக்ஸிற்றுக்கு இருந்து வந்தது.

ஆனால், புலிகளின் பலத்தைத் தவறாக எடைபோட்டவரும் அவர்தான். அப்பொழுது பிரதமராக இருந்த ராஜீவ் காந்தியை இலங்கை விவகாரத்தில் தவறாக வழிநடத்தியவரும் அவர்தான். புலிகளின் ஐந்து அம்சக் கோரிக்கைகளை ஏற்க மறுத்து திலீபனின் மரணத்துக்கும் காரணமாக இருந்ததன் மூலம் புலிகளுடன் யுத்தம் ஒன்றுக்கு இந்தியாவை இட்டுச் சென்றவரும் அவர்தான்.

இதன் காரணமாக டிக்ஸிற் இலங்கையில் மட்டும் அல்ல இந்தியாவிலும் அப்பொழுது சர்ச்சைக்குரிய நபராகக் கருதப்பட்டார்.

அப்பொழுது பிரதித் தூதராக இருந்த (தற்போது இங்கு தூதுவர்) நிருபம் சென்னுடனும் டிக்ஸிற் முரண்பட்டுக் கொண்டார்.

இப்படியான டிக்ஸிற்தான் இந்திய உபகண்டத்தின் பாதுகாப்புத் தொடர்பான விடயங்களை இந்தியப் பிரதமரின் சார்பில் கையாளப் போகிறார். தாம் ஒரு சுங்கானைப் புகைத்து முடிப்பதற்கிடையில் புலிகளின் கதை முடிந்து போகும் என்று அன்று சொன்னவர் டிக்ஸிற் என்பதை எவரும் சுலபமாக மறந்து விடமுடியாது.

வடக்கு, கிழக்குக்கு இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு வழங்கக் கூடாது: சமாதானப் பேச்சுக்களில் இந்தியாவின் பங்களிப்புத் தேவை என்ற கோரிக்கை தென் இலங்கையில் அதிகரித்து வரும் வேளையில் இந்தியப் பிரதமரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக ஜே.என்.டிக்ஸிற் நியமிக்கப்பட்டிருப்பது பலரையும் சிந்திக்க வைக்கிறது.

தற்போதைய ஓரளவு சுமுகமான சூழ்நிலையை டிக்ஸிற் கவிழ்க்க முயல்வாரானால் கடந்த காலங்களில் இலங்கை விவகாரங்களில் தாம் படித்த பாடங்களை அவர் மறந்துவிட்டார் என்றே கருத வேண்டி வரும்.

# சந்திரிகாவின் அரசியல் சதுரங்கம் நெருக்கடிக்குள்!

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கம் தனது இரண்டு மாதங்களைப் பூர்த்தி செய்வதற்கு முன்னரே கடுமையான சவால்களை சந்திக்கத்தொடங்கிவிட்டது. இந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலம் இன்னும் எத்தனை வாரங்களோ எத்தனை மாதங்களோ என்றே மக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் இருபிரதான கட்சிகளான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி ஆகியவற்றுக்கிடையிலான கருத்து வேறுபாடுகள் சீறிச்சினக்கும் கட்டத்திற்கு வந்துள்ளன. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இந்த அரசாங்கத்தைக் காப்பாற்றும் பகீரதப் பிரயத்தனத்தில் தன்னை ஈடுபடுத்தியுள்ளார்.

விரக்தியும் சோர்வும் ஜனாதிபதியை ஆட்கொண்டுவிட்டனவோ என்று எண்ணுமளவுக்கு அவரது பகீரதப் பிரயத்தனத்தில் சாண் ஏற முழம் சறுக்கும் நிலையே எஞ்சுகிறது.

### இடியப்பச் சிக்கலுக்குள் ஜனாதிபதி

சமாதான முயற்சிகள் ஆபத்துக்கு உட்படுமோ என்ற பேரச்சம் நாட்டு மக்களை பீதிக்குட்படுத்தியுள்ளது. ஜே.வி.பி காரர் எள்ளளவும் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைக்க மாட்டார்கள் என்கின்ற ஆபத்தை ஜனாதிபதி எதிர்கொள்கிறார். நாடாளுமன்றத்தைக் கூட்டி பெரும்பான்மையை நிரூபிப்பதில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய இரண்டு கட்சிகளையும் எவ்வாறு கையாள்வது என்ற சூழ்ச்சிகளையும், யுக்திகளையும் வகுத்து வழி நடத்தும் களைப்பும், சலிப்பும் தருகின்ற வேலைகளினூடாகவே ஜனாதிபதி நகர்கிறார்.

பல்லாயிரம் பட்டதாரிகளை பொதுநிர்வாகத்துறைக்கு உள்வாங்குவதற்கான தேர்தல் வாக்குறுதியையும் விவசாயத்துறையில் அதிகளவு செலவு செய்யப்போவதாகச் சொல்லப்பட்ட தேர்தல் வாக்குறுதியையும் நிறைவேற்றுவதற்கான நிதியை பெற்றுக் கொள்வதற்கு பல அரச நிறுவனங்களின் பொதுச் சொத்துக்களையும் தனியாருக்கு விற்று அவற்றை தனியார் மயப்படுத்த வேண்டியுள்ள நிலையிலுள்ளார் ஜனாதிபதி.

ஆனால், அதே தேர்தல் விஞ்ஞாபனத்தில் தேசிய வளங்களையும் அரச நிறுவனங்களையும் தனியார் மயப்படுத்துவது நிறுத்தப்படும் என்ற வாசகம் இடம் பெற்றுள்ளது. இதில் ஜே.வி.பி மிகவும் கடுமையாக நிற்கிறது.

இவற்றுக்கு மத்தியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் --இப்போதைக்கு உள்வீட்டுப் பிரச்சினைகள் போல — எழுந்துள்ள நெருக்கடிகளுக்கும் ஜனாதிபதியே முகம் கொடுத்து தீர்வுகாணவேண்டியவராக இருக்கிறார். அதுமட்டுமன்றி அரசியல் நிர்ணயசபை அமைத்தல், நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமையை ஒழித்து அதிகாரமுள்ள பிரதமர் பதவியை உருவாக்கி நாடாளுமன்றத்துக்கு நிறைவேற்று அதிகாரத்தை பாரப்படுத்துதல், தற்போதுள்ள தேர்தல் முறைமையை மாற்றுதல் போன்ற பல்வேறுபட்ட சட்டரீதியான செயற்பாடுகளை நோக்கியும் அதீத கவனம் செலுத்த ஜனாதிபதி விரும்புகிறார்.

இது தொடர்ந்தும் அவர் அதிகாரமுள்ள ஒரு 'ராஜ' பதவியில் வீற்றிருப்பதற்கான முயற்சி! சாதாரண முயற்சி அல்ல, மிகப் பாரிய தடைகள், சவால்கள் நிறைந்த முயற்சி! அயல் நாட்டிலுள்ள இத்தாலிய இந்தியரான சோனியா தன்னைத் துரத்திக் கலைத்த இந்தியப் பிரதமர் பதவியை, தூர விரட்டிய கதையை வாசகர்கள் ஞாபகப்படுத்தினால் இரு நாடுகளினதும் நடைமுறை அரசியல் யதார்த்தத்தின் இடைவெளியை சரியாகப் புரிந்து கொள்ள முடியும்.

### சமாதானத்துக்கு ஆப்புவைக்கும் ஜே.வி.பி.

தமிழீழவிடுதலைப் புலிகளுடன் ஜனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதில் ஜே.வி.பி மிகப் பெருந்தடையாக இருக்கிறது.

விடுதலைப் புலிகள் தமிழ்மக்களின் ஏகப்பிரதி நிதிகள் அல்ல என்றும் விடுதலைப் புலிகள் சமர்ப்பித்துள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைக்கான ஆலோசனைகளை ஏற்கமுடியாது என்றும் அவற்றின் அடிப்படையில் பேச்சுக்களை நடத்த முடியாது என்றும் ஜே.வி.பி கூறியுள்ளது. அது மட்டுமன்றி விடுதலைப்புலிகளுடன் மட்டுமல்ல எனைய எல்லாக்கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும் என்றும் ஜே.வி.பி தெரிவித்துவிட்டது.

தனது நிலைப்பாட்டின் தேவைப்பாட்டை வலியுறுத்தி அக்கட்சி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட பல கட்சிகளையும் சேர்ந்த தலைவர்களையும் சந்தித்து உரையாடியுள்ளது. தினேஷ் குணவர்த்தனா, டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களையும் ஜே.வி.பி சந்தித்து தனது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகள், முன்னைய ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போது கடைப்பிடிக்கப்பட்ட விடயங்களையே மீளவும் வலியுறுத்தியிருந்தனர்.

இவற்றையெல்லாம் நேரடியாக தமக்கோ நோர்வேப்பிரதிநிதிகளுக்கோ எழுத்து மூலம் உறுதிப்படுத்தித் தரும்படியும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதிலும் தொடர்வதிலும் தமக்குள்ள நம்பிக்கையை இது வலுப்படுத்தும் என்றும் விடுதலைப் புலிகள் கேட்டிருந்தனர்.

ஜே.வி.பி வெளிப்படுத்தியுள்ள அதன் நிலைப்பாட்டினால் இவற்றை ஜனாதிபதி எழுத்து மூலம் விடுதலைப்புலிகளுக்கு வழங்குவதில் தடங்கல் எழுந்துள்ளது. அரசாங்கத்தின் பிரதான பங்காளிக்கட்சியான ஜே.வி.பி. விடுதலைப்புலிகள் எதிர்பார்க்கும் சகல அடிப்படைகளையும் நிராகரிப்பதன் மூலம் பேச்சுவார்த்தை ஆரம்பமாவதை முற்றாகத் தடுக்கவே முயற்சிக்கிறது என அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள்.

### றிவேஸ் கியரை மாற்றுவாரா ஜனாதிபதி?

ஏற்கனவே நோர்வேயின் சமாதானத் தூதுவர்களான எரிக்சொல்ஹெய்ம், நோர்வே பிரதி வெளிநாட்டமைச்சரான விதார் ஹெல்கிசின் ஆகியோர் இம்முறை சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதே பெரும் சிரமமாகவிருக்கும் என்பதை தெளிவாகச் சுட்டிக் காட்டியிருந்தனர்.

அவர்களையடுத்து நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன் அவர்களும் கொழும்பில் ஜனாதிபதி உள்ளிட்ட பல அரசியல் தலைவர்களையும் வன்னியில் விடுதலைப்புலிகள் தலைவர் வே.பிரபாகரன் அவர்களையும் சந்தித்து சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான 'இலகுபடுத்தல்' (Facilitation) முயற்சிகளை மேற்கொண்டிருந்தார்.

ஆனால், ஜே.வி.பியின் அழுத்தம் காரணமாக ஜனாதிபதி 'றிவேர்ஸ் கியர்' (Reverse gear) போட்டுவிட்டு பின்னோக்கிச் செல்லத் தயாராகிவிட்டாரோ என்ற ஒரு தோற்றப்பாடு எழுந்துள்ளது.

பேச்சுக்களை ஆரம்பிப்பதிலுள்ள முட்டுக்கட்டைகளை அகற்றுவதற்கு நோர்வே விசேட தூதுவர் கடந்தவாரம் கொழும்புக்கும் வன்னிக்குமிடையில் தனது தூதுவிடயங்களை மேற்கொண்டு முயற்சித்தார்.

### படைக்கு ஆட்சேர்க்கும் ஜே.வி.பி

'சமாதானப் பேச்சுக்கள் தொடங்குமா? தொடங்காதா என்பது ஒரு புறமிருக்க, மிகவும் தீர்க்கமாகச் சொல்லக்கூடிய விடயமொன்றும் உள்ளது.

ஜனாதிபதியிடம் காணப்படும் பொருளாதார, அரசியல் அட்டவணைகளின்படி அவர் இப்போதைக்கு ஒரு போர் பற்றிச் சிந்திக்க விருப்பமில்லாதவராகவே இருக்கிறார்.

அவரது விருப்பத்தையும் மீறி சூழ்நிலை நிர்ப்பந்தித்தால் சந்திரிகா போரைத் தொடங்குவார். ஆனால், அப்போர் புலிகளை அழிக்கும் போராக இருக்காது.

இது ஜே.வி.பியை வளர்த்துவிடும் போராகவே இருக்கும் என அரசியல் திறனாய்வாளர் ஏற்கனவே தெரிவித்துவிட்டனர். தற்போது படைக்கு ஆட்சேர்க்கும் முழுமுயற்சியில் ஜே.வி.பி ஈடுபடுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

### ஹக்கீமின் அவலநிலையும் உடையும் காங்கிரஸும்

குமாரி குரே– ரவூப் ஹக்கீம் விவகாரம் இலத்திரனியல் ஊடகங்களிலும் அச்சு ஊடகங்களிலும் ஏறுக்கு மாறாக, எதிரும் புதிருமாக, தாறு மாறாக வெளியாகியபோது 'இந்தப் பூனையும் பால் குடிக்குமா?' என்று கேட்கத் தோன்றியது.

பெண் விவகாரம் என்பதால் அரசியல் ஆர்வமற்ற பலரும் இவ்விகாரத்தில் கடும் அக்கறை காட்டினர். ஆனால் இவ்விவகாரத்தில் அரசியல் பின்னணி கையாளப்பட்டுள்ளதாக நடுநிலையான அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

அமைக்கப்பட்டுள்ள புதிய அரசாங்கத்துக்கு ஆதரவாக ரவூப் ஹக்கீம் தனது முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை வழிநடத்தியிருப்பாராகில் குமாரி குரே – ரவூப் ஹக்கீம் விவகாரம் இவ்வளவு தூரம் ஊடகங்களில் அம்பலம் பெற்றிருக்கமாட்டாது.

புதிய அரசாங்கத்துக்கு தனது கட்சியின் ஆதரவை ஹக்கீம் நிபந்தனையற்று நல்கியிருப்பாராகில் அரச சார்பு ஊடகங்கள் ஹக்கீம் தொடர்பாக தெரிவித்த விடயங்கள் அவ்வாறு வெளிக்கொணரப்படாமல் பூசி மெழுகப்பட்டிருக்கும் என்று அரசசார்பு இலத்திரனியல் ஊடகமொன்றில் நிகழ்ச்சி ஒன்றில் கருத்து வெளியிட்டார் கவிஞர் மருதூர்க்கனி.

மேலும் குமாரி குரே என்ற பெண் விவகாரத்துடன் மேலும் ஒரு இடி, ஹக்கீம் மீது விழுந்துள்ளது. முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.நஜீப், றிசாட் பதியுதீன், ஹுசைன் பைலா, ஏ.எம். இஸ்முல்லா ஆகியோர் கட்சியிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளனர் என்று கட்சியின் உயர்பீடம் என்று சொல்லப்படும் 'ஹக்கீமின் வட்டம்' தீர்மானித்த பின்பு, அவர்கள் நால்வரும் இம்முடிவுக்கு எதிராகச் செயற்படவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஹக்கீமின் தலைமையை நிராகரிக்கின்றனர். குமாரி விவகாரத்தை ஹக்கீம் மூடி மறைக்க முயல்வதாகவும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

### பேச்சுப்பல்லக்கு தம்பி கால்நடை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அடிக்கடி உடைந்து உடைந்து தூளாகிச் செல்கிறது.

இவ்விடயத்தில் மிகவும் கவலையடைந்தவராகவிருக்கும் கொழும்பு மாநகரசபையின் பிரதி முதல்வர் அஸாத் அலி அனைத்து முஸ்லிம் அரசியல் சக்திகளையும் இணைத்து முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு (MNA) என்ற பெரும் முஸ்லிம் சக்தியை உருவாக்க தான் பாடுபட்டு தோற்ற கதையை சோகத்தோடு தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு தனக்கேயுரிய சுவாரஸ்யமான 'பிள்ளைத் தமிழில்' விவரித்தார்.

அவர் அதற்கு அப்பாலும் சென்று முஸ்லிம் தேசியக் கூட்டமைப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசியல் ரீதியில் கைகோத்து, தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை வடக்கு – கிழக்கு என்ற பிராந்திய ரீதியில் வென்றெடுக்க வேண்டும் என்ற தனது கனவுகளையும் விபரித்தார்.

ஓர் இளம் முஸ்லிம் தலைவர் வெளிப்படையாகவும் நேர்மையாகவும் சூதுவாதற்று பேசும் ஆற்றலுள்ளவர் இவ்வாறான முற்போக்கான சிந்தனைகளைக் கொண்டிருப்பது பாராட்டத்தக்கதுதான்.

-யாழ். ஆத்மா-

ஆனால், தத்தமது அரசியல் சுயநலனுக்காக சிறுபான்மை மக்களின் அரசியல் கட்சிகளையும் அரசியல் ஆற்றலையும் துண்டு துண்டாக உடைக்கும் சிங்கள அரசியல் தலைமைகளின் சூழ்ச்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் காலமும் அதற்கான அரசியல் வேலைத்திட்டமும் வகுக்கப்படாதவரை இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் முஸ்லிம்களின் நிலை 'பேச்சு பல்லக்கு தம்பி கால்நடை' என்பதாகவே இருக்கும்.

### மீனுக்கும் தலையும் பாம்புக்கு வாலும் காட்டும் ஆறுமுகன்


2005ஆம் ஆண்டு டிசம்பருடன் அல்லது அதற்கு சற்று முன்பாக ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதுவரை ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா அவர்களுக்கும் 'தலையையும் வாலையும்' காட்டும்

(4A பக்கம் பார்க்க...)



# ஆஸி. சுற்றுலாவில் முரளி கலந்து கொள்வாரா?


இலங்கை கிரிக்கெட் அணி எதிர்வரும் ஜுலை மாதம் அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுலா மேற்கொள்ளவுள்ளது. இலங்கை அணியின் இந்தச் சுற்றுலாவை விட சாதனை வீரர் முரளிதரன் அவுஸ்திரேலிய தொடரில் கலந்து கொள்வாரா மாட்டாரா? என்பதே தற்பொழுது பெரும் கேள்வியாக மாறியுள்ளது.



முரளிதரன்

அனைத்து கிரிக்கெட் ரசிகர்களின் கவனத்தையும் ஈர்த்துள்ள விடயம் இது. முரளிதரன் இலங்கை அணியின் ஒரு வீரர் என்ற போதிலும் கிரிக்கெட் உலகைப் பொறுத்தவரை அவர் ஒரு பொக்கிஷம். அவர் குறைந்தளவு டெஸ்ட் ஆட்டங்களில் ஆடி அதிக டெஸ்ட் விக்கெட்டுக்களை வீழ்த்தியுள்ளதுடன் இலங்கை அணிக்கு சர்வதேச கிரிக்கெட் அரங்கில் ஒரு தனியிடத்தை பெற்றுக் கொடுக்கவும் முக்கிய காரணமாக அமைந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவ்வாறான ஒரு கிரிக்கெட் பொக்கிஷம், எமது நாட்டுக்கு மாத்திரமன்றி ஆசிய பிராந்தியத்துக்கே பெருமை தேடித் தந்த ஒரு வீரர் அந்நிய மண்ணில் அவமானப்படுவதும் மனதளவில் அவர் துன்புறுத்தப்படுவதும் ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகும். முரளிக்கு ஆஸி. மண்ணில் அவமரியாதைகள் இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுவதால் முரளி அந்த தொடரை பகிஷ்கரிப்பார் என முன்னரே எதிர்பார்க்கப்பட்டது. அதற்கமைய முரளியும் தான் அவுஸ்திரேலியா சென்றுவிளையாட ஆர்வமில்லை என அறிவித்திருந்தார். இதற்கு ஸ்ரீலங்கா கிரிக்கெட் நிறுவனமும் (இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை) விளையாட்டுத்துறை அமைச்சும் பூரண ஆதரவு தெரிவித்திருந்தன. "முரளிதரன் ஒரு தேசிய சொத்து



விளையாட்டுச் செய்திகள்!

எனவே அவர் அந்நிய மண்ணில் அவமானப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்! எனவே முரளிதரன் ஆஸி சென்று விளையாட விரும்பாவிட்டால் அவரை நாம் வற்புறுத்தப் போவதில்லை. எனினும் முரளியிடம் இருந்து இவ்விடயம் தொடர்பாக உத்தியோகபூர்வமாக எவ்வித வேண்டுகோளும் இதுவரை எமக்கு கிடைக்கவில்லை.'' என ஸ்ரீ லங்கா கிரிக்கெட் சபைத் தலைவர் மொஹான் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் முரளிதரன் அவுஸ்திரேலியா வந்து ஆட வேண்டும் என முரளியின் நேரடி போட்டியாளரான ஆஸி. அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் வேண்டுகோள் விடுத்துள்ளார். அத்துடன் ஆஸி அணியின் உப தலைவர் கில் கிறிஸ்ட் "முரளி ஒரு சாதனை வீரர் அவர் ஆஸி வந்து நிச்சயம் விளையாட வேண்டும்'' என தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஆஸி அணியின் முன்னாள் தலைவர் ஸ்டீவோ, மார்க்வோ, இயன் ஹீலி, மார்க் டெய்லர் அத்துடன் தற்போதைய ஆஸி அணித் தலைவர் ரிக்கி பொன்ரிங், இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் கிராஹம் தோர்ப் உள்ளிட்ட பல மேற்குலக கிரிக்கெட் வீரர்கள் "முரளி அவுஸ்திரேலியா சென்று விளையாட வேண்டும். அது அவரது சாதனையை மேலும் வலுப்படுத்தும்'' என முரளிக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இவர்களின் குரல்,வெளிப்படையாகப் பார்க்கும் போது முரளிக்கு ஆதரவு தெரிவிப்பது போல் இருந்தாலும் இது முரளியை பழிவாங்கும் சூழ்ச்சியாகக் கூட இருக்கலாம் என ஆஸிய பிராந்திய கிரிக்கெட் விற்பன்னர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். காரணம் முரளி இந்தியா, அவுஸ்திரேலிய அணிகளுக்கெதிராகவே குறைந்தளவு விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். எனவே முரளி உலக சாதனையை முறியடித்தபின் செல்லும் முதலாவது வெளிநாட்டு சுற்றிலாவில் முரளிதரனின் பந்து வீச்சை ஆஸி வீரர்கள் எடுபடாமல் செய்து விட்டால் ஆஸி வீரர்களால் முரளி பலவீனமான ஸிம்பாப்வேக்கு எதிராகவே சாதனையை முறியடித்தார் என முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டை உறுதிப்படுத்தலாம் அல்லது முரளியின் பந்து வீச்சை சட்டரீதியற்றது என ஆஸி நடுவர்கள் அறிவிக்கலாம். இவ்வாறான நோக்கங்கள் இந்த அமைப்பினூடே இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இதற்காக இலங்கை அணியுடனான தொடருக்கு ஆஸி.யில் வேகப் பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளங்கள் அமைக்கப்படலாம்.

எனினும் ரவி சாஸ்திரி கூறியது போல முரளிதரன் என்பவர் கண்ணாடியிலும் பந்தை சுழலச் செய்யக் கூடியவர். எனவே, ஆடுகள மாற்றங்கள், மோசமான ரசிகர்களின் கூச்சல்கள் ஒன்றும் அவரிடம் எடுபடாது. எனவே முரளிதரன் ஆஸி வீரர்களின் குற்றச்சாட்டுக்கள், சூழ்ச்சிகள் என்பவற்றை முறியடிக்க அவுஸ்திரேலியா சுற்றுலாவில் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவேதான் அவர் இதுவரை ஆஸி



ஷேன் வோர்ன்

சுற்றுலாவைப் பகிஷ்கரிப்பது தொடர்பாக உத்தியோகபூர்வமாக கோரிக்கை எதனையும் முன் வைக்கவில்லை. முரளி தன் மீது சோதனைகள் கூட, கூட தான் தனது விக்கெட்டு வீழ்த்தும் வேகத்தை அதிகரித்துச் சென்றார். எனவே அவுஸ்திரேலியாவில் முரளியை ரசிகர்கள், வீரர்கள் சீண்டினால் அவரது வேகம் மேலும் அதிகரிக்குமே தவிர குறையாது. எனவே முரளி ஆஸி சுற்றுலாவில் கலந்து கொள்வது இலங்கைக்கு பெரும் சாதகமாகவே அமையும்.

## உலகம் கொண்டாடும் சுற்றுச் சூழல் தினம்




World Environment Day - June 05

சுற்றுச் சூழல் பற்றிய மக்களின் விழிப்புணர்வையும், அரசுகளின் கரிசனையையும், செயற்பாட்டையும் வேண்டி ஜுன் 5 ஆம் திகதியை உலக சுற்றுச்சூழல் தினமாக (World environment Day) ஐக்கிய நாடுகள் சபை கொண்டாடிவருகிறது.

ஒவ்வொரு வருடமும் அக்காலப்பகுதியில் முன்னுரிமை பெறவேண்டிய சூழற் பிரச்சினைகளை அடையாளங் கண்டு கவனம் கொள்கிறது. 1970 களில் இருந்த கடந்த மூன்று தசாப்த காலத்தில் கடல்களிலும், சமுத்திரங்களிலும் சூழல் மாசுபாட்டால் ஒட்சிசன் பற்றாக்குறைவு ஏற்பட்டு உயிர்விட்ட 'இறந்த வலயங்கள்' (Dead Zones) எண்ணிக்கையிலும் பரப்பளவிலும் அதிகரித்திருப்பது தெரியவந்திருக்கிறது. அதையடுத்து இம்முறை 'கடல்களும் சமுத்திரங்களும்' கருத்தில் எடுக்கப்பட்டுள்ளன. தேவை! கடல்களும் சமுத்திரங்களும்: பிணமாகவா — உயிருடனா? (Wanted! Seas and Oceans: Dead or Alive?) என்பது கருப்பொருள் ஆகியுள்ளது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் துறைகளில் ஒன்றாகிய சூழல் பாதுகாப்பு பிரிவும் ஜுன் 5 ஆம் திகதியை மேற்குறிப்பிட்ட கருப்பொருளுக்கமைய உலக சூழல் தினமாகவும், ஜுன் 1— 30 வரையான காலப்பகுதியை சூழல் விழிப்புணர்வு மாதமாகவும் கொண்டாடத் தீர்மானித்துள்ளது.

## உறவு



-புதுவை இரத்தினதுரை

காதலியின் இடுப்புத் தசை கிள்ளும் விரலாய்
கரைவந்து தொட்ட அலைகள்
நோவின்றி மெல்லியதாய் நுள்ளின.
ஆரவாரமற்ற குஞ்சு அலைகளானாலும்
முத்தத்தால் சிந்திய வாய்நுரை
கரையெங்கும் பூத்திருந்தது.
பெருங்கடல் பெய்த சிறுநீர் வழிந்து
"வட்டுவாகாலுக்கு" வெளியே கசிந்து
கடலெனும் பெயருடன் நந்திக்கடல்.
கசிவு நீரெனினும் எத்தனை அழகு
இரவின் மோனத்தில்
நந்திக்கடல் மெய்புளகமெய்தும் மேனிபெறும்.
நிலவின் சௌந்தர்யஜொலிப்பில்
அழகின் ஆட்சியே கடலில்.
நட்சத்திரங்களை எண்ணிக் கணக்கிட்டபடி,
வந்து தழுவும் குளிர்காற்றை சுகித்தபடி,
குரலெழுப்பிப் போகும் இரவுக் குருவிகளை
ஏக்கத்துடன் பார்த்தபடி
கரையிலிருப்பது எத்தனைசுகம்.
நான்போகும் நாட்களில் எவருமிரார்
தன்னந்தனியாக நான் மட்டுமே.
ஒருவனே இத்தனையழகையும் எப்படித்தின்பது?
இன்றுமட்டும் அதிசயமாய் இன்னொருவன்
கையில் வலையுடன்.
அவனுக்கு நான் அதிசயமானேன்.
எட்டநின்று யாரெனவினாவிக் கிட்டவந்தான்.
பயந்துபோனேனெனச் சிரித்தான்.
எத்தனை அழகிந்தக் கடலென்றேன்
விசித்திரமாய் என்னை விழித்தான்.
அழகுபார்க்கும் நிலையிலா உலகுளது என
சலிப்பது போலிருந்தது பார்வை.
நண்டு பிடிப்பேன்,
சிலநாளில் இறால்படும்
காலையில் வந்து குண்டிகழுவுவேன்.
இதிலென்ன அழகு என்பதுபோல
நடந்து கடலில் இறங்கினான்.
வீடு திரும்ப எழுந்து பார்த்தேன்
அழகு மீதான எந்தச் சிலிர்ப்புமின்றி
வலையும் கையுமாக கடலில் அவன்.
நந்திக்கடல் அவனுக்கு மகள்
எனக்குக் காதலி.
ஒரே பெண்ணானாலும் உறவுவேறு
நடந்தேன்.

## சந்திரிகாவின் அரசியல் சதுரங்கம்..

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

பாணியில் காலத்தை கழித்துவிடலாம் என்று ஆறுமுகன் தொண்டமான் கருதுகிறார் போலும்.

அரசாங்கத்துக்கு ஆதரவு கொடுப்பது தொடர்பாக ஆறுமுகன் பல கட்டங்களில் ஜனாதிபதியின் நட்புவட்டாரங்களுக்கூடாக ஜனாதிபதி தொடர்பு கொண்டு பேசிய சந்தர்ப்பங்களில் எல்லாம் முன்நிபந்தனையுடன் அரசாங்கத்தை ஆதரிக்கத் தயாராக இருந்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் வரை தற்போதய அரசாங்கத்தைக் கவிழ்க்கும் முயற்சிகள் எதனையும் தான் மேற்கொள்வதில்லை என்று ஆறுமுகன் தொண்டமானுக்கு ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லா பிரேரணையை ரணில் கொண்டுவரும் தருணம்வரை சில முன்நிபந்தனைகளுடன் அரசாங்கத்தை ஆதரிக்க தான் தயாராக விருப்பதாக ஆறுமுகன் ஜனாதிபதிக்கு அறிவித்துள்ளாராம். இவ்விடயத்தில் ரணில் அவ்வளவு சீரியசாக இல்லை எனவும் தெரியவருகிறது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்கும் யோசனையைக் கைவிடல், தொகுதிவாரித் தேர்தல் முறைமையை இல்லாமல் ஒழிக்கும் திட்டத்தை கைவிடல் என்பவற்றுடன் மேல் கொத்மலைத் திட்டத்தையும் கைவிடவேண்டும் என்று ஆறுமுகன் ஜனாதிபதிக்கு முன் நிபந்தனைகள் விதித்துள்ளதாகவும் அறியவருகிறது.

இந்நிபந்தனைகள் தொடர்பாக ஆறுமுகன் நெகிழ்ச்சியைக் கடைப்பிடித்து படிப்படியாக அவற்றை கைவிடும்வரை ஜனாதிபதி பேசிக்கொண்டிருப்பார் போலத்தான் தெரிகிறது.

### அமுனுகம —ஜெயசுந்தர முரண்பாடு

புதிய நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகமவுக்கும் திறைசேரிச் செயலாளர் பி. ஜெயசுந்தரவுக்குமிடையில் தனியார்மயப் படுத்தல் விவகாரம் தொடர்பாக பலத்த சர்ச்சைகள் எழுந்துள்ளதாகவும் இவ்விடயம் தொடர்பாக நிதியமைச்சர் ஜனாதிபதிக்கு முறையிட்டுள்ளார் என்றும் செய்திகள் கசிந்துள்ளன.

புதிய வேலைவாய்ப்புகள், திஸநாயக்க திர சம்பள, ஆளணி மீளமைப்பு ஆணைக் குழுவின் சிபாரிசுகளின் நடைமுறைப்படுத்துகை என்பன போன்ற திறைசேரியை விழுங்கும் நடவடிக்கைகள் இன்னமும் காத்திருக்கின்றன.

இதில் திஸதேவேந்திர ஆணைக்குழுவின் சிபாரிசுகளுக்கு உலக வங்கியின் அனுசரணையும் வழிகாட்டுகையும் உள்ளதனால் அவ்வளவு பிரச்சினைகள் இருக்காது.

ஆனால், தேர்தல் விஞ்ஞாபனத்தின்படி ஏறத்தாழ முப்பதினாயிரம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு என்ற திட்டத்துக்கும் விவசாய திட்டங்களுக்கும் தேவைப்படும் நிதி தனியார் மயப்படுத்தல் மூலமே பெறப்பட வேண்டியுள்ளதாக தெரிகிறது.

இனி தனியார் மயப்படுத்தல் விவகாரங்களை ஜே.வி.பி ஊதி ஊதி மூட்டத் தொடங்கும் என எதிர்பார்க்கலாம்.

### கொதிக்கும் ஜே.வி.பி

உப சபாநாயகர் தெரிவில் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்காரர்கள் ஐக்கிய தேசியக்கட்சியுடன் தமக்குத் தெரியாமல் உடன்பாடு கண்டமை பிழையாகும் என்று தெரிவித்துள்ள ஜே.வி.பி காரர்கள் இனிமேல் மிகத் தீவிரமாக அனேகமாக எல்லாவிடயங்களிலும் குழப்பங்களை தூண்டுவார்கள் என்றே எதிர்பார்க்கலாம்.

தாம் பொறுப்பேற்ற அமைச்சுக்களுக்கான செயலாளர் நியமனங்களில் ஜனாதிபதியின் தலையீட்டையும் ஜே.வி.பி விரும்பவில்லை.

### அடுத்த தேர்தல்

இனப்பிரச்சினை விவகாரம் போன்ற முக்கிய விடயங்களில் மிகவும் தளம்பலான முடிவுகளோடு, விரைவில் எதிர்பார்க்கப்படும் மற்றும் ஒரு பொதுத்தேர்தலை நோக்கியே இலங்கைத் தீவு சென்றுகொண்டிருக்கிறது. சிலவேளைகளில் மறைமுகமாக வெளிநாட்டுத் தலையீடுகள் இந்த நியதியைமாற்றக்கூடும்!

# ஆதரவற்ற சிறுவர் சீரழியும் அபாயம்

கடந்த கால யுத்தத்தின் கொடூரத்தால் பெற்றோரையும், உற்றோரையும், இழந்து தனிமைப்படுபவர்கள் சிறுவர்களே.

இவ்வாறு அநாதரவான நிலைமையில் தவித்தவர்களை அடைக்கலம் கொடுத்த உறவினர்கள் துன்புறுத்தி சித்திரவதை செய்ததையும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாக்கியதையும் நாம் நன்கு அறிந்திருக்கின்றோம்.

இத்தகைய வேதனையைத் தாங்க முடியாது வீட்டை விட்டு வெளியேறிவர்களும் அநாதரவாக விடப்பட்டவர்களும் வெளி நபர்களினால் துன்புறுத்தப்பட்டு பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதையும் நாம் கண் கூடாக் கண்டிருக்கின்றோம்.

இவையெல்லாம் வேண்டாம். சிறுவர் இல்லங்களில் சேர்ப்போம் என்றால் அங்கும் அதே தொல்லை. சிறுவர்களை பராமரிக்கவென இல்லங்களை அமைத்து வெளி நாட்டு உதவி பெற்று வழிநடத்துவோர் சிலர் படுத்தும்பாடு சொல்லில் அடங்காது.

நடவடிக்கை எடுப்போம் என்றால் அத்தகைய இல்லங்களைப் பொறுபேற்று நடத்துவதற்கு முன்வருவோர் யார் என்பதே தீர்வு காணப்படாத ஒன்றாகவே உள்ளது.

திருகோணமலையில் ஆதரவற்றதாகக் கூறப்பட்ட மூன்று சிறுவர்களைச் சந்தித்ததன் பேரில் பல விடயங்கள் தெரியவந்தன.

கடந்த 18ஆம் திகதி மூன்று சிறுவர்கள் அநாதரவான நிலையில் திருகோணமலை மாவட்ட ரெலோ உறுப்பினர்களால் பிடிக்கப்பட்டு விசாரணையின் பின்பு மூன்றாந்தரப்பு மூலம் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களது வாழ்க்கை மற்றும் குடும்பப் பின்னணி மிகவும் சோகமானதென்பதை உணரும் போது மிக வேதனையாகவுள்ளது.

திருகோணமலையில் நிலக்கடலை, பற்றிஸ் விற்றும் கூலி வேலை செய்தும் இவர்கள் வயிற்றைக் கழுவியுள்ளனர்.

வெலிக்கடைத் தியாகிகள் அரங்கு, முற்றவெளி மைதானம், பாழடைந்த மண்டபம் ஆகிய இடங்கள் இவர்களது தங்கலுக்கான இல்லங்களாக இருந்துள்ளன.

மேற்படி மூன்று சிறுவர்களில் இருவர் வன்னிப் பகுதியைச் சேர்ந்தவர்கள். ஒருவர் திருமலைப் பகுதியைச் சேர்ந்தவர். சந்தர்ப்பம் சூழ் நிலை இவர்களை நண்பர்களாக்கியது.



இவர்களது பசிக் கொடுமையை வாய்ப்பாகக்கொண்டு, பணம், உணவைக் காட்டி பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் பாலியல் துஷ்பிரயோகம் செய்த கொடுமையையாரிடம் சென்று முறையிடுவது?

பாலியல் நடவடிக்கைக்காக பலமுறை பலாத்காரம் பிரயோகித்தும் இவர் தப்பித்துக் கொண்டனர். பாவம் மற்றைய சிறுவன் இரண்டு தடவைகள் பலியாகி விட்டான்.

பெரும்பான்மை இனத்தின் இந்த மிருகத்தனமான செயலை ஏனைய இனத்தவர்கள் தெரிந்து கொண்ட பின்பும் உரிய நடவடிக்கை எடுக்க முயற்சிக்காதது எம் இனத்துக்கான சாபக் கேடு என்றுதான் சொல்ல வேண்டும்.

சிறுவர்களின் சீரழிவுக்கு பெற்றோரின் நடத்தை காரணம் என்றே சொல்லப்படுகின்றது.

இந்த மூன்று சிறுவர்களில் கிளிநொச்சியைச் சேர்ந்த ஒரு சிறுவனின் கதை பரிதாபமானது. முறிகண்டி, மன்னார், வவுனியா என பல இடங்களுக்கு வேலை தேடிச் சென்று இறுதியில் திருமலை வந்தான். தாய் குடும்பப் பொறுப்பை மட்டுமன்றி கணவனையும் கைவிட்டு விட்டார்.

தந்தை வெளிநாடு சென்று வேறு திருமணம் முடித்துக் கொண்டார். சித்தப்பாவின் தொல்லை, சித்திரவதை காரணமாக ஆறாம் ஆண்டுடன் கல்விக்கு முழுக்குப்போட நேரிட்டது..

ஏனைய எட்டுச் சகோதரர்கள் இருக்கின்றனர். மூத்தவர்களால் பிரயோசனம் இல்லை. இந்த நிலைமைகள் இவரை வீட்டை விட்டு வெளியேறச் செய்தது.

திருகோணமலை கோட்டைவாயிலில் பெட்டிக் கடை அமைத்திருக்கும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த 40 வயது மதிக்கத் தக்க ஒருவர், ஒரு சிறுவனைக் கடந்த ஒரு மாதத்துக்கு முன்பு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியிருக்கிறார். விரும்பத்தகாத முறையில் நடந்து கொள்ளும் படியும் அச்சிறுவனை வற்புறுத்தியுள்ளார்.

கடந்த 18ஆம் திகதியும் இச்சிறுவனை தனது இச்சை தீர்க்கப் பயன்படுத்தி இருக்கிறார். ஏனைய இரு சிறுவர்கள் மீது பலாத்காரம் மேற்கொள்ள முயற்சிக்கப்பட்டாலும் அவர்கள் தப்பித்து விட்டனர்.

திருமலை வெலிக்கடைத் தியாகிகள் அரங்கில் இச்சிறுவர்கள் ரெலோ இயக்கத்தினால் பிடிக்கப்பட்டு விசாரிக்கப்பட்டாலும் அவர்கள் நழுவி விட்டனர். பாழடைந்த மண்டபம் ஒன்றில் வைத்து 18ஆம் திகதி இவர்களை பிடித்துள்ளனர். பின்னர் விசாரணையின் போதே மேற்படி விவரங்கள் வெளிவந்தன.

ரெலோவின் மாவட்ட அமைப்பாளர் கு.ரவீந்திரராஜா, முன்னாள் வேட்பாளர் வ.விக்னேஸ்வரன் மற்றும் பிரமுகர்கள் இச்சிறுவர்களை மனித உரிமை ஆணைக் குழுவின் மாவட்டப் பணிபாளர் திருமதி மதியாபரணத்திடம் கையளித்தனர்.

வைத்திய பரிசோதனையின் பிற்பாடு சிறுவர்கள் யுனிசெப் அமைப்பினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். திருகோணமலை அன்பு வழிபுரத்தைச் சேர்ந்த சிறுவன் தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டான். ஏனைய இருவரும் ஒரு சிறுவர் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று ரெலோ அமைப்பு தெரிவித்துள்ளது.

சிறுவர்கள் சீரழிந்து போவதற்கு பல பின்னணிகள் காரணமாகவுள்ளன. மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய நபர் சட்டத்தால் இன்னும் தண்டிக்கப்படவில்லை. சட்ட விரோதமான கடையை அவர் வைத்துக் கொண்டு போடும் ஆட்டத்தை பொலிஸாரும் காணவில்லை. நகரசபையும் கண்டு கொள்வதாக இல்லை.

வெலிக்கடைத் தியாகிகள் அரங்கு இருளில் மூழ்கியிருப்பதும் நகரசபைக்குத் தெரியவில்லை.

இங்கு குறிப்பிடப்பட்ட இடங்கள் மது அருந்துதல், காதலர்கள் கூடுதல், சூதாடுதல் மற்றும் பலவிடயங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. சில பெட்டிக் கடைகளை பாதுகாப்பு படையினர் தமது தேவைக்கு பயன்படுத்துகின்றனர் என்றும் தெரியவருகின்றது.

இதுவிடயத்தில் நகரசபை நிர்வாகப் பொறுப்பாளர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆளுநருக்கும் இதுபற்றி அறிவிக்கப்பட வேண்டும்.

எஸ்.எஸ்.ஆர்.

## சொற்சிலம்பம் போட்டி இல.110

சொற்சிலம்பம் 110 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் ஜூன்07ஆம் திகதி ஆகும். விடைகள் ஜூன்14ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூன்21ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.108க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடுதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும் இரண்டாவது பரிசாக 150 ரூபாவும் மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.110

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | 4 | ■ | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | 9 | ■ | |
| 10 | | | 11 | ■ | 12 | | |
| | ■ | 13 | | | | ■ | |
| ■ | 14 | | | ■ | 15 | 16 | ■ |
| 17 | | | ■ | 18 | | | 19 |
| 20 | | ■ | 21 | | ■ | 22 | |
| 23 | | | | ■ | 24 | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.108

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 து | ந் | 2 து | 3 பி | ■ | 4 க | 5 போ | 6 தி |
| ர் | ■ | 7 வா | ண | வே | டி | க் | கை |
| 8 ம | 9 து | ர | ம் | ■ | 10 த | கு | ■ |
| 11 தி | ற | ம் | ■ | 12 ந | ம் | ■ | 13 க |
| ■ | ப் | ■ | 14 பா | தி | ■ | 15 ப | ரு |
| 16 உ | ப | 17 கா | ரி | ■ | 18 கு | ண | ம் |
| 19 ம | ண | ம் | ■ | 20 வி | ரு | ம் | பு |
| 21 து | ம் | பு | த் | த | டி | ■ | லி |

## சொற்சிலம்பம் போட்டி இல.110

**இடமிருந்து வலம்**

1. கணவன் மீதான விசுவாசம்/ கணவனை தெய்வமாகக் காண்பவளின் பண்பு.
5. திறப்பு.
7. மேடு.
8. சமிக்ஞை.
10. எரிச்சல்/கோபம்.
12. கூற்றுவன்.
13. ஈரெட்டு.
14. தெரிய/ புரிய/உணர.
15. செல்வம்/திரவியம்/பொக்கிஷம்.
17. சுற்றம்/உற்ற தொடர்பு.
18. செய்திக்குக் கவர்ச்சி ஏற்படுத்துவது.
20. அவதிப்படு/அந்தரப்படு.
21. பதில்.
22. முன் அல்ல.
23. சிறைப்பறவை வேண்டுவது.
24. பலமான தன்மை.

**மேலிருந்து கீழ்**

1. பத்துப்பாடல் கொண்டது.
2. ஏசு.
3. கற்று வந்த தெளிவு/புத்தி.
4. திக்கு.
6. ஒஸ்ட்ரியாவின் தலைநகரம்.
9. சகலதையும் இழந்த நிலைமை.
11. பழைய அல்ல.
14. வசூலி/ தண்டு.
16. திரிகடுகத்தில் ஒன்று.
17. ஒத்தாசை.
18. மறி/தடுப்பது.
19. அற்பம்/ஈனம்/சிறுமை.
21. ஒன்றின் பெறுமதி.

## சொற்சிலம்பம்-107 பரிசு பெறுவோர்.

1. திரு.என்.இந்திரகுமார்,
96,2/10, FRONT STREET,
CONSISTORY BUILDING,
கொழும்பு—11.
2. எஸ்.ஜீவா,
22,$^{4}/_{2}$, மூர்வீதி,
வெள்ளவத்தை.
3. எஸ்.ஜெயச்சந்திரராசா,
இராசேந்திரன் குளம்,
வவுனியா.


### பாராட்டுப் பெறுவோர்

1. க.பிரபாகரன்,
பெரியதம்பி வாடி,
முல்லைத்தீவு.
2. சி.அரசகுலரத்தினம்,
சங்குவேலி,
மானிப்பாய்.
3. சி.விஜிதினி,
கூமாங்குளம்,
வவுனியா.
4. ம.பிரகாஷ்,
451/2, திருஞான சம்பந்தர் வீதி,
திருகோணமலை.
5. செல்வி. ஆர்.ஜெகநாதன்,
18—$^{2}$/5 கொலிங்வூட் பிளேஸ்,
கொழும்பு—06.
6. திருமதி.சந்திரா சண்முகசுந்தரம்,
மருதடி,
வல்வெட்டித்துறை.
7. திருமதி. பீ.எம்.நீற்றா,
இல.$^{395}/_{135}$, ஜோசப்வாஸ்லேன்,
வவுனியா.
8. எஸ்.டி. தாசன்,
:35, சங்க வீதி
திருகோணமலை.
9. சிவா சண்முகலிங்கம்,
$^{71}/_{9}$, காலி வீதி,
தெகிவளை.
10. சி.உதயசங்கர்,
கரவெட்டி,
யாழ்ப்பாணம்.

# எதிரியாய் மாறிய நண்பன்.....



சோதனையிடப்பட்ட சலாமியின் அலுவலகம். அருகே சலாமி.



சில மாதங்களுக்கு முன்னர் வரை முஹமட் சலாமி, பென்ரகன் மற்றும் வெள்ளை மாளிகை அதிகாரிகளின் செல்லப்பிள்ளை. - டார்லிங் - இப்போது அப்படியில்லை. அந்தப் பெயரே அதிகாரிகளுக்கு வெறுப்பேற்றுகிறது.

சலாமி, ஈராக்கில் சதாம் ஆட்சியில் இருந்தகாலத்தில்அமெரிக்கர்களால் அதிகம் விரும்பப்பட்ட ஈராக்கியர். நியூயோர்க்கின் அதிகார மையமான வெள்ளை மாளிகையின் அதிகாரிகளாலும் அமெரிக்காவின் தன்னிகரற்ற பாதுகாப்புத் தலைமையகமான பென்ரகன் அதிகாரிகளாலும் அன்புடன் தடவி அரவணைக்கப்பட்ட நபர்.

ஈராக்கில் சதாம் ஆட்சி அகற்றப்பட்ட பின்னர் சலாமியை அரியணை ஏற்றவும் கூட அமெரிக்கா திட்டமிட்டிருந்தது. அந்தளவுக்கு சலாமிக்கு அமெரிக்காவுடன் நெருக்கம். அவர் மேல் அதிகாரிகளுக்கு நம்பிக்கையும்கூட.

ஆனால், சலாமியின் பக்தாத் அலுவலகமும் அவரது வீடும் கடந்த வாரம் ஈராக்கியப் பொலிஸாராலும் அமெரிக்கப் படையினராலும் சோதனையிடப்பட்ட போது உலகின் பார்வைமுன் இவை அத்தனையும் தவிடுபொடியாகின. அமெரிக்காவின் நண்பன் ஒருவன் எதிரியான கதை அனைவருக்கும் தெரியவந்தது.

சலாமியின் வீடுமற்றும் அலுவலகத்தில் நடந்த சோதனைகள் ஈராக்கில் மட்டுமல்ல முழு உலகிலுமே ஆச்சரியத்தை ஏற்படுத்தின. உடனடியாகத் தமக்கு இது பற்றி எதுவுமே தெரியாது என்றனர் அமெரிக்க உயர் தலைவர்கள்.

இந்த இராணுவ நடவடிக்கை பற்றித் தமக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்று அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரொனால்ட் ரம்ஸ்பீல்ட் கூறினார். பென்ரகன் அதிகாரிகளும் இது பற்றித் தமக்கு எதுவுமே தெரியாது என்று கைவிரித்தனர்.

உலகின் முதற்றரமான இராணுவத்தின் ஓர் அணி தனது நாட்டிற்கு நெருக்கமான அரசியல்வாதி ஒருவரின் வீட்டில் சோதனை நடத்திக் கொண்டிருக்க, அதன் கட்டளைத் தலைமையகத்திலுள்ள உயரதிகாரிகளுக்கு அது பற்றி எதுவுமே தெரியவில்லை என்று சொன்னால் அதை யார்தான் நம்புவார்கள்?

உண்மையில் அமெரிக்க அரசியல் பீடத் தலைவர்களின் ஆசீர்வாதம் இன்றி இந்தச் சோதனை நடைபெற்றிருக்காது என்று சலாமியே அடித்துச் சொல்கிறார்.

ஆனாலும் பின்னர், சலாமி ஈரானிய அதிகாரிகளுடன் தொடர்புகளை வைத்திருந்ததால்தான் அவரது அலுவலகத்திலும் வீட்டிலும் சோதனை நடத்தினோம் என் அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

தங்களுக்கு விரோதமான ஈரானின் அதிகாரிகளுடன் என்ன பேசினார் என்று சலாமியிடம் இருந்து விபரம்பெற அமெரிக்க அதிகாரிகள் முயன்றுள்ளனர். ஆனால் அவர்கள் அதில் தோல்வியடைந்து விட்டனர். அவர் வீடும் அலுவலகமும் திடீரெனச் சோதனையிடப்படுவதற்கு இதுவே காரணம் எனப்படுகிறது.

சலாமியை ஈராக்கின் அடுத்த தலைவராக்கும் திட்டத்தில் இருந்த அமெரிக்கா திடீரென தலைகீழான நிலைப்பாட்டை எடுத்ததற்கு உண்மையில் என்ன காரணம்?

எதிர்வரும் ஜூன் 30ஆம் திகதி ஈராக் நிர்வாகத்தை இடைக்கால அரசிடம் ஒப்படைக்கும் அமெரிக்காவின் திட்டத்தைத் தான் கடுமையாக விமர்சிக்க ஆரம்பித்ததுதான் இதற்குக் காரணம் என்று சலாமி சொல்கிறார்.

இங்கேதான் அமெரிக்காவுக்கும் அவருக்கும் முரண்பாடுகள் ஆரம்பித்தன என்று அவர் தெரிவித்தாலும் அமெரிக்காவின் மாற்றத்துக்கு வேறு காரணங்கள் இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

சலாமி வீட்டில் சோதனை நடத்தப்பட்டதற்கு ஈராக்கியப் பொலிஸார் கூறும் காரணம் ஆள் கடத்தல், அதிகார துஷ்பிரயோகம், மற்றும் முறைகேடுகள் தொடர்பாக சலாமி மீது கூறப்படும் குற்றச்சாட்டுக்கள்தான். வெளிப்படையாகக் கூறப்படும் காரணம் இதுவாக இருந்தாலும், சலாமியின் நடவடிக்கைகளில் அமெரிக்கா சந்தேகம் கொள்ள ஆரம்பித்தது தான் உண்மைக் காரணம் என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

சலாமி அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாக இருந்த காலத்தில் கூட அவர் ஒரு முரண்பாடான நபர் என்றே வெள்ளைமாளிகை அதிகாரிகள் கருதினார்கள். ஆனால் ஈராக்கில் சதாம் ஆட்சி நடந்த போது அமெரிக்காவுக்கு சலாமி தேவைப்பட்டார்.

ஈராக்கிய நிர்வாகத்தை இடைக்கால அரசிடம் கையளிக்க அமெரிக்கா வகுத்த திட்டத்தில் சலாமிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. ஆனால், ஈராக்கின் அடுத்த தலைவராகத் தான் வரவேண்டும் என்பதில் சலாமி ஆர்வமாக உள்ளார். உள்ளூர் ஆதரவு இல்லாமல் இது சாத்தியப்படாது என்பது அவருக்குத் தெரிந்திருந்தது.


உள்ளூர் ஆதரவைப் பெறவேண்டும் என்றால் ஈராக்கிய கிளர்சியாளர்கள் பக்கம் சாயவேண்டிய கட்டாயம் அவருக்கு இருக்கிறது. எனவே தனது எதிர்கால அரசியல் நலன் கருதி அவரது நடவடிக்கைகள் மாறின. இது வெள்ளை மாளிகைக்கு பெரும் எரிச்சலை ஏற்படுத்தியது. கிளர்ச்சியாளர்களால் தமது படையினர் இழப்புக்களைச் சந்தித்துவர தமது ஆதரவு பெற்ற ஒருவர் கிளர்ச்சியாளர்களுக்கு சார்பாக நடப்பது அவர்களுக்கு கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

சலாமியின் ஈராக்கிய தேசிய காங்கிரஸ் கட்சிக்கு அமெரிக்கா ஆண்டுதோறும் வழங்கி வந்த பல மில்லியன் நிதி உதவியையும் நிறுத்திவிட்டது.

தான் உள்ளூர் ஈராக்கியர்கள் பக்கம் சாய்ந்தால் அமெரிக்காவின் ஆதரவை இழக்க வேண்டி வரும் என்பதை சலாமியும் அறிந்தே இருந்தார். அதனால் தான் அவர் ஈரானிய அதிகாரிகளின் ஆதரவைப் பெற முயன்றுள்ளார். இது அமெரிக்காவுக்கும் அவருக்கும் இடையிலான உறவை மேலும் மோசமாக்கி விட்டது.

இப்போது, எதிரியாய் மாறிவிட்ட தனது முன்னால் நண்பனை அமெரிக்கா முற்றாகக் கைகழுவி விட்டுவிட்டது. பின்லேடன்கூட அமெரிக்காவின் முன்னாள் செல்லப் பிள்ளை என்பது தான் இந்த இடத்தில் சட்டென ஞாபகத்துக்கு வருகின்றது.

-பிரேம்-


## இருளை நீக்கும் ஒளி...

காலையில் உதிக்கும் சூரியன் மாலையில் அஸ்தமிக்கும் போது உலகெங்கும் இருள் கவ்விக் கொள்கிறது. இது இயற்கையின் விதி.
மனித வாழ்க்கைக்கும் பொருந்தும். இயற்கையின் கைப்பிடிக்குள் சிக்கிக் கொண்டிருக்கும் உங்களின் வாழ்க்கையைப் பற்றி என்றும் சிந்திக்கும் செலிங்கோ லை.்ப், உங்களுக்காக அறிமுகப்படுத்தும் புதிய ஆயுட் காப்புறுதி செலிங்கோ பிரதீப!
நீங்கள் இல்லாத நேரத்திலும் உங்கள் மனைவி, பிள்ளைகளின் வாழ்க்கைக்கு ஒளியாகும் காப்புறுதி செலிங்கோ பிரதீப!

ஒரு இலட்சம் ரூபா ஆயுட் காப்புறுதியைப் பெற, 5 வருடத்திற்கும் நீங்கள் செலுத்த வேண்டியது ரூபா.1,250/- மட்டுமே.

மேலதிக தகவல்களுக்கு
2461461 ஐ அழையுங்கள்.

செலிங்கோ பிரதீப
வாழ்வின் புது ஒளி!



இல. 134, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி 2461461- தொலைநகல் 2437613
மின்னஞ்சல்: pradeepa@ceylife.lk
வெப்தளம்: www.ceylincolife.com/pradeepa

இலங்கையின் பதிவு செய்யப்பட்ட காப்புறுதி நிறுவனம்.

ஹேறம் லோன்ஸ் பற்றிய மேலதிக விபரங்களுக்கு இக் கூப்பனை நிரப்பி அனுப்பவும்
பிரிவு முகாமையாளர் - செலிங்கோ பிரதீப
இல. 134, காலி வீதி,
கொழும்பு 03.

பெயர்: ____________________

முகவரி: ____________________

____________________

தொலைபேசி: ____________________

Minds FCB

# உலக நாடுகளின் தேசியம் மலர்ந்த வரலாற்றுப்பின்னணி

ஒரு சமுதாயத்தின் தேசிய இனம் என்பது மெய்யான இன வடிவத்தையும் இயல்பான அதன் சமூக அமைவையும், தன்னுரிமை, தன்னாட்சி தளங்களையும் புரிந்து கொள்வதற்கு உதவுகிறது.

மேலும் அவற்றின் எதிர்கால நடைமுறையை அறிந்து கொள்வதற்கு 'தேசிய இனம்', 'தேசியம்' தோன்றி வளர்ந்த வரலாற்றுப் பகுதியையும் அதன் ஆட்சியியல் போக்கையும் அதற்கான கோட்பாட்டு விளக்கங்களையும் நடுநிலையில் நின்று ஆராய்ந்து அவற்றின் இயங்குநிலைப் பொருளை அறிந்து கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும்.

பழங்காலத்திலிருந்து தாம் தோன்றி வளர்ந்த குறிப்பிட்ட நிலப்பகுதியுடன், அங்கு உருவாகிப் படர்ந்த மொழி, தனிப்பண்பாட்டுடன் பிணைப்புண்டு ஒரு நெடிய மரபை மக்களினம் கொண்டிருக்கின்றது.

நெடுங்கால சமுதாய வளர்ச்சியில் அவை ஒன்றோடொன்று கலந்து கொண்டு மொழி வழியினதான தனித்தனிப் பண்பாடுகளுடன் குறிப்பிட்ட நிலப்பகுதிகளில் வாழும் மக்கள் சமுதாயங்களாக அவை பரிணமித்தன.

ஒரு மக்கள் சமுதாயத்தின் முதல் நிலைப் பண்புக்கூறுகளான பொது மொழி, தொடர்ச்சியான கால எல்லை, பொதுவான பொருளியல் வாழ்வு, பொதுப்பண்பாட்டில் வெளியிடப்படும் உளவியல் உருவாக்கம் ஆகியவை தேசிய இனமாக அதனை அடையாளம் காண உதவுகின்றன.

தேசிய இனங்களின் இனத் தோற்றம், வளர்ச்சி வரலாறு, கருத்தியல் கோட்பாடுகளை உலக நாடுகளுடன் ஒப்பிட்டு ஆராயும் போது 'தமிழ்த்தேசியம்' பற்றி விளக்கத்தை அறிந்து கொள்ள முடியும்.

ஐரோப்பிய கண்டத்திலுள்ள பல நாடுகளில் ரஷ்யாவையும், யூகோஸ்லாவியாவையும் தவிர, மொழி அடிப்படையில் தனி இனத் தகுதியை பெறுவதற்குரிய, ஒரே மொழி பேசும் மக்கள் சமுதாயங்களைக் கொண்டதனி நாடுகள் அதிகமாக இல்லை.

ஐரோப்பாவின் இடைநிலைக் காலத்தில் (Middle Ages) 'தேசியம், தேசிய இனம் பற்றி தெளிவான கருத்தாக்கம் உருவாகவில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து தான் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் தேசியம் பற்றிய அடிப்படை கருத்தோட்டங்கள் தேன்றின. உதாரணமாக பிரான்சு நாட்டை இவற்றின் முன்னோடி நாடு எனலாம்.

பிரான்சு மக்கள் கால்சு, உரோமானியர், பிரித்தானியர், கியூட்டினினர் போன்ற பல மரபினங்களிலிருந்து உருவான ஒரு கலப்பு மக்களினமே. ஆனால், ஐரோப்பிய நாடுகளிலேயே பிரான்சு நாடுதான் தேசியத்தின் முதல் முன்னோடியாக அமைந்தது.

பதினேழாம் நூற்றாண்டுவரை ஐரோப்பிய நாடுகளின் மதத்தலைமை போப் பாண்டவரிடமே நிலைபெற்றிருந்தது. ஆனால், ஐரோப்பிய மக்கள பல்வேறு அரசர்களின் ஆட்சியின் கீழ் இருந்தனர்.

17 – 18 ஆம் நூற்றாண்டுகளில் ஒரே மதத்தலைமை என்ற நிலைமாறியது பிரான்சுக்கு அதன் மன்னனே மதத்தலைவரானார். இங்கிலாந்து நாட்டிற்கு இங்கிலாந்தின் கிறிஸ்துவம் (Church of England) ஓர் அமைப்பாக தோன்றியது.

இந்நிலையில் பிரான்சு மக்களை மற்ற மக்களிடமிருந்து பிரித்து தனி அடையாளம் காண்பதற்காக, பிரான்சு தேசியம், (French Nationalism) என்றழைக்கப்பட்டது.

அதில் விந்தையானது யாதெனில் பிரான்சு மன்னனும் அதில் உள்ளடக்கம். அதே போன்று ஆங்கிலேய தேசியமும் புரட்டஸ்தாந்து மதப்பிரிவு மக்களுடன் பொருந்தி நின்றது.

> *மக்கள் தம்மை ஒரு தேசமாக அடையாளம் காண முற்படுகின்ற சூழ்நிலைகளை, இக்கட்டுரையின் ஆசிரியர் ஐரோப்பிய நாடுகளின் அனுபவங்களில் இருந்து ஆராய்கிறார்.*

ஆகவே முதல்நிலையில் தேசியம் என்பது தனித்த மதத்தலைமை அமைப்புகளின் அடிப்படையிலான நாடுகளை தழுவிய பொருளைக் கொண்டிருந்தது.

கி.பி.1789 முதல் ஐந்து ஆண்டுகள் நீடித்த பிரான்சுப் புரட்சி இறுதியில் முடியாட்சியை அகற்றிவிட்டது. அப்புரட்சியானது உலகம் முழுவதற்கும் தேசியத்தின் பேராற்றலை அறியத்தந்தது.

முதன்முதலாக பிரான்சு நாட்டில் இறையாண்மை (Soverignty) என்ற அனைத்து ஆட்சி அதிகாரங்களும் மக்களிடம் போய்ச் சேர்ந்தன. இந்த நிலையிலேயே இறையாண்மை பெற்ற ஒரு நாட்டு மக்கள் தேசிய இனம் எனக் கருதப்பட்டனர்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இடையில் தோன்றிய அறிஞர்களான வால்டர், ரூசோ ஆகியோர் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற மக்களாட்சிக் கோட்பாடுகளை முதன் முதலாக மக்கள் முன் வைத்தனர்.

நாடு என்பது மக்களை குறிக்கும் என்றார் ரூசோ. சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்ற உரிமையும் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கருத்தோட்டமும் பரவலாக தோற்றம் பெற்றன.

பிரான்சுப் புரட்சியில் மலர்ந்த மக்களாட்சி அனைவருக்கும் சம வாய்ப்புகளையும் கல்வி, ஆட்சியமைப்பில் பங்கு, அரசியல சமுதாய புலங்களில் ஏற்றத் தாழ்வை அகற்றி தேசிய இனத்தையும், தேசியத்தையும் மலரச் செய்தது.

இத்தாலிய நாட்டு தேசியத்தை பார்ப்போமாயின் அங்கு ரோமானியர், டியூட்டன், கிரேக்கர், அரேபியர் போன்ற மரபினங்களிலிருந்து உருவான ஒரு கலப்பு மக்களினமே இத்தாலியர்களாவர்.

அந்நாட்டின் தலைவர்கள் இத்தாலி விடுதலை பெறுவதற்காக நாட்டுத்தேசியத்தை மக்களுக்கு ஊட்டினர். இத்தாலிய விடுதலைத் தலைவர் மாஜினியின் கருத்துப்படி, நாடு என்பதே அத்தேசிய இன வளர்ச்சியில் முதன்மை பெற்றது.

தேசிய இனங்கள் தத்தம் நாட்டரசுகளை அமைத்துக்கொண்டு அவற்றை இணைத்த ஒரு கூட்டாட்சியாகவும் அமைய முடியும் என்பதற்கு முதல் முன்னோடியாகவும் இன்று விளங்குவது அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகும்.

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து பல மொழி, பண்பாடு, மரபுகளைச் சேர்ந்த ஐரோப்பாவின் டச்சு, சுவீடன், ஜேர்மனி, பிரான்சு, இத்தாலி, போர்த்துக்கல், ஸ்பெயின் நாட்டுமக்களும் அயர்லாந்து, ஸ்கொட்லாந்து, இங்கிலாந்து மக்களும் பொருளியல் நலவாய்ப்புக்களை நாடி புத்துலகம் என்றழைக்கப்படும் அமெரிக்காவில் குடியேறினர்.

வரையறுத்த எல்லையைக் கொண்ட 13 குடியேற்ற நாடுகளை அமைத்துக் கொண்டனர். 1776 ஆம் ஆண்டு வரை, அவற்றிடையே நெருங்கிய தொடர்பு இருக்கவில்லை. ஆங்கில அரசின் மேலாண்மைக்கு அவை அடிமைப்பட்டு கிடந்தன.

ஆனால், ஆங்கில ஏகாதிபத்தியத்திலிருந்து அனைத்து குடியேற்ற நாடுகளும் ஒன்றுசேர்ந்து விடுதலை பெற விரும்பின. 1776 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தம் விடுதலைச் சாற்றாணையை வெளியிட்டன.

இங்கிலாந்திற்கும், அமெரிக்க குடியேற்ற நாடுகளுக்கும் இடையில் போர் மூண்டது. ஐந்து வருடங்கள் கழித்து, அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் சுதந்திரத்தையும், இறையாண்மையையும் பிரித்தானியப் பேரரசு ஏற்றுக்கொண்டது.

அமெரிக்கா பல்வேறு தேசிய இனங்களுக்கும் பொருந்தக்கூடியதான தன்னாட்சியுடன் – மையக் கூட்டாட்சியையும் கொண்டதுமான புதிய கூட்டாட்சி அமைப்பை (Federal Constitution) 1789 மார்ச்சில் அறிமுகப்படுத்தியது.

கி.பி 15 – ஆம் நூற்றாண்டில் இத்தாலியில் தோன்றிய மறுமலர்ச்சி இயக்கமும் கி.பி.16 ஆம் நூற்றாண்டில் முதல் பாதியில் ஜேர்மனியில் தோன்றிய சீர்திருத்த இயக்கமும் ஐரோப்பா முழுவதற்குமான தேசியத்திற்கு வித்திட்டன.

வரலாற்றுக் காலத்திற்கு முந்தைய காலத்திலிருந்தே குறிப்பிட்ட மொழியையும் கலாசாரத்தையும் தன்னகத்தே கொண்டு விளங்கிய ஜப்பான், நவீன காலத்திலும் வரலாற்றுத் தொடர்பு மாறாமல் தேசிய நாடாக திகழ்கிறது.

இரண்டாம் உலகப் போரின் முடிவாக கிட்டதட்ட 800 ஆண்டுகளாக பேச்சு மொழி வழக்கிலிருந்த ஹீப்ரு மொழியை ஆட்சி மொழியாகவும், உயர்மட்டம் வரையில் போதனை மொழியாகவும் பயன்படுத்தி இஸ்ரேல் நாடு உருவாகியது.

அண்மைக் கால அரசியல் விளைவுகளால் வங்க மொழித் தேசிய அடிப்படையில் பங்களாதேஷ் உருவாகியது.

ரஷ்யாவில் சார் மன்னரின் ஆட்சியின் கீழ் பல்வேறு மொழி பண்பாடுகளைக் கொண்ட தேசிய இனங்கள் அடிமைப்பட்டுக் கிடந்தன.

மாவீரன் லெனின் நாட்டுக்கு நாடு வேறுபடுகின்ற தனித்தன்மைகளை வைத்து ஒவ்வொரு நாட்டிலும் புரட்சி உருவாகும் எனும் கோட்பாட்டை வைத்து வரலாற்றுபுகழ்மிக்க ரஷ்யப்புரட்சியை 1917 இல் நடத்தினார்.

இப்புரட்சியே பலமொழி நாட்டினங்களுக்கும் சுயநிர்ணய உரிமை (Right of self Determination ) உண்டு என்பதை பறைசாற்றுவதாக இருந்தது.

தோழர் ஸ்டாலின், சுய நிர்ணய உரிமை என்பது ஒரு நாட்டின் மக்கள் தாம் விரும்பும் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கும், தன்னாட்சி அடிப்படையில் மற்ற நாடுகளுடன் கூட்டாட்சி உறவுகள் ஏற்படுத்திகொள்வதற்கும் விரும்பும் போது அக்கூட்டாட்சியிலிருந்து பிரிந்து கொள்வதற்கு உள்ள உரிமையே சுயநிர்ணய உரிமை என்றார்.

பேராசிரியர் பொன் சக்திவேல்

## துணி தைக்கும் அதிசயக் கிளி

இந்தக் கிளியைப் பார்த்தால் ஊசியையும் நூலையும் தனது அலகில் வைத்துக் கொண்டு துணியைப் தைப்பதுபோல் போட்டோவிற்கு போஸ் கொடுக்கிறது என்றுதான் எல்லோருக்குமே நினைக்கத் தோன்றும். ஆனால், அதையெல்லாம் பொய் என்கிறது, பாஜியோ என்னும் இந்த 9 வயதுக் கிளி.

இங்கிலாந்தின் பிரிஸ்டல் நகர லட் பார்க் தெருவில் தையற்கடை நடத்திவரும் ஜாக் டொரிடோ என்பவருக்குச் சொந்தமான பாஜியோ தனது எஜமானர் அளித்த கடுமையான பயிற்சி மூலம் மெல்ல மெல்ல துணிகளைத் தைப்பதற்கு பழகிக் கொண்டது. இப்போது ஓரளவு வேகமாகத் தைக்கிறது.

பாஜியோவால் ஜாக்டொரிடோவிற்கு நல்ல வருமானம். துணி தைக்க வருகிறவர்கள் எல்லோரும் ''உன் கிளியிடம் சொல்லி ஹெம்மிங் போடு'' என்கிறார்கள்.

இதுவரை எந்தப் பறவையும் துணியை தைத்ததாக செய்தி இல்லை. அதனால் பாஜியோ கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் நிச்சயம் இடம் பிடித்து விடுமாம்.



• எப்படி இருக்கிறது கிளியின் சாதனை?

## வாசகர் இதயம் பேசுகிறது

அன்பின் சுடர்ஒளியே!

தமிழ் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்து விட்ட சுடர் ஒளியே! உனக்கு எப்படி நன்றி சொல்வது. தமிழ் மக்களின் தனித்துவமான உரிமைகளை உரத்து உலகத்துக்கு பறைசாற்றுகிறது உன் அரசியல் கருத்துக்கள். மொத்தத்தில் உனக்கு ஒரு சபாஷ். உன் பத்திரிகா தர்மம் பாராட்டுக்குரியது.

தமிழ் மக்களின் பலத்தை பொறுக்க முடியாத பத்திரிகைகள் சில புலிகளை எடுபிடியாக வர்ணிப்பதிலும் துரோகிகளை ஆதரிப்பதிலும் கூட்டமைப்பை கேவலமாக விமர்சிப்பதிலும் இலாபம் சம்பாதிக்க முயல்கின்றன. தமிழரின் தன்மானப் பத்திரிகைகளை, புலிகளிடம் விருது பெற துடிப்பவை என்று கூறும் ஒரு பத்திரிகையின் பரிதாபகரமான இயலாத் தன்மையும் வெளிப்படுகின்றது. தமிழ் மக்களால் ஜீரணிக்க முடியாத கருத்துக்களை அந்தப் பத்திரிகைகள் தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டிருந்தாலும் தமிழ் மக்களின் மனங்களை வென்று விடலாம் என்று கருதுவது முட்டாள்தனமானது.

*வைதேகி – சாவகச்சேரி.*

*அணையாத தீபமாகிய சுடர் ஒளியே! உனக்கு வந்தனங்கள் உரித்தாகட்டும்.*

*திங்கள் தோறும் உனது வரவை எதிர் பார்க்கும் வாசகரில் ஒருத்தி எழுதுகிறேன். பித்தன் பதில்கள், சிறுகதைகள் என்பவற்றை தவறாமல் வாசிப்பேன். சமுருகானந்தன் எழுதிய ''யார் இந்த தேவதை'' என்னும் சிறுகதை மிகவும் பிடித்துள்ளது. ஒளியே உன் சேவை தொடர வாசகியாகிய எனது வாழ்த்துக்கள். வாழ்க பல்லாண்டு! வளர்க சுடர் ஒளி!*

பா.ஜீவனி – உருத்திரபுரம்.




அன்பான சுடர் ஒளியே! நீ வாரம் தோறும் சுடர் விடும் எம் இனிய உள்ளங்களுக்கு தீபமிடுகிறாய். நீ தாங்கி வரும் அம்சங்கள் அத்தனையும் எம்மைக் கவர்ந்தவை. சிறுவர் பகுதி என்னை மிகவும் கவர்ந்தது. சிறுவர் பகுதி மூலம் எனக்கு பல பேனா நண்பர்களை சேர்த்துத் தந்துள்ளாய் என் பணி தொடர என் நல்வாழ்த்துக்கள். மீண்டும் போன நண்பர்களை சேர்த்துத் தந்தமைக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

இ.பேபிநிஷாந்தினி– வன்னேரி.


# பொடா ரத்து; ஆட்சிக் கலைப்பு? ஜெயலலிதாவுக்கு அச்சுறுத்தல்

நடந்து முடிந்த லோக்சபாத் தேர்தல்களில் தமிழகத்தின் 40 தொகுதிகளிலும் போட்டியிட்டு வெல்வதைத் தான் தமிழக முதல்வர் ஜெயலலிதா விரும்பினார்.

1999 தேர்தலில் காங்கிரஸுடன் கூட்டணி வைத்திருந்த அவர் 2001 சட்டசபை தேர்தல்களில் மூப்பனாரின் தமிழ் மாநில காங்கிரஸுடனும், பா.ம.க.வுடனும் புதிதாக கூட்டணி வைத்து முதல்வரானது குறிப்பிடத்தக்கது.

எனினும் பதவிக்கு வந்ததும் மூப்பனாரையும், காங்கிரஸையும் உதறி எறிந்தார். தனது கெட்டித்தனமே வெற்றிக்கு காரணம் என நம்பத் தலைப்பட்டார். காங்கிரஸ், கம்யூனிஸ்ட், பா.ம.க. தயவால் தான் வெல்லவில்லை என்ற அவரது நம்பிக்கைக்கு உரமூட்டும் வகையில் அவர் முதல்வரான பின் நடந்த சைதாப் பேட்டை, வாணியம்பாடி, காத்தான்குளம் இடைத்தேர்தல்களில் அவர் தனித்துப் போட்டியிட்டு வெற்றிகண்டதும் உண்மையே.

இந்த வெற்றிகளால் தனது சொந்தப் பலத்தில் எல்லாம் நடக்கும் என இறுமாப்படைந்த அவர், சகல கட்சிகளையும் உதறினார். எதிரணியில் சகல கட்சிகளும் ஒன்று சேர்வதை அவர் கண்டு கொள்ள முடியாமல் போனது. பி ஜே.பி. கட்சியைக்கூட அவர் தனது அணியில் சேர்க்க முதலில் விரும்பவில்லை. போனால் போகிறது என்று 7 தொகுதிகளை விட்டுக் கொடுத்தார். அதிலும் எந்தத் தொகுதியில் எந்தெந்த பி.ஜே.பி. உறுப்பினர் போட்டியிட வேண்டும் என்பதையும் அவர் தனது கடும் நிபந்தனைகள் மூலம் கட்டுப்படுத்தினார்.


வைகோ

பா.ம.க. — ரஜனி ரசிகர் மோதலால் பரமவைரியான ரஜனி ஜெயலலிதாவை ஆதரிக்க முன்வந்தபோதுகூட அதனையும் பகிரங்கமாக அவர் அங்கீகரிக்க முன்வரவில்லை. ரஜனி ஆதரவால்தான் வென்றோம் என்றநிலை வரக்கூடாதே. அதற்காகத்தான்.

உண்மையில் இந்தத் தேர்தலில் பி.ஜே.பி., காங்கிரஸ் இரு அணிகளுக்குமே போதிய பெரும்பான்மை கிடைக்காது போகலாம் என்று ஜெயலலிதா நம்பினார். அவ்வாறான திரிசங்கு நாடாளுமன்றத்தில் அ.தி.மு.வுக்கு 33 எம்.பிக்கள் இருந்தால், பேரம் பேசி துணைப்பிரதமர் அல்லது பிரதமர் பதவியைக் கோரலாம் என்பதே அவரது திட்டம். கடைசியில் இருந்த 10 எம்.பிக்களையும் இழந்து நிர்க்கதியாகிவிட்டார் ஜெயலலிதா.

அதைவிடவும் அருக்குப் பெரிய பிரச்சினை சோனியா தலைமையிலான காங்கிரஸ் கட்சி மத்தியில் வெகு இலகுவில் பதவிக்கு வந்திருப்பதே. சோனியா பிரதமராகவேமாட்டார் என்ற அந்த அதீத நம்பிக்கையில் அவரை கேவலமாக பேசி வந்தார் ஜெயலலிதா. இப்போது அவருக்கு குலைநடுக்கம் எடுத்திருக்கிறது.

சோனியா வென்றது மட்டுமன்றி அவர் பிரதமர் பதவியைத் துறந்ததனால் இந்தியப் பத்திரிகைகளும், பி.ஜே.பி தவிர்ந்த ஏனைய கட்சிகளும் சோனியாவை வானளாவப் புகழ்ந்து வருகின்றன. மன்மோகன் சிங் பிரதமர் என்றாலும் சோனியாதான் பின்னணியில் சகல முடிவுகளையும் எடுக்க இருக்கிறார்.

ஜெயலலிதா அரசைக் கலைக்குமாறு ஏற்கனவே ராமதாஸ் வலியுறுத்திவருகிறார். ம.தி.மு.கவும் வைகோவை சிறையிட்ட கோபத்தில் அத்தகைய ஆட்சிக் கலைப்பை எதிர்க்காது. தி.மு.க.வைப் பொறுத்தவரை 356 ஆவது அரசமைப்புச்சட்டத்தைக் கொண்டு மாநில அரசுகளை கலைப்பதை எதிர்த்து வந்ததனால் ஆட்சியை கலைக்கும்படி கோரத்தயங்குகிறது. இதனால் தி.மு.க பகிரங்கமாக ஆட்சியைக் கலைக்கும்படி கோராது.

ஆகவே, ஆட்சியை கலைப்பது என்று காங்கிரஸ் கட்சி முடிவெடுத்தால் தி.மு.க ஒன்றும் தெரியாதது போல் அதற்கு ஆதரவு தெரிவித்து விடலாமெனத் தெரிகிறது. எனினும் இங்கு முக்கியத்துவம் பெறுபவர்கள் கம்யூனிஸ்ட்டுகள். காங்கிரஸ், தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளுக்கு 214 லோக்சபா எம்.பிக்களே உண்டு. 356 ஆவது சட்டத்தின் மூலம் மாநில அரசொன்றைக் கலைப்பதாயின் லோக்சபா, ராஜ்யசபா இரண்டிலும் ஆட்சிக்கலைப்புத் தீர்மானம் அரைவாசி உறுப்பினர்களால் ஆதரிக்கப்பட வேண்டும். லோக்சபாவில் தீர்மானம் நிறைவேற 270 உறுப்பினர் தேவை. இதைப் பெற கம்யூனிஸ்டுக்களின் 62 எம்.பிக்களும் ஆதரவளித்தாலே முடியும்.

கடந்த காலங்களில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாநில அரசு ஒன்றை மத்திய அரசு 356 ஆவது சட்டத்தைக் கொண்டு கலைப்பது ஜனநாயகவிரோதம் என கம்யூனிஸ்ட்டுகள் கருத்துத் தெரிவித்து வந்தனர். எனினும் ஜெயலலிதா இந்து மத தீவிரவாதியாகத் தன்னை காட்டிக் கொள்ள விரும்பி எடுத்த நடவடிக்கைகள் கம்யூனிஸ்டுகளின் ஆத்திரத்தை பெரிதும் கிளறியுள்ளது.

இந்திய கம்யூனிஸ்டுகளின் மதசார்பற்ற சமத்துவக் கொள்கை உலகறிந்தது. வேறெதை விட்டுக் கொடுத்தாலும் மதசமத்துவத்தை உயிரைக் கொடுத்து காப்பவர்கள் அவர்கள். காங்கிரஸ் அரசை அவர்கள் ஆதரிக்கக் காரணமே பி.ஜே.பியை அழிக்க காங்கிரஸைவிட்டால் வேறுமார்க்கம் இல்லை என்பதால்தான். எனவே ஜெயலலிதா இந்துவெறி ஆடியது கம்யூனிஸ்ட்டுகளுக்கு தாங்கமுடியாத ஆத்திரத்தைத் தந்துள்ளது.


ஜெயலலிதா

இதனால் அவரை அகற்றும் முடிவை கம்யூனிஸ்ட்டுகள் அங்கீகரிக்கவும் கூடும். அதாவது இனிவரும் நாட்களில் தனது மதவெறியாட்டத்தை ஜெயலலிதா கைவிடக்கூடும். அவ்வாறு செய்யாவிடின் கம்யூனிஸ்ட்டுகள் அவரது ஆட்சியை கலைக்கும்படி காங்கிரஸுக்கு பச்சைக்கொடி காட்டிவிடுவார்களென்பது நிச்சயம்.

இந்தப் பயத்தினால்தான் ஜெயலலிதா அவசர அவசரமாக தனது அடாவடிச் சட்டங்கள் எல்லாவற்றையும் ரத்துச்செய்துள்ளார்.

ஒருவேளை ஆட்சிகலைக்கப்பட்டுத் தேர்தல் வந்தாலும் மக்கள் ஆதரவை மீளப் பெற்று வைத்துக் கொள்வது முக்கியமென அவர் அறிந்துள்ளார். லோக்சபா தேர்தலைப் போல் வாக்களிப்பு நடந்தால் ஜெயலலிதா ஆட்சியை இழப்பது நிச்சயம். எனவே மீண்டும் மக்கள் ஆதரவு நடவடிக்கைகளில் அவர் இறங்கலாம்.

புதிய அரசின் முதல் நடவடிக்கையாக பொடா சட்டத்தை ரத்துச் செய்யும் ஆலோசனைகளை காங்கிரஸின் சட்ட அமைச்சர் எச்.ஆர்.பரத்வாஜ் தொடக்கியுள்ளார். ம.தி.மு.க.வின் முக்கியமா கோரிக்கையான இது குறித்து கூட்டணிக் கட்சிகளிடையே ஒருமித்த கருத்து ஏற்பட்ட பின் இதற்கான நடவடிக்கைகளை காங்கிரஸ் எடுக்கும் எனத் தெரிகிறது.

ம.தி.மு.க மத்திய அமைச்சரவையில் பங்கேற்க முதலில் மறுத்தது கூட பொடா சட்டத்தை ரத்துச் செய்வதை உறுதி செய்யத்தான். பி.ஜே.பி. அரசில் ம.தி.மு.க. இருந்தும் வைகோ சிறை செல்வதை பி.ஜே.பி அரசு தடுக்கவில்லை. எனவே இம்முறை அமைச்சரவையில் சேராமல் பொடாவை ஒரு வழிபண்ணுவதென வைகோ தீர்மானித்துள்ளதாக தெரிகிறது.

இதேவேளை வரலாற்றில் இல்லாதவகையில் தமிழகத்திலிருந்து 12 பேர் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளனர். காங்கிரஸின் சிதம்பரம், மணிசங்கர் ஐயர், தி.மு.கவின் ராஜா, பாலு, தயாநிதிமாறன் ஆகியோர் அமைச்சர்களாகவும் முன்னாள் தமிழக காங்கிரஸ் தலைவர் இளங்கோவன், தி.மு க.வின் சுப்புலட்சுமி ஜெயதீசன் உள்ளிட்ட 7 பேர், பா.ம.கவின் ஒருவர் ஆகியோர் இணைஅமைச்சர்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். பா.ம.க தலைவர் ராமதாஸின் மகன் டாக்டர் அன்புமணி சுகாதார அமைச்சராகியுள்ளார். மூத்த காங்கிரஸ் தலைவர் நட்வர் சிங் வெளியுறவு அமைச்சராகவும் சிவ்ராஜ் பட்டீல் உள்துறை அமைச்சராகவும் சிதம்பரம் நிதியமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

-எஸ். சுரேந்திரஜித்-

---

# தன் குழந்தையை விற்க மறுத்தவர் சிறையில்

இங்கிலாந்து நாட்டின் வடக்குப் பகுதியை சேர்ந்தவர் மவுரியா கிரீன்ஸ்லேட் (வயது 33). இந்தப் பெண் கருவுற்று இருந்தார். தனக்கு பிறக்கப் போகும் குழந்தையை விற்க அவர் முடிவு செய்தார். இது பற்றி இன்டர்நெட்டில் அறிவித்தார்.



ஸ்கொட்லண்ட் நாட்டை சேர்ந்த மார்க் — மைக்கேல் ஜான்சன் தம்பதிகள் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் மவுரியா கிரீன்ஸ்லேட்டை இண்டர்நெட் மூலம் தொடர்பு கொண்டனர். பிறக்கப் போகும் குழந்தையை தாங்கள் வாங்கிக் கொள்வதாக மவுரியா கிரீன்ஸ்லேட்டிடம் அவர்கள் கூறினார்கள்.

தனக்கு பிறக்க இருக்கும் குழந்தையை மவுரியா கிரீன்ஸலேட் ரூ 4 லட்சத்து 65 ஆயிரத்துக்கு விலை பேசினார். இதை ஏற்றுக் கொண்ட அந்த தம்பதிகளிடம் இருந்து ரூ. 78 ஆயிரம் முற்பணமாக அவர் பெற்றுக் கொண்டார்.

இதேபோல் நோர்த் வேல்சில் உள்ள ஹூஉட்சன் நகரைச் சேர்ந்த பீட்டர் — ராபின்சன் — ஹட்சன் தம்பதிகளும் குழந்தை வாங்க ஆசைப்பட்டனர். இன்டர்நெட் மூலம் மவுரியா கிரீன்ஸ்லேடிடம் தொடர்பு கொண்டு பேசினர் அவர்களிடமும் குழந்தையை ரூ4 லட்சத்துக்கு விலை பேசி ரூ. 50 ஆயிரம் முற்பணம் பெற்றுக் கொண்டார்.

மவுரியா கிரீன்ஸ்லேட் தனக்கு பெண் குழந்தை பிறப்பதற்கு சிறிது நேரத்துக்கு முன்பு அந்தக் குழந்தையை விற்பதற்காக செய்திருந்த 2 ஒப்பந்தங்களையும் ரத்துச் செய்தார். இதனால் ஆத்திரம் அடைந்த பீட்டர் — ராபின்சன் ஹட்சன் தம்பதியினர் பொலிஸில் புகார் செய்தனர்.

பொலிஸார் மவுரியா கிரீன்ஸ்லேடை கைது செய்து வழக்கு தொடர்ந்தனர். வழக்கை விசாரித்த நீதிபதி ரிச்சர்ட் ஹென்கிக்ஸ் குழந்தை பிறப்பதற்கு முன்பே குழந்தையை விற்க விலை பேசி முற்பணமும் வாங்கி பின்னர் அவர்களை ஏமாற்றிய குற்றத்துக்காக அந்தப் பெண்ணுக்கு 2 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பு கூறினார்.


## 'சுடர் ஒளி' வார மலர் விளம்பரக் கட்டணம்

| அளவு | கறுப்பு/வெள்ளை | கலர் |
|---|---|---|
| முழுப்பக்கம் | ரூ.30,000.00 | ரூ. 45,000.00 |
| அரைப்பக்கம் | ரூ.15,680.00 | ரூ. 23,520.00 |
| C.M. | ரூ. 98.00 | ரூ.147.00 |
| Page Specified C.M.Cl | ரூ.122.50 | ரூ. 183.75 |
| Contract ADV. | ரூ. 70.00 | ரூ. 110.00 |
| (250-300 Col. Cms) | | |

# விடுதலைக்கு வித்தாகிய தமிழீழ மாணவர் எழுச்சி

''தாயக விடுதலைக்காக தம்மை அர்ப்பணிக்கும் தெரிவிற்கும், கல்வி கற்பதற்கான உரிமைக்கும் இடையில் நாம் என்றுமே முரண்பாட்டை கற்பிக்க முயலவில்லை. இரண்டுமே எமது சமூகத்தின் வாழ்வியக்கத்திற்கு இன்றியமையாதவை''. இது தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் உள்ளத்துச் சிந்தனை.

ஒரு தேசத்தின் மாபெரும் சொத்தாகத் திகழும் மாணவர் அணியினை தீமைச்சேற்றுக்குள் மாண்டு போக விடாது மண்பற்று, மொழிப்பற்று ஊட்டி தூய்மை மிகு சமுதாயமாக நற்பயன் தரும் நல்மரங்களாக உருவாக்கி எடுப்பதில் தேசியத் தலைவர் அவர்கள் கண்ணும் கருத்துமாக இருப்பதை எல்லோருமே ஏற்றுக் கொள்வர்.

துடிதுடிப்பும், செயற்திறனும் சரியான முறையில் கையாளப்பட வேண்டியதுமான பலம் மிக்க வீரர்களே மாணவர்கள். எந்த ஒரு நாட்டிலும் அதிகமாக அநீதிகளை தெளிவாகப் புரிந்து அடக்கு முறைகளை ஆராய்ந்து புரட்சிகளை ஏற்படுத்தும் அத்திவாரங்கள் மாணவர்களாகவே இருக்கிறார்கள். இவர்களின் குரல்கள் எண்திசையெங்கும் அதிர்வொலியாய்ச் செல்ல முக்கிய காரணமாக, ஒருமித்த பலமாக இருப்பதுதான் இவர்களின் சிறப்பம்சம்.

இப்படியாக மாணவப் பருவத்தில் அடக்கு முறைகளை உடைத்தெறிந்து சிறகு விரிக்கும் ஆசையுடன் பறக்கத் துடிப்போரே பிற்காலத்தில் கொள்கை வீரராய் மக்கள் தலைவராய் உருவானதைத்தான் கண்டுவந்துள்ளோம். இதற்கு தமிழீழம் மட்டுமன்றி ஏனைய உலக நாடுகளும் சான்றாகின்றன.

தமிழீழ மாணவர்களின் இன்றைய எழுச்சிக்கு ஏற்றமாய் இருப்பவர் தியாகி பொன் சிவகுமாரன் அவர்களே. அந்த மாணவ மணியின் ஒலி இன்று தமிழீழ மாணவரின் உள்ளங்களில் எல்லாம் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

மாணவனாக இருந்த காலத்திலேயே மண்பற்றும், இனப்பற்றும் ,தமிழ் மொழிப்பற்றும் இவனது இதயத்தில் இருப்பிடம் கொண்டதால் ஸ்ரீலங்கா அரசின் வஞ்சகம் மிக்க பச்சைக் கொடிகளுக்கு கறுப்புக்கொடி காட்டினான்.

இவனது மாணவர்பேரவை அடித்த ஆராய்ச்சி மணிகளுக்கு நல்ல தீர்ப்பு வழங்க ஸ்ரீலங்கா அரசில் சோழ மன்னர்களா இருந்தார்கள்? 1972 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட புதிய அரசமைப்புச் சட்டம் மற்றும் கல்வியில் கொண்டு வரப்பட்ட தரப்படுத்தல் முறைமை சினந்து கொண்டிருந்த இவனையும் இவன் அணியையும் சீறிப்பாய வைத்தன. மேற்படி இரண்டுமே தமிழ் மக்களை முக்காடு போடவைத்து மூலையில் உட்கார வைக்கும் செயல்களாகவே அமைந்தன.

அடக்குமுறைகளுக்கு அடிபணியாத அவன் தேடப்பட்டான். அவ்வப்போது உரிமையைத் தரமறுத்த அரசின் கைக்கூலிகள்மீது இவன் தலைமையில் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. உதாரணமாக தேசத் துரோகி அல்பிரட் துரையப்பாவைக் கொலை செய்யும் நோக்குடன் அந்தத் துரோகியின் காருக்குள் இவன் தானே தயாரித்து வைத்த குண்டு வெடித்ததும் அந்தச் சந்தர்ப்பத்தில் துரோகி, துரையப்பா காருக்குள் இல்லாததால் தப்பித்ததும் இதை ஆதாரமாக வைத்து இவன் தேடப்பட்டதும் பொலிஸாரிடம் பிடிபட்டபோது தனக்கு உதவி செய்தவர்களைக் காட்டிக் கொடுக்காது சித்திரவதைகளை அனுபவித்து இரண்டரை ஆண்டுகள் சிறையிலிருந்து வந்ததும் இவன் உறுதிக்கும், பற்றிற்கும் சான்றுகளே.


சிவகுமாரன்

இப்படியான வேளைதான் 05.06.1976 ஆம் ஆண்டு கோப்பாய் சுற்றி வளைப்பில் அந்நிய சக்திகளிடம் அகப்படாது தானே வகுத்துக் கொண்ட அந்தக்கொள்கை வரம்புக்கமைய சயனைட் உட்கொண்டு சாவடைந்தான் அந்த தமிழ் மாணவன்.

சுருக்கமாகக் கூறப்பட்ட இவன்கதை மிக நீண்டது. இவன் வைத்த அடிகளும் நீண்டு கொண்டே செல்கின்றன. இவன் நினைவுடன் தமிழீழ மாணவர் எழுச்சி நாள் ஜூன் ஆறாம் திகதி எழுச்சிக்குரலாக ஒலிக்கின்றது.

இதுவரையும் ஸ்ரீலங்கா அரசு தான் கூறிக் கொள்ளும் கல்வியில் சம வாய்ப்பு என்ற வாசகத்தை நடைமுறைப்படுத்த முயற்சி எடுத்ததாக இல்லை.

மண் விடுதலையுடன் கற்றலிலும் விடுதலை பெற மாணவர் சமூகம் எப்போதும் குரல் கொடுப்பதை உணர்த்தும் ஓர் நாளே இவ்வெழுச்சி நாள்.

உலகத்து மாணவருள் தமிழீழ மாணவர்கள் பட்ட துன்பங்கள் கல்நெஞ்சத்தையும் கரைப்பவை. பள்ளிகளில் இருந்து படிக்க விடாத இனவெறி இராணுவம் இடம்பெயர்ந்து மரநிழலில் கூட கல்விகற்க அனுமதிக்காத மாபெரும் வஞ்சகமும் எம்மண்ணிலேயே நடந்தது.

பரீட்சை எழுதிக் கொண்டிருக்கும் போதே விமானங்கள் வீசிய குண்டுகள் எத்தனை? உதாரணமாக யாழ். நாகர் கோவில் பள்ளியில் ஸ்ரீலங்கா விமானப்படை வீசிய குண்டுகளால் உயிர் துறந்தும், இப்போதும் அங்கவீனர்களாகவும் உள்ள மாணவர்கள் எத்தனை?

பசிக்கொடுமைக்கு மத்தியிலும் படித்த எம் தமிழ் மாணவர்கள் இராணுவக்கொடுமைகளை என்றுமே ஏற்றதில்லை. அதனால்தான் அவர்கள் பேனாக்களை வைத்துவிட்டு சுடு குழல்களை தூக்கினர். சிறுவர் உரிமை பற்றியும், கல்வி பற்றியும் பேசும் எத்தனையோ வாய்கள் இன்று தம்மை உலகத்து நீதி தேவர்களாகக் காட்டிக் கொண்டாலும் உணவில்லா நெருக்கடியிலும் தலைவர் வே.பிரபாகரன் உறவில்லா உறவுகளை அணைத்து கல்வி புகட்டியதும் அடைக்கலம் தந்து ஆறுதல் கொடுத்ததும் நெஞ்சமெலாம் நின்று நிலைத்திருக்கும் செய்திகளாகும்.

தமிழீழ போராட்ட சக்கரச் சுழற்சியில் மாணவர் பங்கு மகத்தானது. அரசியல் ஆயுத வெற்றி இரண்டிலும் இவர் பங்கு பெரிது. போர்க்காலங்களில் விழுப்புண் அடைந்த வேங்கைகளுக்கு குருதி வழங்கியும், களமுனை சென்று உணவு கொடுத்தும் களப்பணிகள் புரிந்தும் பயிற்சிகள் பெற்றும் தேசம் காத்த இவர்களுக்கு தனியான வரலாறு உண்டு.

இன்று கூட ஈழத்தமிழர் உணர்வை எண்திசையும் காட்ட எம் தமிழ் மாணவர்கள் எழுச்சியுடன் செய்த செயல்கள் எத்தனை? இந்த எழுச்சியில் பொங்குதமிழ் எழுச்சி போற்றத்தக்கதும் குறிப்பிடத்தக்கதும் ஆகும். இப்படி காலத்துக்கேற்றவாறு கடமை புரிவதில் இவர்களுக்கு நிகர் இவர்களே.

இன்றுகூட தாயக விடுதலைப் போரில் மாணவர்களாக இருந்து புலிகளாக மாறிய எத்தனையோபேர் விடுதலைப் படையணியில் புகழ்பூத்த மருத்துவர்களாக தொழில் நுட்பவியலாளர்களாக, பொறியியலாளர்களாக, மொழி மற்றும் வரலாற்று ஆராய்ச்சியாளர்களாக, சட்டம் நீதி இவற்றில் முன்னோடிகளாக, கலை இலக்கியவாதிகளாக, போர்ப்படைத் தளபதிகளாக, இன்னும் எத்தனையோ துறைகளில் ஈடுபட்டுள்ளமை தலைவர் அவர்களின் கல்வி மீதான அரும்பணிக்கான சான்றுகளாகும். இந்த உலகில் நீரும், ஆகாரமும் இன்றி விடுதலைக்காக உண்ணாநோன்பிருந்து வீரச்சாவடைந்த ஒரே தியாகி லெப். கேணல் திலீபனும் கூட ஒரு பல்கலைக்கழக மருத்துவபீட மாணவனே.

நிச்சயம் தேசியத் தலைவர் அவர்கள் தமிழீழ மாணவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுப்பார். பொய்மை வரலாறுகளுக்குள்ளும் கலப்பு மொழிகளுக்குள்ளும் கட்டுண்டு போயிருக்கும் மாணவர்களுக்கு உண்மை வரலாறும் தூய்மை மொழியும் கிடைக்க தலைவரால் உருவாக்கப்பட்ட பல பிரிவுகள் பல்வேறு ஆராய்ச்சிப்பணிகளில் ஈடுபட்டுள்ளன. சுவாமி விபுலானந்தர், ஆறுமுக நாவலர் போன்றோர் தமிழ் மொழியை வளர்க்க அரும் பாடுபட்ட போதிலும அவர்களுக்குப் பின்னால் போதிய சக்திகள் திரளாமையானது அந்த முயற்சிகளுக்குக் குறுக்கே பாறாங்கல்லைப் போட்டது போன்றாகி விட்டது. ஆனால் தலைவரின் இந்த முயற்சியில் பல வெற்றிகள் கிடைத்துள்ளதுடன் ஒருமித்த தமிழ் சமூகத்தினரில் குறிப்பாக மாணவர்களின் பங்களிப்புமிகவும் காத்திரமானதாக இருக்கிறது.

வெறுமனே புத்தகப் பூச்சிகளாக மாணவர்கள் இருப்பதைவிட்டு எழுச்சியுடன் கூடிய மொழி, இன, தேசப்பற்று மிக்கவர்களாக அவர்களை உருவாக்கி விடுதலைப்போரின் சக்திகளாக மாற்றியமைத்த பெருமை தமிழீழ மாணவர் அமைப்பினையே சாரும். இவ்வமைப்பை ஆரம்பத்தில் மாவீரர் மேஜர் முரளி அவர்கள் சிறப்பாக வழிநடத்தியவர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

காலம் மாறும் மாணவர் கனவுகள் ஈடேறும். உலகில் எத்தனையோ தினங்கள் இருந்தாலும் மாணவர்களுக்கென்று ஓர் தினம் இல்லை. நிச்சயம் என்றோ ஒரு நாள் இந்த எழுச்சி நாள் உலகமெல்லாம் நடக்கும். தேச விடுதலைக்கு தமிழீழ மாணவர்கள் எப்போதும் கைகொடுப்பர். அவர்களுக்கு எங்கள் தலைவன் நல்லதொரு தேசத்தை அமைத்துக் கொடுப்பான்.

-வோ.புரட்சி-

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | சக்தி செய்திகள் | அன்பு மடல் |
| 7.05 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | அன்பு மடல்/பாடல்கள் 7.10 | காலைக்கதிர் |
| 7.30 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | சங்கீதமேடை | காலைக்கதிர் |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நேரம் |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | கிட்ஸ் மூவி | சிறுவர் நேரம் |
| 9.00 | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | கோலங்கள் | குட்டி சுட்டி | ஸ்டார் சமையல் |
| 9.30 | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | குட்டி சுட்டி | அரட்டை அரங்கம் |
| 10.00 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்குப் பாட்டு | நம்மநேரம் | கொண்டாட்டம் | களம் | சப்த ஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கீதங்கள் | இசைத் தென்றல் | திரைவானம் | டொப் 10 மூவி |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மறக்க முடியுமா | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிகெட் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | சுப்பர் சீன்ஸ் | திரை விமர்சனம் | மீண்டும் சிரிப்பு | பிரபலன்கள் ரசித்தவை | ரிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | செய்திகள்(எம்.ரீவி) | ரிலாக்ஸ் டைம் | ஸ்டார்ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் எண்ட் மேட்னி | வீக் எண்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | மங்கை | வீக் எண்ட் மேட்னி | வீக் எண்ட் மேட்னி |
| 2.00 | (றொமான்ஸ்) | (அக்சன்) | (கொமடி) | (கிளசிக்) | மங்கை | வீக் எண்ட் மேட்னி | வீக் எண்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் எண்ட் மேட்னி | வீக் எண்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் எண்ட் மேட்னி | வீக் எண்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் எண்ட் மேட்னி | வீக் எண்ட் மேட்னி |
| 4.00 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | கில்லி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | ஜீ பூம்பா |
| 4.30 | கார்ட்டூன் நிகழ்ச்சி | கி--மேன் | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | சக்தி மேட்னி | விக்கிரமாதித்தன் | ஒப்போடு |
| 5.00 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் ஸ்பெஷல் | சுப்பர் சீன்ஸ் | என்றும் கலாட்டா | கொமடி நிகழ்ச்சி | வேலன் |
| 5.30 | இசைத்தென்றல் | இசைத்தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இசைத் தென்றல் | இப்படிக்கு நீங்கள் அன்பு மடல் 5.45 | அன்பு மடல் 5.45 |
| 6.00 | களம் | இளைய கானம் | ஒப்போடு | பாடல்கள் | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிகெட் | TO BE CONFIRMED | மின்னல் |
| 6.30 | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | குங்குமம் | TO BE CONFIRMED | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | அலைய்ஸ் | "24" |
| 7.30 | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | (அக்சன் சீரியல்) | அக்சன் சீரியல் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | சித்தி | ருத்ர வீணை | இளைய கானம் |

## மசாலா மிக்ஸ்

## தடுமாற வைக்கிறது கடல் அலையின் வேகம்!



கடல் அலைமீது மிதவைக் கட்டைகளில் மிதந்து வேகமாகச் சறுக்கிச் செல்லும் விளையாட்டு துணிகரம் மிக்கது. தண்ணீரில் மிதக்கவும் வேண்டும். அதேவேளையில் நிலை தடுமாறி தண்ணீரில் மூழ்கிவிடாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும். அவுஸ்திரேலிய வீரர் ஜன் மொரிஸன் ஏ.எஸ்.பி. உலகக் கிண்ணத்தைச் சுவீகரிப்பதற்காக கடல் அலையின் வேகத்தினால் தடுமாறிவிடாமல் வேகமாகச் சறுக்கிச் செல்லும் காட்சி.

## பன்றி அழகியின் நீச்சல் வித்தை!



பன்றிகள் சேற்றில் புரண்டு எழுந்து சூழலை அசுத்தமாக்கிவிடும் தன்மை கொண்டவை என்றே நாம் அறிந்திருக்கிறோம். ஆனால், பன்றிகள் மத்தியில் நீச்சல் போட்டியே நடத்தி அசத்தியிருக்கிறார்கள் சிட்னியில். பன்றிக் குட்டிகளை மூன்று தண்ணீர்த் தொட்டிகளில் குதித்து எழச் செய்து போட்டி நடத்தப்பட்டது. பிறந்து 20 வாரங்களேயான அழகி எனப்படும் பன்றிக் குட்டி இரண்டாவது தொட்டியிலிருந்து எழுந்து தேகத்தைக் குலுக்கிக் கொண்டு மூன்றாவது தொட்டியில் பாய்வதற்கு தயாராகும் காட்சி இது.

## மின்னல் வேகத்தில் பனிமீது சறுக்கல்



பனிபடர்ந்த மலைச் சிகரத்தில் பனிச்சறுக்கல் போட்டி நடத்துவது மேல் நாட்டவர்களுக்கு மிகவும் பிடித்தமான விளையாட்டு ஆகும். கால்களில் பொருத்தப்பட்ட சட்டங்கள் பனி மீது மின்னல் வேகத்தில் சறுக்கிச் செல்லும். கைகளில் தாங்கிய துடுப்புகளால் பனி மீது துளாவி வேகத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். இவ்வாறு பனிச்சறுக்கலில் சாதனை படைக்க சுவிஸ் வீரர் நாடியா ஸ்டைகர் முயலும் காட்சி இது.

## டைட்டானிக் கப்பலின் பொருட்கள் ஏலத்தில்



சென்ற நூற்றாண்டின் ஆரம்பத்தில் புத்தம் புதிதாக உருவாக்கப்பட்டு அதன் கன்னிப் பயணத்தின் போதே கற்பாறையில் மோதிக் கடலில் மூழ்கியது ''டைட்டானிக்'' கப்பல். அந்த வரலாற்றைச் சித்திரிக்கும் திரைப்படமும் அண்மையில் வெளியிடப்பட்டது. கடலில் மூழ்கிய ''டைட்டானிக்''கப்பல் சிதைவுகளிலிருந்து மீட்கப்பட்ட சில பொருட்கள் நியூயோர்க்கில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. இந்தப் பொருட்கள் அடுத்த மாதம் ஏலத்தில் விடப்படவுள்ளன.

## உலக நாட்டு அழகிகள் ஒன்று கூடிய காட்சி



உலக அழகிப் போட்டியில் ஒருவரோடு ஒருவர் மோதிப் பலப்பரீட்சை நடத்துவதற்காக கூடியுள்ள உலக நாட்டு அழகிகள் ஒரே இடத்தில் சந்தித்த காட்சி இது. ஈக்குவடோரிலுள்ள ரொட்டொன்டா நினைவரங்கில் கூடியுள்ள இந்த அழகிகளில் உலக அழகியாகத் தெரிவாகவுள்ள அழகியார்?

## ஒளிந்திருக்கும் முகம் எது?



மே 17 , சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்தமுகம் நடிகை டயானா.சரியானவிடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் வருமாறு:

1. மு.கலியுகன், டச்சு வீதி, சாவகச்சேரி. 2.சி.சிவா, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு. 3.ந. லோகேஸ்வரன், கண்டி வீதி, மீசாலை. 4. சி.வான்விழி, வேப்பங்குளம், வவுனியா. 5.ந.கரன், மன்னார்.

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிர்ஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்தவாரம் ஒளிந்திருக்கும் இந்த உருவம் யாருடையது?

இவர் பார்த்தீபனின் குருடன் படத்தின் மூலம் அறிமுகமாகி ஓரிரு படங்களில் மட்டும் நடித்த நடிகை.

இந்த முகத்திற்குரிய நடிகையைக் கண்டுபிடித்து, அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் எங்கள் புதிய முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

# பித்தன் பதில்கள்

*வி.ஜனனி – கரணவாய்.*

**கேள்வி:–** அன்பின் பித்தா, உங்கள் வாழ்க்கையின் திடீர்த் திருப்பம் எது!

**பதில்:–** பித்தன் பதில் எழுதத் தொடங்கியது தான்.



*கண்மணி – பண்ணாகம்.*

**கேள்வி:–** பித்தா, நீர் இந்நாட்டு ஜனாதிபதியானால் முதல் வேலையாக என்ன செய்வீர்?

**பதில்:–** நான் எங்கே ஜனாதிபதியாவது! நான் தான் தமிழன் ஆச்சே.

*சு.சுரேகா – கிளிநொச்சி.*

**கேள்வி:–** Dear பித்தா, ஒரு ஆண், ஒரு பெண்ணுடன் சகோதரம் போல அதிக பாசம் வைத்துப் பழகுவதைப் பற்றி தாங்கள் என்ன சொல்ல நினைக்கிறீர்கள்?

**பதில்:–** நல்ல கண் கொண்டு பார்த்தால் பிழை என்று கூறமாட்டார்கள். குற்றம் செய்பவர்களது கண்களுக்கு தொட்டதெல்லாம் பிழையாகத் தான் இருக்கும். இந்த உலகம் ஆயிரம்சொல்லும். எமக்கு சரி என்று பட்டதைச் செய்வது தான் நல்லது என்பது எனது தாழ்மையான அபிப்பிராயம்.

*க.மதிவதனன் – யோகபுரம்.*

**கேள்வி:–** கூட்டமைப்பாகப் பெரும் வெற்றி பெற்று 22 தமிழ்நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவாகியுள்ளனர். ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரும் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவதில் மும்முரமாக உள்ளார். தமிழ் அரசியல் கைதிகளின் நிலை மாறுமா?

**பதில்:–** உமது கேள்வியில் அரசியல் என்ற சொல் வந்ததால் பதில் கூறப் பயமாயுள்ளது. அரசியலுடன் சம்பந்தப் பட்டவர்களை இப்போது கடத்துகிற சீசனாமே.

*வ.செல்வன் – புதுக்குடியிருப்பு.*

**கேள்வி:–** பித்துக்குட்டி, உங்கள் பதில்களின் இடையிடையே கேள்வி கேட்பவர்களின் பெயர்களும் வருகின்றனவே. அது போல என் பெயரையும் ஒருமுறை சொல்லுங்களேன்?

**பதில்:–** செல்வன் உமது பெயரை உமது சுற்றத்தார், உற்றத்தார், நண்பர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், ஆர்வலர்கள், பெற்றார், பிறத்தியார் யாருமே அழைப்பதில்லையா?

*பி.பிரபாஜினி – முல்லைத்தீவு.*

**கேள்வி:–** சந்தேகப்பட்டு உறவுகளைப் பிரிக்கப் பார்ப்பவர்களை என்ன செய்யலாம்?

**பதில்:–** எத்தனையோ வழிகள் இருக்கின்றனவே. சாம, பேத, தான, தண்ட முறைகளைக் கையாண்டு பார்க்க வேண்டியது தான்.

*சுதா – யாழ்.பல்கலைக்கழகம்.*

**கேள்வி:–** உலகில் அதி உயந்த செல்வம் எது பித்தா?

**பதில்:–** நல்ல உறவுகள் தான்.

*தே.றஞ்சனா – குடத்தனை வடக்கு.*

**கேள்வி:–** பித்தா, ஜோக் Please?

**பதில்:–** ஒரு தனியார் வண்டி ஒன்று வேகமாகப் போய்க் கொண்டிருந்தது. போய்க் கொண்டிருந்த வேகத்தில் அது விபத்துக்குள்ளாகியது. வண்டி மிக மோசமாக சேதமடைந்தது. பயணிகள் படுகாயம் அடைந்தார்கள். உடைவுகளினிடையே இருந்து பயணிகளின் அவலக் குரல் வந்த வண்ணம் இருந்தது.

நடத்துனரும் படுகாயமடைந்து உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார். உதவி தேடித் தவழ்ந்து வந்து கொண்டிருந்தார். அப்போது அவரருகே ஓர் உருவம் வந்து ''ஐயா நடத்துனரே, என்னைப் பாரும். என்னைத் தெரிகிறதா? எனக்கு நீர் ஒரு ரூபாய் மீதி தர வேண்டும்'' என்றது.

*ப.சன்னாசி – செல்வநகர்.*

**கேள்வி:–** பித்தன் தம்பி, மதகுருமார்கள் எல்லோரும் நாடாளுமன்றத்துக்கு சென்று விட்டால் வழிபாட்டுத் தலங்களை யார் கவனிப்பது?

**பதில்:–** இந்தக் கேள்வி நாடாளுமன்றத்துக்குச் சென்றவர்களுடைய மனதிலும் தோன்றித்தான் போலும் திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள்.



*மலர் – ஆழியவளை.*

**கேள்வி:–** கஷ்டப்பட்ட குடும்பத்தில் பிறந்த பெண்கள் காதலிக்கவே கூடாதாம். இது என்னை விரும்பியவர் எனக்கு கூறிய பதில். இது உண்மையா பித்தா? (அவர் கஷ்டப்படும்போது நானும் அவரும் விரும்பி இருந்தோம். இப்போது அவர் வசதியாக உள்ளதால் இப்படி கூறுகிறார்.)

**பதில்:–** ஓடமும் ஒரு நாள் வண்டியில் ஏறும். வண்டியும் ஒரு நாள் ஓடத்தில் ஏறும். பொறுமையாக இரும். காலம் ஓர் நாள் மாறும்.

*புவிதா – திருநெல்வேலி.*

**கேள்வி:–** நாகரிகமென்ற வலைக்குள் சிக்கியிருக்கும் இன்றைய சமுதாயம் பற்றி உங்கள் கருத்து என்ன?

**பதில்:–** நாகரிகம், அநாகரிகமாக மாறாமல் இருக்கும் வரை நாகரிகம் நல்லது. நாகரிகம் என்ற பெயரில் இடம்பெறும் அநாகரிகங்கள் தான் வன்மையாகக் கண்டிக்கத் தக்கன என்பது எனது கருத்து.



*நிலாணி – யாழ்ப்பாணம்.*

**கேள்வி:–** பித்தா, எனது கனவில் கில்லி த்ரிஷா வருகிறாரே உமது கனவில் வருவதில்லையா?

**பதில்:–** எனது கனவில் பின்வீட்டு பிருந்தா தான் வருகிறாள்.

*ஆ.பேபி – முழங்காவில்.*

**கேள்வி:–** கிரிக்கெட்டில் உலக சாதனை படைத்த முத்தையா முரளி தரனுக்கு பரிசு வேண்டிக் கொடுத்தீர்களாம், என்ன வேண்டிக்கொடுத்தீர்கள்?

**பதில்:–** சாப்பிட முடியாது. குடிக்க முடியாது. எறிந்தால் உடையாதது. ஆனால் அவருக்கு உதவக் கூடியது அது தான் வாங்கிக் கொடுத்தேன் நீரே கண்டு பிடியும்.



*ஞா.அழகரசன் – புதுக்குடியிருப்பு.*

**கேள்வி:–** டியர் பித்தா! உள்ளூர் அகதிக்கும் வெளிநாட்டு அகதிக்கும் என்ன வித்தியாசம்?

**பதில்:–** உள்ளூர் அகதிகள் என்பவர்கள் உணவிற்கே திண்டாட்டமான நிலையில் இருப்பவர்கள். வெளிநாட்டு அகதிகள் என்பவர்கள் அங்கு அதிகளாக இருப்பவர்கள். உள்நாட்டு அகதிகள் பிச்சை எடுக்கிறார்கள். வெளிநாட்டு அகதிகள் பிச்சை போடுகிறார்கள். இது தான் வித்தியாசம்.

*ஜி.பொன்கலன் – பண்டத்தரிப்பு.*

**கேள்வி:–** பித்தா, வயது போன பெண்கள் தலைமுடி நரைத்தாலும் கறுத்த முடிமயிர் பாவிப்பதேன்?

**பதில்:–** முதுமைக்கு அது தான் அழகு என்ற நிஜம் தெரியாததால் தான். ''முதுமைக்கு நரையழகு'' என்ற பாடல் வரிகளினை இவர்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டும்.

*வி.காயத்திரி – கிளிநொச்சி.*

**கேள்வி:–** ஒரு பெண்ணைப் பார்த்தவுடன் காதலிக்கும் ஆண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் பித்தா?

**பதில்:–** என்னத்தை நினைப்பது. 'பார்வை ஒன்றே போதுமே' என்ற கொள்கை உடையவர்கள்.

*கஜநாதன் – சுழிபுரம்.*

**கேள்வி:–** பித்தா, வெளிநாட்டு மாப்பிள்ளைகளை விரும்பும் பெண்கள் உள்நாட்டு மாப்பிள்ளைகளை உதவாக்கரை போல பார்க்கிறார்களே. இது ஏன்?

**பதில்:–** இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை என்ற பழமொழியை நீர் கேட்டதில்லையா?

*திருவேணி – கொழும்பு.*

**கேள்வி:–** கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்று திரிபவர்களைப் பற்றி என்ன கூறலாம்?

**பதில்:–** உலகத் தத்துவம் தெரியாதவர்கள்.

*கவியரசன் – பன்னாலை.*

**கேள்வி:–** பித்தா, உமக்குப் பிடித்த இராகம் எது?

**பதில்:–** முணுமுணுப்பு. என்னடா வென்று பார்க்கிறீரா, என் வீட்டில் தினமும் கேட்பதே எனக்குப் பிடித்ததாகப் போய் விட்டது.

*பொ.கிரிதரன் – விஸ்வமடு.*

**கேள்வி:–** பித்தனே பெண்களை கொடுமைப்படுத்துபவர்கள் ஆண்களா, பெண்களா இதை விளக்கமாக கூறும்?

**பதில்:–** பெண்தான் பெண்ணுக்கு எதிரி என்கிறார்கள் அனுபவப்பட்டவர்கள்.

கணவன் ஒருவன் தன் மனைவியுடன் காரசாரமாக வாக்கு வாதப்பட்டு அது இறுதியில் கைகலப்பாக மாறி மனைவியை அடி அடியென்று அடித்து கொண்டிருந்தான். அவனது தாயார் ஓடி வந்து ''இது என்ன கேவலம் முதலில் அடிப்பதை நிறுத்து'' என வாதாடினார்.

மகன் சற்று நி'தானித்து ''என்னம்மா நீ, இவள் பேசும் பேச்சுக்கு அடிக்காமல் என்ன செய்வது?''

மாமியார் தனக்கு சப்போட் பண்ணுகிறாள் என நினைத்து மருமகள் சந்தோஷப்பட்டாள்.

''அட இப்படி ஏன் அவளை அடித்து உன் நேரத்தை வீணாக்குகிறாய். அவளை வீட்டுக்கு வெளியே விட்டு கதவைப் பூட்டு'' என்றாள் மாமியார்.

*ப.றோணிதா – பளை.*

**கேள்வி:–** பித்தா! இப்போது 13, 14 வயதிலேயே காதலிக்கிறார்களே, இவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:–** என்னத்தை நினைப்பது? இப்ப எல்லாம் வேகமாய்த் தானே நடக்கிறது.

*பி.தீபன் – யாழ்ப்பாணம்.*

**கேள்வி:–** Dear பித்தா, உலக சாதனை படைத்த இலங்கை சுழற்பந்து வீச்சாளர் முரளிதரனின் முகவரியை தர முடியுமா?

**பதில்:–** 84 /1 நதரம்பத்த, குண்ட சாலை, கண்டி.

*யோ.சசிகரன் – வடமராட்சி.*

**கேள்வி:–** பித்துக் குட்டி, என்னை எனது நண்பர் பஸ்ஸில் சாரதியாக இருப்பதை விட நடத்துனராக இருந்தால் நல்லது என்கிறார் நம்பலாமா?

**பதில்:–** நல்லது, சைட் அடிப்பதற்கும் வசதி, செருப்பால் வாங்குவதற்கும் வசதி.

*எம்.அமுதினி – வட்டுக்கச்சி.*

**கேள்வி:–** டியர் பித்தா! வாழ்க்கையில் மறக்கக்கூடியது எது? மறக்க முடியாதது எது?

**பதில்:–** மறக்கக் கூடியது தோல்வி, மறக்க முடியாதது அவமானம்.

### பித்தனின் கேள்வி

**கேள்வி:–** திருமணம் செய்யும் பெண்கள் சிலர் திருமணத்தின் பின் ஏன் பேயாகின்றார்கள்?

### வாசகர் பதில்கள்

*சுவேன் – கொழும்பு.*

திருமணம் வரை பொறுப்பென்பது என்னவென்று தெரியாது பெற்றோரால் வளர்க்கப்பட்ட ஆண்களை திருமணம் செய்வதால்.

*காயத்திரி – யாழ்ப்பாணம்.*

திருமணத்திற்கு முன்னர் பெண்கள் தாம் பார்த்த குடும்பத்தவர் நடந்து கொள்வது போல், தமது குடும்பத்தில் இல்லாதிருப்பதால்.

*ஜீவன் – சுன்னாகம்.*

வெளிநாட்டு கணவருக்காக ஏங்கியிருக்கும் பெண்கள் தவிர்க்க முடியாது உள்நாட்டு ஆண்களைத் திருமணம் செய்வதால்.

*வள்ளி – மட்டக்களப்பு.*

திருமணத்தின் பின்னர் பெண்ணின் தாய் வீட்டார் கூட இருக்கும் போது அவர்கள் அப்பெண்ணில் காணப்படும் மாற்றங்களை ஒவ்வொரு தடவையும் குத்திக் காட்டுவதால்.

*பிரபா – செட்டிக்குளம்.*

பக்கத்து வீட்டிலிருக்கும் மாமிக்கு அவரது கணவர் செய்வதைப்போல், தனது கணவன் தனக்குச் செய்யாது விடும் பட்சத்தில் பெண்ணானவள் பேயாகின்றாள்.

*ஒ.பரமானந்தன் – டயகம கிழக்கு.*

**கேள்வி:–** பித்தா! தமிழனுக்கென்று ஒரு தனியான உலகம் இருந்தால் எப்படி இருக்கும்?

**பதில்:–** ஜோராயிருக்கும். ஆனால், அது காக்கை வன்னியன் பரம்பரை இல்லாத உலகமாக இருக்க வேண்டும்.

*பாமினி – செம்பியன்பற்று.*

**கேள்வி:–** பித்தா, ஏன் பெண்களை இழிவு படுத்தி கருத்துக்களை கூறுகின்றீர்?

**பதில்:–** பின்னே. ஆண்களையா இழிவு படுத்தி கூறச் சொல்கிறீர்? ஆண்களை இழிவுபடுத்தி கூற முன்னம் அவர்களுக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்து விடுகிறதே.

*த.வசந்தகுமார் – ஐயனார் புரம்*

**கேள்வி:–** டியர் பித்தா! அதிகமாக கோபப் படுவது ஆண்களா? பெண்களா?

**பதில்:–** வீட்டில் என்றால் பெண்கள். வெளியில் என்றால் ஆண்கள். வீட்டில் வாங்கியதையெல்லாம் வெளியில் தான் கொடுப்பார்கள்.

*அ.ஜெகன் – மல்லாவி.*

**கேள்வி:–** பித்தன் சார், இந்தக் காலத்தில் வெளிவருகின்ற பாடல்கள் ஒன்றுமே விளங்கவில்லை என்ன செய்யலாம்?

**பதில்:–** பிரத்தியேகமாக ஒரு அகராதியையும் பாட்டுகளுடன் சேர்த்து வெளியிடச் சொல்லலாம்.

*இ.முரளிதாஸ் – கிளிநொச்சி.*

**கேள்வி:–** பித்தா, சில சமயங்களில் ஒரு பெண் என் பின்னால் தொடர்ந்து வருகிறாள். நான் அதற்கு என்ன செய்ய வேண்டும்?

**பதில்:–** அவளது கையில் கத்தி இருக்கிறதா என்று உற்றுப்பாரும். முற்பகை ஏதாவது வைத்து குத்திக்கித்தி விடப் போகிறாள், கவனம்.



---

பித்தன்மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:–

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

இந்து தரமான – குறும்பான – யதார்த்தமான – பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை ஜூன் 06 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.



**கேள்வி:–** முரளியின் சாதனை முறியடிக்கப்படுமா பித்தா?

**பதில்:–** ஆவுஸ்திரேலிய – ஸிம்பாப்வே தொடர் நிறுத்தப்பட்டதால் உமது பாடு கொண்டாட்டம்தான்.

இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில்மேலே. நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய முகவரி.

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85,ஜெயந்தமல்விமாராய்ச்சி வீதி,
கொழும்பு – 14.

# கவிதைப் புனல்

## முரண்பாடு

வாழ்க்கை......
இருட்டாகி விட்டது.....
வீட்டிற்கு
வெளிச்சம் எதற்கு....!
விழிகளைத்
தோண்டிவிட்டு
வழித்துணைக்குத்
தடி எதற்கு......!
மண்ணும் மக்களும்
அழிந்த பிறகு
சுதந்திரம் எதற்கு..!

**தமிழாம்பிகை**
**எஸ். ஜெகன்**
**நானாட்டான்**

## மனச் சிறையினிலே

தினமும் உன் திருமுகத்தை
நான் தேடுகின்ற பொழுது
என் மனக் கோயிலில்-நீ
தெரிவது கூட இல்லை
உன்னைப் பிரிந்திடுவேனோ
என ஏங்குகின்ற-என்
கண்ணீர் துளிகளில் மட்டும்
உன் முகம் காண்கிறேன்
உனக்குள் என்னை
தொலைத்து விட்ட
நாள் முதலாய்
உன்னோடு நான் கலந்த
ஒவ்வொரு மணித்துளியும்
மரணப்படுக்கையிலும்
மறவாது கண்மணியே

*எஸ் கரன்.*
*புது முறிப்பு*

## பயணம் தொடரட்டும்!


காலைக்கதிரவன்
கதிர்களைப் பரப்பி
செந்தாமரை மலர்களின்
செவ்விதழை
முத்தமிட்டும்..
இதயத்தை அளித்திடும்
இளந்தென்றலின்
இனிய தழுவல்கள்
இனிதே பரவட்டும்
வீசுங்காற்றினிலே
அசைந்தாடும்
சோலைகளின்
மெல்லிய நாதங்கள்
மனதினை
மகிழ்விக்கட்டும்...
உறக்கம் மறந்து
உயிர்களெல்லாம்
விழித்தெழும் வேளை
வெடியோசை கேட்ட
வேட்கை மிகுந்த
நாட்கள்
வேண்டாம் இனி...
வெண்ணிலாவைப்
போல்
வெளிச்சம் தந்திடும்
ஒளி மயமான
வாழ்வு மிளிரட்டும்
வீரம் நிறைந்த
மறவர்களுக்கு
விடுதலை
கிடைக்கட்டும்!
வெற்றிப்பாதையை
நோக்கி - நம்
பயணம் தொடரட்டும்!

*யஸ்மினா*
*மீசாலை*

## காத்திருக்கிறேன்

உன் கன்ன
விழிப்பார்வையிலே
என் உள்ளத்தை இழந்து
விட்டேன்
காலம் பல கடந்தும்-உன்
பார்வையின் அர்த்தம்
புரியவில்லை
காதல் கொண்டேன் - தினம்
கனவினை வளர்த்தேன்
காதல் எனக்கே என்று
காத்திருக்கிறேன்
காதலிக்க

*பா. வதனா*
*கந்தளாய்*



## தினமும் நீ போராடு

இலட்சியங்கள் என்றென்றும்
தொடர்கதையாகத்
தொடரட்டும்
உன் இறுதி மூச்சு
உள்ளவரை
உன் இலட்சியத்தை --நீ
கைவிட்டுவிடாதே
கனவுகள் கண்ணோடு
இலட்சியங்கள் நெஞ்சோடு
உன்னை வெல்ல
யாருமேயில்லை
உறுதியோடு –நீ
தினமும் போராடு !.

*தமிழ்ப்பிரியை*
*செ. தமிழினி*

## இரு!

உன் வார்த்தைகள்
கத்தியின் முனையை விட
அதிகமான கூராய்
மனதை ரணப்படுத்துகின்றன
அதைவிட - உன்
மௌனம்......
ஆயிரமாயிரம் ஏவுகணையாய்
இதயத்தை
சல்லடையிடுகின்றது - தாங்க
முடியவில்லை - என்னால்
எனை நீ தென்றலாய்
வருடாவிட்டாலும் -
பரவாயில்லை
தயவு செய்து
சூரியனாய்
சுட்டெரிக்காமலாவது
இரு!

**தாட்ஷாயினி குலசிங்கம்**
**கலட்டி அம்மன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## சமாதானத்தை வரவேற்போம்

இரத்தத்தை
சிந்தவைத்து
உயிரையே உறிஞ்சிச்
செல்லும்
ஆயுத சப்தமின்றி
மனஅரங்கினிலே
சமாதானசிந்தையுடன்
சாதி,மத
வேற்றுமைஇன்றி
சமத்துவத்துடன்
யுத்தமில்லா புத்தம்புதிய
நாட்டினைஉருவாக்க
சகலரும்சமாதானத்தை
ஆசியுடன் வரவேற்போம்


*நல்லுசாமி ஜெயகாந்தன்*
*கிதுல்கல.*

## புலிவீரர்கள்

*தாயக*
*விடுதலைக்காய்*
*தேகத்தை*
*விதையாக்கிய*
*வீரர்களே*
*தாய் நாட்டைக்*
*காத்திட*
*தாயின் அணைப்பை*
*துறந்த செல்வங்களே*
*தமிழர் துன்ப*
*துயரங்களை*
*துடைத்திட*
*தம்மையே தந்திட்ட*
*புனிதர்கள்*
*தலைவனின்*
*அணியிலே*
*தடம் பதித்த*
*புலிவீரர்களே*

*ஏ. யசோதா, பளை.*

## தாயே



பத்து மாதம் கருவறையில்
பாதுகாத்து வளர்த்தவளே
உதிரத்தை பாலாக்கி
ஊட்டி வளர்த்தவளே!
அரவணைத்து உணவூட்டி
அன்பையும் அறிவையும்
தந்து
அன்னை மண்மீது
பாசத்தை வளர்த்தவளே
தாயன்புக்கீடேது தாயே
தரணியில் தாயன்புதர
யாருமிலர்
தாயே என் நெஞ்சில்
வாழும்
தெய்வம் நீயே...

*ட. ரிசானா, பளை.*

## என்னவளே

*பிரியமானவளே*
*என் சிந்தனைகளின்*
*கற்பனைகளின் கரு நீ*
*கனவுகளின் நாயகி நீ*
*காதலின் குரு நீ*
*கண்களின் ஒளி நீ*
*வானத்தின் நிலா நீ*
*வார்த்தைகளின் நயம் நீ*
*வாழ்த்துகளின் ஒலி நீ*
*வாழ்க்கையின் சுவை நீ*
*உணர்வுகளின் உயிர் நீ*
*உள்ளத்தின் பயிர் நீ*
*உடலின் கலம் நீ*
*உயிரின் சுவாசம் நீ*
*பூக்களின் வாசம் நீ*
*புதுமைகளின் இனிமை நீ*
*புன்னகையின் புதிர் நீ*
*பூமியின் தெய்வம் நீ*

*ரகுபாரதி*
*கம்பர்மலை*

## வர்ணனை

சந்தன ஓடை கரையினிலே
செண்பகப் பூவின் வாடையிலே
இங்கிதமான மாலையிலே- ஓர்
இனிய குயிலின் ஓசையிலே
செவ்வொளி பாய்ச்சிடும்
மேல் வானம் - என்
சிந்தையில் ஆடிடும்
உன் உருவம்...!

ந. கஜநிதி, மல்லாவி.

## அன்பு

ஆசை அழியக் கூடியது
அன்பு அழிய மாட்டாதது
ஆசை எவர் மீதும் ஏற்படலாம் -ஆனால்
அன்பு சிலர் மீது தான் ஏற்படும்
அப்படி உண்டாகும் அவ் அன்பு
நிலைத்திருக்கும்.

மயூரன்
பூநகரி

## வாழ்க்கை

**சுகமானதா... ? சுமையானதா...?**
**இன்பத்தை தேடினால் - துன்பம்**
**தேடாமலே ஓடி வருகின்றது**
**துயரம் என் நிழலாகுது**
**கண்ணீர் குடி நீராகுது**
**நிம்மதி என்னை விட்டு**
**நெடுந் தூரம் பயணிக்குது**
**இது தான் வாழ்க்கையா..?**

*பா. யசோ,*
*உரும்பிராய்.*



-மாதவன், மீரா-

-சித்தார்த், த்ரிஷா-

-சூர்யா, ஈஷா-

# 2005 இல் சினிமா எப்படி இருக்கும்

இன்னும் 20 ஆண்டுகள் கழித்து இதே சினிமா எப்படி இருக்கும்? தயாரிப்பாளர் இருப்பார், நடிகர், நடிகையர் இருக்கமாட்டார்கள். கமெரா இருக்கும், பிலிம் இருக்காது. தியேட்டர்கள் இருக்கும், புரொஜக்டர்கள் இருக்காது. காதல், மோதல், சென்டிமென்ட் என்ற இப்போதைய கதை எதுவுமே இருக்காது. நாம் சொல்வது கற்பனை அல்ல! நடக்கப் போகின்ற நிஜம்! நவீன டெக்னிக்கல் கருவிகளை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளும் சினிமாவில் இப்போது டிஜிட்டல் சினிமா தொழில்நுட்பம் முளைவிட்டு வேகமாக வளர ஆரம்பித்திருக்கிறது.

''அட்டாக் ஆப் திகுளோன்ஸ்'' என்ற படத்தின் மூலம் பிரபல ஹாலிவுட் டைரக்டர் ''ஜார்ஜ் அக்காஸ்'' என்பவர் தான் முதன் முதலாக இந்த டிஜிட்டல் சினிமாவை ஏற்படுத்தினார். இதற்காக உபயோகப்படுத்தும் கமெராவின் பெயர் ''எச்.டி.கமெரா''. ''ஹை டெபனேஷன் கமெரா'' என்பது தான் இதன் விரிவாக்கம்.

இந்த வகை டிஜிட்டல் சினிமாவின் பெரிய விசேஷம் தியேட்டர்களில் புரொஜக்டர் எதுவும் தேவையில்லை. பிலிம் சுருள்களும் தேவையில்லை. எப்படி டி.வி. நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகிறதோ அப்படியே சினிமா தியேட்டர்களிலும் காட்சி ஒளிபரப்பாகும். டிஜிட்டல் கருவியில் பதிவான படம் செயற்கைக்கோள் வழியாக டி.வி.டி.தொழில்நுட்பம் மூலம் விநியோகிக்கப்படும்.

இதனை அங்கீகாரம் பெற்ற தியேட்டர்கள் உள்வாங்கி அங்குள்ள லோக்கல் ஹார்ட்டிஸ்க்கில் பதிவு செய்து வைத்துக் கொண்டு திரையில் காட்டும். இதன் மூலம் தியேட்டருக்கு ஒன்று என்று போடப்படும் பிலிம் பிரதிகள் தேவையில்லாததால் மிகப் பெரிய செலவு மிச்சம். மொத்தத்தில் சினிமாத் துறைக்கே பிலிம் தேவையில்லை என்பதுதான் இதில் அதிசயமான செய்தி. இந்த டிஜிட்டல் சினிமா நுட்பத்தின் வசதியால் மிகத் துல்லியமான, நவீன ஒலி, ஒளி அமைப்புடன் ரசிகர்கள் புதுவிதமான ரசனையை உணர்வார்கள்.

இது மட்டுமல்ல! நமது கற்பனையில் என்னவெல்லாம் நினைக்கிறோமோ அவற்றை அப்படியே திரை வடிவமாக்கிவிட முடியும். உதாரணமாக ஒரு நடிகரை சில கோணங்களில் படம் பிடித்து வைத்துக்கொண்டு கம்யூட்டர் உதவி மூலம் நமது இஷ்டம் போல் நடிக்க வைத்துவிடலாம். சினிமா உலகில் வசூல் சாதனை புரிந்த ''ஸ்பைடர் மேன்'' படம் அப்படித்தான் தயாரிக்கப்பட்டது. இன்னும் 20 ஆண்டுகள் காலத்தில் இந்த நடிகர்களின் நடிப்பும், டைரக்டர்களின் கதையும் முழுக்க முழுக்க சலித்துவிடும். மாறாக அமானுஷ்ய மனிதர்களின் கதை, அபூர்வமான காட்டுவிலங்குகளின் அட்டகாசங்கள், மிரட்டும் மாயா ஜாலங்கள் என சினிமா என்பது முழுக்க முழுக்க கிராஃபிக்ஸ் யுக்திகளாக இருக்கும்.

இளைய தலைமுறையினரை இவை வெகுவாக கவர்ந்து இழுத்து அனைவரையும் தியேட்டர்களுக்கு வரவழைக்கும். மேலும் 200பேர், 300பேர் சேர்ந்து ஒரு படத்தை பல லொகேஷன்கள் என்று படம் பிடிக்க தேவையிருக்காது. ஒரு துறையில் 5 பேர் அமர்ந்து கொண்டு ஒரு முழு நீளப்படத்தை எடுத்து விடுவார்கள். நடிகர், நடிகையர் சம்பளப் பிரச்சினை, கால்ஷீட் விவகாரம் எதுவும் இதில் இருக்காது. எடிட்டிங், கலை, சண்டைப்பயிற்சி, நடனம் என டெக்னீசியன்கள் யாரும் தேவையில்லை. எல்லாவற்றையும் கம்பியூட்டர் பார்த்துக் கொள்ளும்.

# சிம்புவுக்கு எங்கே மச்சம்?

சிம்பு நடிக்கும் 'மன்மதன்' படத்தில் ஒரு நடிகைகள்பட்டாளமே வந்து குவிகிறது. சிம்பு, தானே கதை, திரைக்கதை, எழுதி நடிக்கும் 'மன்மதன்' படத்தில், இப்போது புதிதாக யானா குப்தா என்ற மாடல் அழகி ஒரு பாடலுக்கு மட்டும் நடனமாடுகிறார். இந்த படத்தில் ஏற்கனவே கதாநாயகி ஜோதிகா தவிர 12 மும்பை மாடல் அழகிகள் நடிக்கின்றனர். அவர்களுடன் சமீபத்தில் மந்த்ரா பேடியும் சேர்ந்தார். இப்போது புதிதாக யானா குப்தா வேறு. 'மன்மதன்' என்று படத்தின் தலைப்பை வைத்ததாலோ என்னவோ, படத்தில் ஒரே நடிகைகள் பட்டாளம்.

கவிஞர் வாலி அவர்கள் எழுதியிருக்கும் ''தத்தை தத்தை...'' பாடலுக்கு ஆட்டம் போட வந்துள்ள யானா குப்தா பற்றி சிம்பு கூறுகையில்....

''முதலில் யானா குப்தாவை நடிக்க வைக்க அணுகிய போது,'' எந்தப் பாட்டுக்கு ஆடுகிறேனோ, அந்த ட்யூன் ரொம்ப முக்கியம், அப்புறம் யாருடன் நடிக்க போகிறேன்னோ அவங்க படங்களைப் பார்க்கணும்'' ன்னு ரெண்டு கண்டிசன் போட்டாங்க. அப்புறம் தான் சம்பளம் பற்றி பேசினார். உடனே நானும் யுவன் சங்கர் ராஜாவும் சேர்ந்து ஒரு அருமையான டியூனை பிடிச்சோம். அதனுடன் என் போட்டோவையும் சேர்த்து வைத்து யானா குப்தாவிற்கு அனுப்பினோம். டியூனைக் கேட்ட யானாவிற்கு ரொம்ப பிடித்துப் போய்விட்டது. கூட இருந்த என் போட்டாவும், ஒகே. ரெண்டுமே சூப்பரா இருக்குதுன்னு சொல்லி ஆடுவதற்கும் ஒகே சொல்லிட்டாங்க'' என்று தெரிவித்தார்.

மேலும், ''இந்த இடத்தில் யுவன் சங்கர் ராஜா பற்றி கூறியே ஆகவேண்டும்'' என்றவர் பாடலுக்கு ரசித்து ரசித்து டியூன் போட்டிருக்கும் யுவன், எங்களுக்கு என்னமாதிரி வேணும்ன்னு சொன்னால் போதும், உடனே அப்படி டியூனைப் போட்டு மிரட்டி விடுவார், மற்ற படங்களில் எல்லாம் யுவனுக்கு ஒரு தனி ஸ்டைல்தான் இருக்கும். ஆனால், இப்படத்தின் மூலம் ஒரு புதுப் பரிமாணமே கிடைக்கும்'' என்றார்.



''மன்மதன்''
-சிம்பு, ஜோதிகா-

## படுக்கையறைக் க...
## கலாட்டா பண்ண...



-மீராசென்-

'சரி...வயசுப்பையன். அப்படித்தான் இருக்கும்' என்ற படியே ...
மீண்டும் 'டேக்' சொல்ல பரத் பழைய படியும் அதேபோல் உ...
கெடுத்துவிட்டார்.

இதனால், டென்ஷனாகிப்போன டைரக்டர் ஷூட்டிங்கை பி...
என்ற படியே ஓய்வெடுக்க போய்விட்டார். பிறகு என்ன நினை...
மீண்டும் ஷூட்டிங்கை ஆரம்பித்தார்.

அந்த பரத் வேணாம்ப்பா! இந்தக் காட்சியில் ... ரோ...
என்றுகூறி விஷாலை அழைத்து நடிக்க வைத்த.... விஷ...
விட பரத் இப்போது ஏக கடுப்பில் இருக்கிறார்.

'சொல்வமே' படத்தில் இந்தப் படுக்கையறைக்காட்சி பே...
என்கிறார்கள் படயூனிட்டினர்.

## சினி டி...

சத்யராஜ், விஜயகாந்த் போலவே நடிகைகள் விஜயசாந்தி, ரம்...
மூவரும் சினிமாவுக்கு வந்து 25 ஆண்டுகள் ஆகிறது.

* * *

''சென்னையில் ஒரு மழைக்காலம்'' படத்தில் சூர்யா தனது ...
பாடியுள்ளார்.

* * *

பாடகர் மாணிக்க விநாயகத்துக்கு அப்பா வேடங்கள் நி...
திருடியில் தனுஷ்க்கு அப்பாவாக நடித்தவர் இப்போ...
சூர்யாவுக்கு அப்பாவாகவும், போஸ் படத்தில் ஸ்ரீ கா...
நடித்துள்ளார்.

* * *

நிக் ஆர்ட்ஸ் தயாரிக்க, அஜீத் நடிக்க, தரணி இயக்குகிற...
பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. ''திருப்பாச்சி'' படத்தில்...
கிறார் ஆட்டோகிராஃப் மல்லிகா.

* * *

எம்.குமரன்சன் ஆப் மகாலட்சுமி படத்தை முடித்துவிட்டு நதிய...
''அருள்'' படத்தை தயாரித்துள்ள லட்சுமி புரொடக்‌ஷன்ஸ் அ...
மெடுக்க உள்ளனர்.

* * *

சேரன்துபாய்சென்று அங்குள்ள தமிழ்ச்சங்கத்தின் பாராட்டுக்க...

* * *

பிரியாமணியும், அவரது அம்மாவும் ஜோடியாக ''ஜிம்'' முக்...
செய்து வருகிறார்கள்.

* * *

விக்ரமை வைத்து ஒரு படம் பண்ணும் திட்டத்தில் இருக்கிற...
''காக்க காக்க'' தொலுங்கு படப்பிடிப்பு நிறைவடைந்து வி...



''உயிரோசை''
-சோனியலோயா, பரத்-

## ...் காட்சியில்
## ...ணிய ரீமா



ஞானவேலு, ஜெய பிர காஷ் தயாரிக்க காந்திக் கிருஷ்ணா இயக்கத்தில் 'சொல்வமே' படம் விரை வில் வெளிவர இருக்கி றது.

இந்தப்படத்தில் கதா நாயகனாக விஷால் மற் றும் முக்கிய கதாபாத்திரத் தில் 'பாய்ஸ்' பரத் ஆகி யோர் நடித்துள்ளனர்.

'செல்வமே' படத்தில் ஒரு முக்கியமான படுக்கை யறைக்காட்சி இடம்பெறு கிறது. இதில் ரீமா சென்னு டன் 'பாய்ஸ்' பரத் மெத்தை யில் புரளவேண்டும். இதற் கான படப்பிடிப்பு ஏற்பாடு கள் தயாரான நிலையில்... டைரக்டர் 'டேக்' சொன்னார்.

அவர் சொன்னபடியே ரீமா சென்னை உருட்டி புரட்டி எடுத்த பரத் உண் மையிலேயே உணர்ச்சி வசப்பட்டுப்போனதை பட யூனிட் எதிர்பார்க்கவில்லை.

...ன்ற படியே டைரக்டர் சகித்துக்கொண்டு
...தபோல் உணர்ச்சிவசப்பட்டு படத்தை

...ட்டிங்கை பிறகு வைத்துக்கொள்ளலாம்
...ன்ன நினைத்தாரோ தெரியவில்லை.

...ரோ... நடித்துவிட்டுப் போகட்டும்
... விஷ... ஒரே டேக்கில் ஓகே வாகி

...க்காட்சி பேசப்படும் படியாக இருக்கும்

## ...ழப்ஸ்

...ந்தி, ரம்யா கிருஷ்ணன், மீனா ஆகிய
...றது.

...யா தனது சொந்தக் குரலில் ஒரு பாடல்

...ங்கள் நிறைய வருகின்றன. திருடா
... இப்போது ''பேரழகன்'' படத்தில்
...ல் ஸ்ரீ காந்த்துக்கு அப்பாவாகவும்

...யக்குகிறார். இதற்கான ஆரம்பகட்ட
...'' படத்தில் விஜய்க்கு தங்கையாக நடிக்

...விட்டு நதியா லண்டன் சென்றுவிட்டார்.
...ஷன்ஸ் அடுத்து தனுஷை வைத்து பட

...ாராட்டுக்களை பெற்று திரும்பியுள்ளார்.

...ஜிம்'' முக்குச் சென்று ''எக்சர்சைஸ்''

... இருக்கிறது ஏ.வி.எம். பட நிறுவனம்.
...டைந்து விட்டது.





''ஜெயசூர்யா''
-அர்ஜுன், லைலா-

# இயக்குநர்கள் பத்தி சூர்யாவே கூறுகிறார்

திரை உலகத்தில் இருக்கும் ஒவ்வொருவரையும் திகைக்க வைத்திருக்கும் நடிகர் சூரியா, தன்னைஇயக்கிய இயக்குனர்கள் பற்றி ரத்தினச் சுருக்கமாக கூறுகிறார்.

'நந்தா', 'காக்க காக்க' போன்ற படங்களில் தன் திறமையை வெளிக்காட்டியவர், 'பிதாமகனில் 'நிலை நிறுத்தினார். பின் இப்போது 'பேரழகனில்' எல்லோரையும் திகைக்க வைத்துள்ளார். 'இந்த வெற்றிக்கு நான் மட்டும் காரணமில்லை. இது ஒரு டீமோட வெற்றி' என்று சொல்லும் சூரியா, தன்னை இயக்கிய இயக்குனர்கள் பற்றி,

'வந்த புதிதில் எத்தனையோ படங்கள் நடித்தேன். ஆனால், சரியான வாய்ப்பும், கோரட்டரும் கிடைத் தால், நல்லா நடிப்பேன் என்று நறுக்குன்னு சொன்ன படம் 'நந்தா' அதேபோல 'பிதாமக லும்' என்னை நம்பிஇவ்வளவு பெரிய வாய்ப்பு கொடுத்தவர் பாலா அண்ணன்.

அப்புறம் விக்ரமன் சார், அவரைப்பற்றி சொல்லனும்ன்னா, ஒட்டுமொத்த பெண் ரசிகைகளை எனக்கு 'உன்னை நினைத்து' படத்தின் மூலம் உருவாக்கிக் கொடுத்தவர். அதேபோல, காலேஜ் ஸ்டுடன்ஸ் எனக்கு ரசிகர்களா அமைஞ்சது, அமீர் சாரோட 'மௌனம் பேசியதே' படத்தின் மூலம் தான்.

இப்படித் தனித்தனியாக ஆடியன்ஸ் அமைந்து கொண் டிருக்கையில், கௌதம் சாரின் 'காக்க காக்க' படத்தில் நடித்ததன் மூலம் அனைத்து தரப்பு ரசிகர்களையும் கவர்ந்தேன். இப்ப 'பேரழகன்' படத்தில், கெட்டப், மேக்கப், வொய்ஸ், மொடலேஷன், எல்லாத்திலேயும் வித்தியாசம் காட்டி நடிக்க வைத்தவர் இயக்குனர் சசி சங்கர். அப்புறம் மணிரத்னம் சார், இவர் ரொம்ப நேச்சரான பொபாமன்ஸ் இருக்கனும்ன்னு எதிர்பார்ப் பார். அவரோட எதிர் பார்ப்பை நிறைவேற்றி இருக் கேன்னு தான் சொல்லனும்' என்று தெரிவித்தார்.

'இப்ப என்மேல் ரசிகர்கள் நிறைய நம்பிக்கை வைத் திருக்கின்றார்கள். அதை நிச்சயமாக நான் காப்பாத்திக் கொள்வேன்' என்று உறுதியோடும் பேசினார்.

# வெல்லப்போவது ஐக்குபாயா? முன்னாபாயா?

'ரஜனி நடிப்பது ஐக்குபாய், கமல் நடிப் பது முன்னாபாய், தேர்தலில் நிற்பது வாஜ் பாய்' என்கிற ரேஞ்சில் ரஜனி பட அறிவிப்பு சமயம் நிறைய ஜோக்குகள் வெளிவந்தன.

நிஜத்தில் ரஜனி படம் தொடங்குவதற்கு முன்பாக கமலிடம் கேட்டுக்கொண்டுதான் தொடங்கினார். காரணம் 'விருமாண்டி'யை அடுத்து கமலும், கே.எஸ் ரவிக்குமாரும் சேர்ந்து ஒரு படம் பண்ணுவதாக இருந்தனர். இதன் நிமித்தம் கமலை தொடர்பு கொண்டு கே.எஸ் ரவிக்குமாரைத் தரும் படி கேட்டுக்கொள்ள கம லும் சம்மதம் தெரிவித்தார். கே.எஸ் ரவிக்குமார் ரஜனியுடன் ஜோடி சேர்ந்தார்.

ஐக்குபாய் என்பது தமிழில் சினிமாவுக்கு புதிய டைட்டில் அல்ல. 1936 இல் ஐக்குபாய் என்றொரு படம் வெளிவந்துள்ளது. 1939-இல் சாந்தா சக்குபாய் என்றொரு படம் வெளி வந்துள்ளது.

ஐக்குபாய் பட விளம்பரத்தில்' இறைவா, நண்பர்களிடம் இருந்து என்னைக்காப் பாற்று. பகைவர்களை நான் பார்த்துக்கொள்கி றேன்'— ஐக்குபாய் என்று போட்டுள்ளனர். இந்த டயலாக் தத்துவ ஞானி சாக்ரடீஸ் சொன்னதாகும்.

ரஜனி படத் தொடக்க விளம்பரத்தை பார்த்து விட்டு கமல் போன் செய்து ரஜனிக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

ரஜனியின் ஐக்குபாய் படத்தை திரை யிடக்கூடாது என்று இப்போதே சில திரை யரங்க அதிபர்களை பா.ம.க வினர் கேட் டுக்கொண்டுள்ளனர். 'ஐக்குபாய்' படம் சம்பந்தமாக தைலாபுரம் தோட்டத்தில் டாக்டர் ராமதாஸ் தலைமையில் ஒரு முக் கிய கூட்டமே நடந்திருக்கிறது.

ரஜனியோ இந்தப் பிரச்சினைகளுக் கிடையே படப்பிடிப்பை எப்படி ரகசியமாக நடத்துவதென்று ஆலோசனை செய்து வருகிறார்.



''பச்சை நிறமே''
-அபிநயஸ்ரீ-

# சாயாசிங்கின் கவலை...

''திருடாதிருடி'' படத்தின் பெரும் வெற்றி தனுஷை வெகு உயரத்துக்கு கொண்டு போனது. தனக்கும் அப்படம் ''ப்ரேக்'' ஆக இருக்கும் என சாயாசிங் நம்பினார். குறிப்பாக ''மன்மதராசா'' பாடல், பட்டி தொட்டிகளிலெல்லாம் ஒலித்தாலும் அப்பாடலில் தனுஷுடன் போட்டி போட்டு சிறப்பாக தான் ஆடிய நடனத்தை அனைவரும் ரசித்தாலும் எப்படியும் அரை டஜன் படங்களாவது வரும் என்று எதிர்பார்த்தார்.

இந்நிலையில் அவருக்கு ''கவிதை'' பட வாய்ப்பு மட்டும் வந்தது. வேறு எவ ரும் சீண்ட வில்லை. சீண்டிய ஒரு சில ரையும் அதிக தொகை கேட்டு அனுப்பி வைத்து விட்டார். இயக்குனர் பிரவின் காந்த் கதா நாயகனாக நடித்து இயக் கும் '' துள்ளல்'' படத்துக்காக அணுகி யிருக்கிறார். அநியாயத்துக்கு ஒரு பெரிய தொகையை அவரிடம் கேட்க, அவருக்கு 'குட்பை' சொல்லிவிட்டு மும்பையிலிருந்து புது முகத்தை வர வழைத்து படத்தை ஆரம்பித்து படம் முடிவடையப்போகிறது. வேறு படங் கள் வராததால் பயந்து போய் 'அருள்' படத்தில் ஒரு பாடல் காட்சியில் மட் டும் நடித்தார்.

இப்போது 'கவிதை' படம் ஓட வில்லை. அரண்டு போய் இருக்கிறார் சாயாசிங். இதில் சில தயாரிப்பாளர் கள் 'அருள்' படத்தில் போல ஒரு பாட லுக்கு மட்டும் வந்து போங்கள் என் கிறார்களாம். இதையும் மறுப் பதா வேண்டாமா என்று குழப்ப மாக இருக்கிறார் சாயாசிங். ஏனென்றால் ஒரு பாடல் வாய்ப்பும் தொடர்ந்து மறுத்தால் போய் விடுமோ என்ற பயம் தான்.

# பின்னங்கால் தசையில் ஏற்படும் வலி எழுந்து நிற்பதே நிவாரணத்துக்கு வழி

**கேள்வி:– பெண். வயது 40. அடிக்கடி இரவில் தூக்கத்தில் வலது பின்னங்கால் தசையில் தாங்கொண்ணாத வலி தோன்றும். ஒரு சில நிமிடமே இருக்கும். இவ்வலியால் அந்த ஒரு சில நிமிடமும் கால்களை அசைக்க முடியாது. சிறிது நேரத்தில் சரியாகிவிடும். இது எதனால் ஏற்படுகிறது. ஏதாவது நோயின் அறிகுறியா?**

பதில்:– நீங்கள் CRAMPS எனப்படும் தசைப்பிடிப்பால் பாதிக்கப்படுகின்றீர்கள். இது தூக்கத்திலும் வரலாம். தேகப் பயிற்சியின் போதும் வரலாம்.

தூக்கத்தில் உங்கள் பாதத்தையோ, விரல்களையோ கீழ் நோக்கி வலிக்கும் (STRETCH) போது CALF MUSCLE என்று அழைக்கப்படும் இந்த தசைப்பிடிப்பு உங்கள் பின்னங்கால் – தசையில் ஏற்படுகின்றது.

தசை பிடித்த இடத்தை மசாஜ் செய்வதன் மூலமோ, கட்டிலிலிருந்து எழுந்து நிற்பதன் மூலமோ – வலியை நீக்கலாம்.

இந்தத் தசைப்பிடிப்பு அநேகமாக பகலில் அதிக உடல் உழைப்பில் ஈடுபடுவதாலும் உடற்பயிற்சி செய்வதனாலும் – ஏற்பட வாய்ப்புண்டு. குதி உயர்ந்த பாதணிகளை அணிவதும் – இரவில் இந்தத் தசைப்பிடிப்பு ஏற்படக் காரணமாகின்றது.

கர்ப்பகாலத்திலும், நீரிழிவு நோயாளர்களுக்கும், குருதிச் சுற்றோட்ட கோளாறு உள்ளவர்களுக்கும் இந்த தசைப்பிடிப்பு ஏற்படுவதுண்டு. உடற்பயிற்சியின் போது அதிகளவில் தசைகள் களைப்படைவதாலும் வியர்வை அதிகம் வெளியேறி பொட்டாசியம் சத்துக் குறைவதாலும் தசைப்பிடிப்பு ஏற்படுகிறது.

தேகப்பயிற்சியின்போது நிறைய நீர் பருகுதல், மற்றும் விட்டமின் E மாத்திரைகள், இந்த தசைப்பிடிப்புகளைத் தவிர்க்கும்.

**கேள்வி: எனது மகனுக்கு, வயது 12. சொத்தைப் பற்கள் நான்கு உண்டு. அடிக்கடி சொக்லெட் சாப்பிடுவதால் இது ஏற்பட்டது என்று பல் டாக்டர் கூறுகின்றார். நான் மகனுக்கு விலையுயர்ந்த 'காட்பெரி' சொக்லெட் மட்டும் தான் கொடுப்பேன். அதிலும் பூச்சி இருந்து பல்லை சொத்தைப் படுத்துமா? தற்போது புளோரைட் (FLOURIDE) கலந்த பற்பசையை உபயோகிக்க சொல்கின்றார் டாக்டர். ஆனால் அமெரிக்காவில் இருந்து வந்த எனது தம்பி புளோரைட் பாவித்தால் பல் கெட்டுவிடும் என்கின்றார். எனக்கு எல்லாமே குழப்பமாக இருக்கின்றது. விவரமாக பதில் தந்து எனது குழப்பத்தை தீருங்கள்.**

பதில்:– பல் சுகாதாரம் பற்றி சரியான அறிவில்லாத தாய்மார்கள் பலர் படித்தவர்கள் மட்டத்தில் கூட இருக்கின்றார்கள். இதனால் தான் குழந்தைகளுக்கு பல் சீர்கேடுகள் உருவாக தாய்மார்கள் காரணமாகின்றார்கள். பல்லில் சொத்தை விழுதலை பலர் பல் பூச்சிக் கடி என்று சொல்வதுண்டு. இனிப்புகளில் உள்ள பூச்சிகள் பல்லை சொத்தைப்படுத்துவதாக உங்களைப் போல் பலர் நினைக்க இதுவும் காரணம்.

விலையுயர்ந்த சொக்லெட் என்றாலும் சரி மலிவான இனிப்புருண்டைகளானாலும் சரி சீனி சம்பந்தப்பட்ட அனைத்தும் பல் சொத்தை ஏற்பட காரணமாகின்றன. நீங்கள் விபரமாக எழுதும் படி கேட்டதனால் ஆரம்பத்திலிருந்து பல் சொத்தை பற்றி கூறுகின்றேன்.

பல்லில் வெளிப்புறம் எனாமல் (ENAMEL) என்ற உறுதியான பொருளால் ஆக்கப்பட்டது. இந்தப் பொருள் அமிலத்



தால் கரைந்தால், பல் சொத்தை ஏற்படுகிறது. அமிலம் பற்களின் அடியில் படை போல் காணப்படும் PLAQUE உள்ள பற்றீயா கிருமிகளினால் சுரக்கப்படுகின்றது. சீனி கலந்துள்ள உணவோ – திரவபதார்த்தமோ வாய்க்குள் எடுக்கப்படும்போது இந்த பற்றீரியாக்கள் அவற்றை அமிலங்களாக மாற்றுகின்றன. இந்த அமிலம் பற்களில் மேற்பரப்போடு இருக்கும் போது – உமிழ் நீர் இந்த அமிலத்தை நடுநிலைப் படுத்துகின்றது.

ஆனால், இந்த மாற்றம் ஏற்பட குறைந்தது இரண்டு மணிநேரம் வேண்டும். இந்த இரண்டு மணிநேர வேளையில் பல்லின் எனாமலிலுள்ள கல்சியம், பொஸ்பரஸ் கனியுப்புகள் கரைந்து பல் படையினுள் செல்கின்றன. உமிழ்நீரால் அமிலம் சமநிலை படுத்தப்பட்டதும் கரைந்து போன கனியுப்புகளின் படையினின்று வெளியேறி எனாமலினுள் சேர்கின்றன. இந்த கனியுப்புகள் வெளியேற்றமும், மறுபடி உள் சேர்தலும் சமனாக நடைபெறுவதில்லை. கனியுப்புகள் நிறையவே வெளியேறுகின்றன. ஆனால், மிக குறைந்த அளவே திரும்பவும் எனாமலுடன் சேருகின்றன. அடிக்கடி இனிப்புப் பதார்த்தங்களை உட்கொள்ளும்போது– எனாமல் பல்மடங்கில் கரைந்து பல்லில் துவாரம் விழுகின்றது. இந்த துவாரத்தினூடாக பற்றீரியா நுழைந்து பல்லை சொத்தையாகச் செய்கிறது.

இனி புளோரைட் கலந்த பற்பசை எவ்வாறு சொத்தைவிழுதலை தவிர்க்கின்றது என்று பார்ப்போம். குழந்தைகள் இந்த வகை பற்பசையை உபயோகிக்கும் போது 7 வயது வரை புளோரைட் எனாமலுடன் சேர்த்து அமிலம் அரிக்காத ஒரு மேற்பரப்பை உருவாக்குகிறது.

மேலும் உமிழ்நீரில் புளோரைட் கலந்து எனாமல் கரைந்து போய் மறுபடியும் கனியுப்புகள் சேரும் விகிதாசாரத்தை அதிகரிப்பதால், எனாமல் அதிகளவில் கரைவது குறைக்கப்படுகின்றது. பற்களின் மேற்பரப்பில் புளோரைட் படிந்து – பற்றீரிய வளர்ச்சியை தடை செய்கிறது. அமிலச் சுரப்பை குறைக்கின்றது. இதனாலேயே புளோரைட் கலந்த பற்பசையை உங்கள் டாக்டர் உபயோகிக்க சொன்னார். அடுத்தது உங்கள் அமெரிக்கத் தம்பி சொன்னதும் ஓரளவிற்கு சரிதான். அமெரிக்க நாட்டில் குடி தண்ணீரில் – பல் சுகாதாரம் பேணுவதற்காக – புளோரைட் கலக்கப்பட்டிருக்கின்றது. அதனால் புளோரைட் பற்பசைகளை எடுத்தவாறு உபயோகிப்பதை தவிர்க்கின்றார்கள். புளோரைட் அதிகமாக உபயோகிக்கப்பட்டால் பற்களில் அது அதிகமாக படிந்து அழகற்ற பற்களை, காவி நிறப்பற்களை உருவாக்கும். அதனால் தான் உங்கள் அமெரிக்கத்தம்பி புளோரைட் பற்றி அஞ்சினார்.

இலங்கையில் குடிநீரில் புளோரைட் குறைவாக காணப்படுகிறது. குழாய்களில் விநியோகிக்கும் குடிநீரில் புளோரைட் கலக்கப்படுவதில்லை. எனவே பயமின்றி புளோரைட் கலந்த பற்பசைகளை உபயோகப்படுத்தலாம். எம்பிலிப்பிட்டிய, கெக்கிராவ, அம்பாந்தோட்டை பிரதேசங்களில் மாத்திரம் குடிநீரில், அதிகளவில் புறோரைட் உண்டு. இப்பிரதேசத்தில் வசிப்பவர்கள் இப்படியான பற்பசைகளை தவிர்ப்பது விரும்பத்தக்கது.

இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
கொழும்பு – 14

**கேள்வி: பெண். வயது 20. இரு மார்பகங்களுக்கிடையில் கட்டி போன்ற ஒரு வளர்ச்சி உண்டு. அடிக்கடி அது பெருத்து வேதனை தரும். பின்னர் மா போல் அல்லது பால் போல் ஒரு திரவம் வடிந்து மறைந்து விடும். பரிகாரம் கூறவும்.**

பதில்:– உங்கள் கடிதத்தின்படி பார்த்தால் இது ஒரு சுரப்பு தடைப்பட்ட எண்ணெய்ச் சுரப்பி. (INFECTED SEBACEOUS GLAND) முகத்தில வரும் பருக்களைப் போன்றதொன்று. இது புற்று நோயல்ல. பயப்படத் தேவையில்லை. ஒரு மருந்துவரிடம் காட்டி அந்த சுரப்பியை அகற்றிவிடுங்கள்.

**கேள்வி:– ஆண். வயது 70. 2001 ஆம் ஆண்டு பாரிசவாதநோய் ஏற்பட்டு, இடது பக்கம் வலுவிழந்துவிட்டது. இப்போது அதி உயர் அழுத்தத்திற்கு வைத்தியம் செய்கின்றேன். ஆனால் இடது பக்க உடம்பு இன்னும் சரியாக குணமடையவில்லை. ஆயுள் வேத மசாஜ் செய்து வருகின்றேன். பெரிதாக குணம் காணப்படவில்லை. அக்கு பங்சர் செய்தால் குணமடையலாம் என்று ஆலோசனை கூறுகின்றார்கள்.**

பதில்:– உங்களுக்கு வந்துள்ள STROKE அல்லது CEREBRO VASCULAR ACCIDENT என்ற நோய். அதி உயர் இரத்த அழுத்தத்தினால் மூளைக்குள் இரத்தக்குழாய் வெடித்ததனால் ஏற்பட்டது. இதனால் உங்களுக்கு இடது பக்கம் பாரிசவாதம் என்கின்ற HEMIPLEGIA நோய் ஏற்பட்டுள்ளது.

இந்த நோயினால் இடது பக்கம் செயல்பட உதவும் நரம்புகள் சக்தியை இழந்துவிட்டன. காலம் செல்ல நரம்புகளில் உணர்ச்சியூட்டல் குறைந்ததால் தசைகளும் சுருங்கி – தொழிற்படும் தன்மையை இழந்துவிட்டன. மசாஜ் வைத்தியம் தசைகளை தளர்வுபடுத்தி பழைய நிலைக்கு கொண்டுவர உதவும். ஆனால், இறந்து போன நரம்புகளை உயிர்ப்படுத்துவது கொஞ்சம் சிரமம். அக்குப்பங்சர் ஒரு சிறந்த வைத்தியம். இம்மாதிரியான நோய்கள் பலவற்றிற்கு சிறப்புற செயல்படக்கூடிய வைத்திய முறைகள் அக்குபங்சரில் உண்டு.

இன்று சீன நாட்டை அக்குபங்சரின் தாய் நாடாக கருதினாலும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் அக்குபங்சர் முறையை ஒத்த வைத்திய முறைகள் நடைமுறையில் இருந்ததற்கு ஆதாரங்கள் உள்ளன. போகர் முனிவரின் வைத்திய நூலிலும், இந்திய வர்மக்கலையிலும் – இலங்கையில் யானைகளை கட்டுப்படுத்த பாகர்கள், அங்குசத்தால் தூண்டிவிடும் 'நிலா' (NILA) புள்ளிகளும் – அக்குபங்சர்போன்ற ஒருவைத்தியமுறை எமக்கும் சொந்தம் என்று பறைசாற்றுகின்றன. உங்கள் நோய் – நாள் பட்டதால் அக்குபங்சர் வைத்தியம் செய்வதால் எதிர்பார்த்த வெற்றி கிடைக்குமா என்பது சந்தேகமே. ஆனால், பாரிசவாதம் ஏற்பட்ட காலத்திலேயே – மற்ற வைத்தியங்களுடன் அக்குபங்சர் சிகிச்சையும் பெற்றிருந்தால் – நிச்சயம் கூடிய குணம் பெற்றிருப்பீர்கள்.

* * *

# சார்லி சாப்ளினின் பேத்தி...

ஊமைப் படக் காலங்களில் ஹொலிவுட்டில் கொடி கட்டிப் பறந்தவர் சார்லி சாப்ளின். சிரிக்காத அம்மணா மூஞ்சிகளைக் கூட இவரது நடிப்பு சிரிக்க வைத்துவிடும்.

இப்போது இவரது கொள்ளுப்பேத்தி கெய்ரா சாப்ளின் ஹொலிவுட்டைக் கலக்கிக் கொண்டிருக்கிறார். நடிகையாக மட்டுமின்றி மாடல் அழகியாகவும் கொடி கட்டிப் பறக்கிறார். (சார்லி சாப்பிளினுக்கு நான்கு மனைவிகள் மூலம் 11 குழந்தைகள். இதில் நான்காவது மனைவி ஓனாவின் மகள் வழியாகப் பிறந்தவர்தான் கெய்ரா.)

22 வயது கெய்ராவைப் பற்றிய லேட்டஸ்ட் செய்தி என்ன தெரியுமா? இவர் இந்திய ராஜ ஸ்ரீஓஷா இயக்கும் யத்னா (வலி) என்னும் பாலிவுட் படத்தில் நடித்து வருகிறார். ராஜ ஸ்ரீ ஓஷாவுக்கு இது தான் முதல் படம். ஆனால் இவரது மாணவன் ஆஸ்கார்விருது பெற்றவர் என்பதால் ஹொலிவுட்டில் இவரது பெயர் ஓரளவுக்கு பரிச்சயம். அதனால் இவரது படத்தில் நடிக்க கெய்ரா ஒப்புக் கொண்டார்.

தாத்தாவைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள் என்று கெய்ராவிடம் கேட்டால், ''அவர் சிறந்த நகைச்சுவை நடிகர் மட்டுமல்ல அறிவையும் கூட அவரது படங்களில் பார்க்க முடியும் ''என்கிறார் பட்டென்று.

'' எனது பெற்றோர் கம்பியூட்டர் போன்ற ஏதாவது ஒரு படிப்பில் வாழ்க்கையை அமைத்துக் கொள். அது தான் பாதுகாப்பானது என்று சொன்னார்கள். ஆனால் தாத்தாவின் படங்களைப் பார்த்ததும் எனக்கு அவரைப் போல் சினிமாவில் நடிக்க வேண்டும் என்கிற ஆர்வம் ஏற்பட்டது. அதனால் சினிமாவிற்கு வந்துவிட்டேன் '' என்கிறார் சிரித்துக்கொண்டே

''யத்னா படக் கதையை என்னிடம் சொன்னார்கள். நிரம்பப் பிடித்திருந்தது. கதைப்படி நான் பிரெஞ்சுப் பெண்ணாக நடிக்கிறேன். பாரிஸ் நகரிலிருந்து கொல்கத்தாவிற்கு வருகிறேன். அங்குள்ள ஒரு புத்தகக் கடையில் வேலை பார்க்கிறேன். அப்போது கல்யாணம் ஆன வயதான ஒருவருடன் எனக்கு நெருக்கம் உண்டாகிறது. வயதானவர் வேடத்தில் விக்ரம் பானருஜி என்பவர் நடிக்கிறார்.''

தாத்தாவின் பெயர் உங்களுக்கு எந்த அளவில் உதவுகிறது எனக் கேட்டபோது

''அய்யோ அதை ஏன் கேட்கிறீர்கள்? தாத்தாவின் பெயர் என் பெயருக்கு பின்னால் இருப்பதால் நிறையவே மதிப்பும் மரியாதையும் கிடைக்கிறது. அதே போல் நடிப்பிலும் என்னிடம் நிறைய எதிர்பார்க்கிறார்கள் நானோ சின்னப் பெண். தாத்தாவைப் போல நடிக்க முடியுமா?, என்ன?...''

இந்தியப் படத்தில் நடித்தாலும் இந்திய சினிமா நட்சத்திரங்கள் பற்றி கெய்ரா சாப்ளினுக்கு தெரியவில்லை. அதைப் பற்றி அவரே கூறுகிறார். '' ஐஸ்வர்யாராய்



ஜேம்ஸ்பாண்ட் படத்தில் நடிப்பதால் அவரை மட்டும் எனக்கு ஓரளவிற்குத் தெரியும். கோலா விளம்பரத்தில் நடித்த ஷாருக்கானைப் பார்த்திருக்கிறேன். இது தான் எனக்குத் தெரிந்த பாலிவுட்'' என்கிறார்.

# குழந்தைகளின் எதிர்காலம் யார் கையில்?

எதிர்காலத்தில் என் குழந்தை டாக்டர் ஆக வேண்டும், பெரிய விஞ்ஞானியாக வேண்டும் என்று ஒவ்வொரு பெற்றோரும் தமது குழந்தைகள் பற்றி ஆசையாசையாய்ப் பல கனவுகளை வைத்திருப்பது இயல்பானதுதான். ஆனால், இந்தக் குறிப்பிட்ட ஆசைகளை குழந்தைகள் மனதில் விதைப்பதை விட, அதைச் சாதிக்க வழிவகை செய்யும் சாதகமான எண்ணங்களை குழந்தைகள் மனதில் பதியுமாறு செயற்படுவது மேலும் நல்ல பலனைக் கொடுக்கும் என்கிறது ஓர் ஆராய்ச்சி. 'என்னால் எதுவும் முடியும்' என்ற எண்ணம் வந்துவிட்டாலே போதும். எந்த சிகரத்தையும் உங்கள் குழந்தை எளிதாகத் தொட்டுவிடும். எனவே உங்கள் குழந்தையும் அவ்வாறு திகழ இதோ சில டிப்ஸ்...

உங்கள் செல்ல மகனிடம் அல்லது மகளிடம் உங்களுடைய குழந்தைப்பருவம் பற்றி சுவாரஸ்யமான கதையாகச் சொல்லுங்கள். அதை அவர்கள் ஆர்வமாக கேட்டுக்கொள்வார்கள். கதையோடு கூடவே உங்கள் வாழ்க்கையிலிருந்து தன் வாழ்க்கைக்குத் தேவையான சில விடயங்கள் பற்றி மறைமுகமாகக் குறிப்பெடுத்தும் கொள்வார்கள்.

பக்கத்து வீட்டு ஆர்த்தியைப்பாரு... சுரேஸைப்பாரு... எப்பவும் முதல் பிள்ளை தான். நீயும் இருக்கிறாயே என்கிற ரீதியில் அவர்களை பிறரோடு ஒப்பிட்டுப் பேசாதீர்கள். இது அவளுடைய தன்னம்பிக்கையை சிதைத்துவிடச் கூடியது. ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு வகை என்பதை முதலில் புரிந்துகொள்ளுங்கள்.



அவர்களுடைய தனிப்பட்ட விடயங்களில் நீங்கள் தலையிடுவதை பெரும்பாலும் தவிர்த்துவிடுங்கள். உதாரணமாக அவர்கள் இல்லாதபோது அவர்களுடைய அறையை ஆராய்வது, அவர்களுடைய சொந்த டைரியைப்படிப்பது போன்றவற்றை ஒருநாளும் செய்ய நினைக்காதீர்கள்.

ஓவியம் வரைவது, பாடுவது என்று அவர்களாகவே ரசித்துச் செய்யும் விடயங்களை மனதாரப் பாராட்டுங்கள். அம்மாவே பாராட்டுகிறார்களே என்ற எண்ணம் அவர்களுடைய ஆர்வத்தைப் பலமடங்காக அதிகரிக்கச் செய்துவிடும்.



அவர்களுடைய வேலைகளை அவர்களே செய்துகொள்ளும்படியான சந்தர்ப்பங்களை நீங்களே ஏற்படுத்திக்கொடுங்கள். தன்னால் தன்னை முழுவதுமாகக் கவனித்துக்கொள்ள முடியும் என்கிற எண்ணமே அவளுடைய வருங்கால வெற்றிக்கான முதல்படி தான்.

ஆண்பிள்ளை என்றால், அவனிடம் எப்பவுமே கொஞ்சம் கடுமையாக இருந்தால் தான் நல்லது என்கிற எண்ணம் வேண்டாம். குழந்தை தவறு செய்தால் கண்டிப்பது மற்ற நேரங்களில் அவனிடம் இயல்பாக இருப்பது என்று சாதாரணமாக இருப்பது தான் சிறந்தது.

குழந்தையின் குறைகளை அது உங்கள் பற்றிய குறையாகவே இருந்தாலும் காது கொடுத்துக்கேளுங்கள். உங்களைப்பற்றிய அவர்களின் மனத்தாங்கலில் உண்மை இருந்தால், மன்னிப்புக் கேட்கவும் தயங்காதீர்கள்.

குழந்தையின் செய்கைகள் எவையாவது உங்களை எரிச்சலபடுத்தினால் உடனே சத்தம் போட்டு ஆர்ப்பாட்டம் பண்ணாதீர்கள். எந்த விடயம், எதனால் உங்களை எரிச்சலபடுத்தியது—கோபப்படுத்தியது என்று அவர்கள் உணரும்படியாக எடுத்துக்கூறுங்கள். எல்லாம் சரியாகிவிடும்.

குழந்தை ஆர்வம் காட்டும் விடயங்களைப் பாராட்டி ஊக்குவிக்க முயற்சியுங்கள். ஆனால் அதையே குழந்தைகளுக்குச் சலிப்பு வருமாறு செய்து அவர்களை சலிப்படைய வைக்காதீர்கள்.

தன்னைத்தானே பார்த்துக்கொள்ளும் படியான, தன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும்படியான தன்னம்பிக்கையுள்ள பிள்ளையாக அவர்களை மாறச் செய்வது பெற்றோராகிய உங்கள் கையில் தான் இருக்கிறது.

# சமையல் குறிப்பு

## உளுந்து சமோசா

ஒரு கப் உளுத்தம் பருப்பை ஊற வைத்து ஒன்றும் பாதியுமாக அரைத்துக்கொள்ளவும். 2 சிறிய கரண்டி மாங்காய் வற்றல், ஒரு சிறிய சோம்பு (இடித்துப்பொடி செய்தது), 2 சிட்டிகை பெருங்காயம், ஒரு சிறிய கரண்டி சீரகப்பொடி, ஒரு சிறிய கரண்டி மிளகாய்ப்பொடி, 2 சிறிய கரண்டி தானிய பொடி, தேவையான அளவு உப்பு, 2 பெரிய கரண்டி எண்ணெய்.

சமோசா செய்வதற்கு:— 200கிராம் மைதா, கால் கரண்டி ஓமம், கால் கரண்டி பேக்கிங் பவுடர், ஒரு பெரிய கரண்டி நெய் அல்லது எண்ணெய் மா பிசைய, உப்பு தேவையான அளவு, பொரித்தெடுக்க எண்ணெய்.

### செய்முறை


அடிப்பாகம் மொத்தமான சட்டி ஒன்றில் எண்ணெயைச் சூடாக்கி, அரைத்த உளுத்தம்பருப்பு சேர்த்து மிதமான சூட்டில் வறுக்கவும். நீர் சுண்டிய பிறகு பொன்னிறமாக வந்ததும் ஏனைய மசாலா சாமான்களைப் போட்டு நன்கு கிளறிவிடவும்.

மைதா, உப்பு, பேக்கிங் பவுடர் சேர்த்து எண்ணெய் விட்டுப்பிசையவும். ஓமம் சேர்த்து மா மிருதுவாகும் வரை பிசையவும். இதை 24—25 உருண்டைகளாக உருட்டிக் கொண்டு பூரிகளாகத் திரட்டவும். ஒவ்வொரு பூரியின் நடுவிலும் பருப்புக் கலவையை வைத்து ஓரத்தை ஈரப்படுத்தி சமோசா போன்று மூடி, எண்ணெயில் போட்டுப் பொரித்தெடுக்கவும். இனிப்பு, புளிப்பு சட்னியுடன் சேர்த்துப் பரிமாறலாம்.




# தினமும் ஒரு பப்பாளி

பழங்கள் மனித உடலுக்கு ஆரோக்கியம் அளிப்பவையாகும். ஒவ்வொரு பழத்திலும் பல்வேறு சத்துக்கள் உள்ளன. அன்றாடம் பழங்களைச்சாப்பிட்டு வந்தால் உடல் நலக்குறைவோ, சோர்வோ ஏற்படாது. இதில் பப்பாளிப்பழத்தில் பல்வேறுபட்ட விட்டமின்கள் உள்ளன. இவற்றைத்தினமும் சாப்பிட்டு வந்தால் உடலில் புத்துணர்ச்சி ஏற்படும். பப்பாளிப்பழம் மட்டுமல்லாது விதைகள், இலைகள், காய்கள் ஆகியவும் உடல் நலத்துக்கு சிறந்தவையாகும்.



பப்பாளிப் பழத்தைத் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் கல்லீரல் வீக்கம் ஏற்படாது. இப்பழத்துடன் தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் நரம் புத்தளர்ச்சி குறையும். நன்றாகப்பழுத்த பப்பாளிப்பழத்தை தேனுடன் சேர்த்து பிசைந்து முகத்தில் பூசி, ஊறிய பின்னர் தண்ணீரால் கழுவி வந்தால் முகச்சுருக்கம் நீங்கி புத்துணர்ச்சி பெறும்.

இந்த முறையை அடிக்கடி செய்து வந்தால் முகம் வசீகர அழகு பெறும்.

உடல் எடை அதிகம் கொண்டவர்கள் பப்பாளியைக் கூட்டாகச் செய்து சாப்பிட்டு வரலாம். இதனால் உடல் எடை குறைந்து அழகிய தேகத்தைப் பெற முடியும். பப்பாளிக்காயின் பாலை வாய்ப்புண் மற்றும் புண்கள் மேல் பூசினால் விரைவில் குணமாகும்.


பப்பாளி விதைகளை அரைத்து பாலில் சேர்த்துச்சாப்பிட்டு வந்தால் வயிற்றில் உள்ள பூச்சிகளை அழித்து உடல் நலக் குறைவு ஏற்படுவதை தடுக்க உதவும். தேள் கொட்டிய இடத்தில் பப்பாளி விதைகளை அரைத்துப் பூசினால் வலி நீங்கும். விஷமும் இறங்கிவிடும்.

உடலில் ஏற்படும் கட்டிகள் மீதுபப்பாளி இலைகளை அரைத்துப்பூசி வந்தால் சிறிது நாட்களிலேயே உடைந்து குணமாகிவிடும். உடல் வீக்கங்களிலும் பப்பாளி இலைகளைத் தடவலாம். இதனால் வீக்கம் விரைவில் கரைந்துவிடும்.

பெரியவர்கள் மட்டுமல்லாது குழந்தைகளும் பப்பாளிப்பழங்களை உட்கொள்ளலாம். பப்பாளிப்பழத்தைக் குழந்தைகளுக்கு அடிக்கடி கொடுத்து வந்தால் உடல் வளர்ச்சி துரிதமாகும். எலும்பு மற்றும் பற்கள் உறுதியுடன் வளரும். பப்பாளிப் பாலை குழந்தைகளின் தலையில் ஏற்படும் புண்களில் பூசி வந்தால் புண்கள் விரைவில் குணமடைந்துவிடும்.

# மருதாணி அலங்காரமும் மருத்துவ குணங்களும்

மருதாணி அலங்காரம் என்பது ஒரு காலத்தில் திருமணப் பெண்களுக்காக என்று ஒதுக்கப்பட்ட காலம் மாறி இன்று எல்லாப் பெண்களுமே மருதாணி போட்டு தம்மை அலங்கரித்து மகிழ்வதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. ஆனால் இந்த மருதாணியில் மருத்துவ குணங்களும் உண்டு என்பதை யாரும் மறந்துவிடவும் கூடாது என்பதற்காக இன்று நாம் மருதாணி அலங்காரம் சம்பந்தமான சில குறிப்புகளைத் தருகிறோம்.



மருதாணி போடுவதால் ஒருவித சுகந்த மணம் இருப்பதால் நமது மனமும், உடலும் சுத்தமாகவும் அமைதியாகவும் இருக்கும். மருதாணி இலையின் நறுமணம் எமது மனதில் ஏற்படும் சோர்வைத்தடுக்கும் ஆற்றல் கொண்டது.

நகச்சுத்து வந்தவர்களும், பித்த வெடிப்பு உள்ளவர்களும் தொடர்ந்து மருதாணியை வைத்துக்கொண்டால் பூரண குணம் கிடைக்கும். மருதாணியை தலை முடிக்குப் போடுவதால் தலைமுடி நல்ல பலத்தையும் பளபளப்பையும் பெறுகிறது.

மருதாணி குளிர்ச்சியைத் தருவதால் மனம் அமைதி அடைகிறது. பொடுகு வராமல் தடுக்கிறது. முடி நீண்டும் அடர்த்தியாகவும் வளர உதவுகிறது.

மருதாணி போட்டுக்கொள்வதற்கு முதல் நாளே, 8 மணி நேரத்துக்கு முன்பாக மருதாணியைக் கலந்து வைக்க வேண்டும்.

இதற்குத் தரமான மருதாணிப்பவுடரை வாங்கிப் பயன்படுத்துவது சிறந்தது. எலுமிச்சைச்சாறு, லவங்க எண்ணை, தேயிலை, நீலகிரித் தைலம் போன்றவற்றைக் கலப்பதனால் சிவப்பு நிறத்தின் தன்மை மேலும் கூடும்.

சாதாரணமாக குளிர்ச்சியான உடல் உள்ளவர்களுக்கு மருதாணி நிறம் அதிகம் படியாது. ஆகவே அவர்கள் மருதாணி போடும்போது லவங்க எண்ணெயில் சில துளிகள் அதிகம் விட்டுக்கலக்க வேண்டும்.

சிலர் மருதாணி போட்டால் உடலில் அதிகப்படியான குளிர்ச்சி ஏற்பட்டு காய்ச்சல் வந்துவிடும் என்று பயப்படுவார்கள். அதைத் தடுக்க மருதாணி போடுவதற்கு முன்பு யூக்கலிப்டஸ் எண்ணெயை கைகளில் போட்டு இரண்டு கைகளையும் ஒன்றுடன் ஒன்று சேர்த்து நன்றாக தேய்க்க வேண்டும். அதன் பிறகு மருதாணி அலங்கரிப்பைத் தொடங்க வேண்டும்.



மருதாணிக்குரிய வடிவங்களை போட்டவுடன் 15 நிமிடங்களுக்கு ஒருமுறை தடவுவதால் வடிவம் கலையாமலும், மருதாணி கீழே விழாமலும் இருக்கும்.

எலுமிச்சைச்சாறு போட்டு மருதாணிப் பவுடரைக் கலக்கினால் கை நல்ல சிவப்பு நிறமாகும்.

ஆகவே சகோதரிகளே, கோடை வெயில் சுட்டெரிக்கும் இந்த நேரத்தில் உங்கள் உடலை வெய்யிலில் இருந்து பாதுகாக்க வேண்டாமா?

எனவே, இப்போதே ஆயத்தமாகுங்கள் மருதாணி வாங்கப் போவதற்கு!

# நாலும் தெரிந்தவன்

தம்பி மகன் அறிவழகனுடன் ஆட்டோவில் வந்து இறங்கினார் ராமமூர்த்தி. முகம் கழுவிக் கொண்டு வந்து சாய்வு நாற்காலியில் அமர்ந்த ராமமூர்த்தி மனைவி கொடுத்த தேநீரைக் குடித்துக் கொண்டே,

''இங்க பார் அறிவழகா, இனிமே நீ இங்கதான் தங்கப் போறாய். உன்னுடைய வீடுபோலவே இதை நினைச்சுக்கொண்டு இயல்பா இரு. நம்ம மீனாவும் பாஸ்கரும் படிக்கிற பாடசாலையிலேயே, உன்னையும் சேர்க்கிறதுக்கு ஏற்பாடு பண்ணியிருக்கிறேன். அநேகமா இன்னும் இரு வாரத்தில உனக்கு அங்கே இடம் கிடச்சுடும். திறமையா படிக்கணும். என்ன புரிஞ்சுதா...'' எனக் கேட்க மெல்லிய குரலில் ''சரி பெரியப்பா.'' என்றான் அறிவழகன்.



''என்னம்மா இந்த அப்பா நாங்க எதைச் சொல்லியும் கேட்காம இப்படி உடும்புப்பிடியாய் போய் அவனை இங்கே அழைத்துக் கொண்டு வந்துட்டாரு. எங்களுக்குக் கொஞ்சம் கூட பிடிக்கலேம்மா.'' ஒரே குரலில் தாய் கற்பகத்திடம் முறையிட்டார்கள், மீனாவும் பாஸ்கரும்.

''அப்படியெல்லாம் சொல்லக் கூடாது. அறிவழகனை நம்ம வீட்டுல தங்க வைத்து படிக்க வைக்கணும்னு சித்தப்பா நினைச்சதுல என்ன தப்பு.''

''நாங்க அதுக்குச் சொல்லலேம்மா. அறிவழகன் கிராமத்துல பிறந்து வளந்தவன். அந்த கிராமத்துல அதுவும் அரசாங்கப் பள்ளியில படிச்சவன். அவனை நாங்க படிக்கிற தனியார் பள்ளியில அதுவும் எங்க கூடவே அனுப்பி படிக்க வைக்கப் போறீங்களே.... கிராமத்துக்களை அவனோட முகத்துல அப்பிகிட்டிருக்கு. சரியா இங்கிலீஷ்ல பேச வருமோ, என்னவோ?''

அம்மா பதிலுக்கு ''அதெல்லாம் சரியாயிடும்'' என்றாள்.

அன்று மாலை. ''மாடியில் இறகுப்பந்து ஆட இன்றைக்கு அவனையும் கூட்டிக்கொண்டு போவோமா?'' பாஸ்கர் யோசனை சொல்ல, மீனாவும் ஆமோதிக்க, அறிவழகனையும் அழைத்துக் கொண்டு மொட்டை மாடிக்குச் சென்றனர்.

''அய்யய்யோ... பந்தை எடுத்து வர மறந்துட்டேனே.'' பாஸ்கர் தலையில் அடித்துக் கொண்டான். ''என்னடா நீ, சாவியைக் கொடு. உனது அலுமாரியைத் திறந்து நானே எடுத்துக் கொண்டு வாறேன்'' என மீனா ஆரவாரப்படுத்த, தான் நின்றிருந்த இடத்திலிருந்தே சாவியை வேகமாக தூக்கிப் போட்டு, ''பிடிச்சுக்கோ மீனா.. ''என்றான்.

பறந்து வந்த சாவி மீனாவின் கைக்குள் அகப்படாமல், மாடியில் திறந்திருந்த கழிவறைக்குள் போய் விழ, டைல்ஸ் பதிக்கப்பட்ட தரையில் வழுக்கிக் கொண்டு போய் லொடுக்கென பேசினுள் விழுந்து விட்டது!

''என்ன பாஸ்கர் முட்டாள்தனமா இப்படி செஞ்சுட்டே.... இப்ப எப்படி சாவியை எடுப்பே.'' முகத்தைச் சுளித்துக் கொண்டே கேட்டாள் மீனா. அந்த நேரத்தில் பிள்ளைகளுக்காக தேநீர்க் குவளைகளை எடுத்துக் கொண்டு மேலே வந்த கற்பகம்

''என்ன பிரச்சினை, ஆளாளுக்குத் திருதிருன்னு முழிச்சிக்கிட்டிருக்கீங்க'' ''அது வந்தும்மா.'' எனத்தொடங்கி நடந்தது அனைத்தையும் மீனாகூறிமுடிக்க

''அப்ப சரி பாஸ்கர், கழிப்பறை பேசினுக்குள் கையை விட்டு நீ தான் சாவியை எடுக்கணும்'' என்றாள் கற்பகம்.

''அய்யய்யோ கையை விட்டா உவ்வே..'' குமட்டினான் பாஸ்கர்.

என்ன செய்வது என்று அவர்கள் ஆலோசனை செய்து கொண்டிருக்கட்டும் என்று கீழே இறங்கிப் போன அறிவழகன், தனது பெட்டியில் இருந்த ஒரு காந்தத் துண்டை எடுத்துக் கொண்டு மேலே வந்தான். ''மீனா கட்டுக் கம்பி ஏதாச்சும் இருக்கா?'' எனக் கேட்க, அவள் கொண்டு வந்து கொடுத்த மெல்லிய கம்பியைக் காந்தத் துண்டின் மீது சுற்றி அதை அங்கு மூலையில் கிடந்த ஒரு மூங்கில் குச்சியின் முனையில் வைத்து இறுக்கமாய்க் கட்டினான். அந்த மூங்கில் குச்சியை கழிப்பறை பேசினுக்குள் லாவகமாக விட, சாவிக்கொத்து மூங்கில் குச்சியுடன் இணைக்கப்பட்டிருந்த காந்தத் துண்டில் ஒட்டிக் கொண்டது. அதனை வெளியே எடுத்து சோப் தண்ணீர் மற்றும் பினாயில் கொண்டு கழுவிக் கொடுத்தான் அறிவழகன். மிகவும் சமயோசிதமாகச் செயல்பட்ட அறிவழகனை பிரமிப்போடு பார்த்துக்கொண்டு நின்றார்கள் பாஸ்கரும் மீனாவும்.

அறிவு திறமை என்பதெல்லாம் பாடப் புத்தகத்தில் இருப்பதை மனப்பாடம் செய்து தேர்வுத் தாளில் எழுதி விடுவதில் மட்டும் இல்லை, விஷயத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்வதிலும், அதனை நடைமுறை வாழ்க்கையில் செயல்படுத்துவதிலும் தான் இருக்கின்றன.

அவசரப்பட்டு அறிவழகனை சாதாரணமாய் எடை போட்டது எவ்வளவு தவறு என்பதை உணர்ந்து கொண்டார்கள் பாஸ்கரும், மீனாவும் அவனிடமிருந்து நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை ஏராளம் என நினைத்த அவர்கள் மனதில் அறிவழகன் உயர்ந்து நின்றான். ஆகவே பார்த்தவுடன் யாரையுமே குறைத்து மதிப்பிடக் கூடாது பிள்ளைகளே!

# மொழிகளிலுள்ள எழுத்துக்கள்

| | | |
|---|---|---|
| தமிழ் | - | 247 |
| இத்தாலி | - | 20 |
| ஆங்கிலம் | - | 26 |
| அரபு | - | 28 |
| பிரேஞ்சு | - | 16 |
| இலத்தின் | - | 22 |
| கிரேக்கம் | - | 24 |

இ.புவேந்திரன்
தரம்—8
கிளி/ இந்துக் கல்லூரி

# பொது அறிவு

1) ஒட்சிசனின் தமிழ்ப் பெயர் என்ன?
பிராணவாயு

2) உலகில் திராட்சை அதிகம் விளையும் நாடு எது ? பிரான்ஸ்

3) உலகின் மிகப்பெரிய நகரம் எது?
லண்டன்

4) இருண்ட கண்டம் என அழைக்கப்படுவது? ஆபிரிக்கா


5) நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு?
நோர்வே

இ.புவேந்திரன்
கிளி/ இந்துக்கல்லூரி

# சிறார்களின் கைவண்ணம்




# கண்டுபிடியுங்கள்!



அருகே உள்ள படத்தை உற்றுப் பாருங்கள். இதற்குள் சாதுவான ஒரு பிராணி மறைந்துள்ளது. அந்தப் பிராணியில் எத்தனை பிராணிகள் உள்ளன என்பதுதான் கேள்வி உங்களால் முடிந்தால் கண்டுபிடியுங்கள் முடியாவிட்டால் அடுத்த வாரம்வரை பொறுத்திருங்கள். (இங்கு இதன் விடை பிரசுரமாகும்)

# கலைச் சொற்கள்

Internet - இணையம்
E.mail - மின்னஞ்சல்
Budget-பாதீடு
Census—தொகை மதிப்பு
Black Hold—கருந்துளை
Computer Soft Wear -கணணி மென்பொருள்
World Wide Web -வையக விரிவு வலை
F.M—பண்பலை
Cloning—படியாக்கம்
Media— ஊடகம்

மா.அருளினி
தரம்-10
கிளி/உருத்திரபுரம் ம.வி

# கண்டுபிடிப்புக்கள்

| | |
|---|---|
| அணுகுண்டு | :— பிரிச் பேஹ்ர்,பைரல்ஸ் 1939 |
| ஆகாய விமானம் | :—ரைட் சகோதரர்கள் 1903 |
| செல்போன் | :— டாக். ஜாக்வஸ் பிராண்டேன் பிரேகர் 1908 |
| கணனி | :— சார்ல்ஸ் பாபேஜ் 1835 |
| துளைக்கும் இயந்திரம் | :— வில் ஹம் கீ பெயின் 1895 |
| எலக்ரிக் கிற்றார் | :— ரிக் கென்பாகெர் 1931 |
| ஜெட் கருவி | :— சார் பிராங்க் விட்டல் 1937 |
| புகைப்படம் | :— லூயிஸ் லீ பிரின்ஸ் 1885 |
| பூதக்கண்ணாடி | :— சச்சாரியாஸ் ஜேன்ஸ்சன் 1590 |

ப.ஹரிகரன்
யா/சென் ஜோன்ஸ் கல்லூரி

# உங்களாலும் முடியும்!

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| A | N | N | T | I | M | E | U |
| S | U | A | E | J | U | L | Y |
| D | A | N | C | E | N | D | T |
| N | C | E | N | G | G | O | D |
| E | A | M | T | E | E | O | D |
| R | T | E | A | B | L | U | T |
| A | B | C | L | I | O | E | A |
| W | I | T | E | O | N | L | B |

மேலே உள்ள அட்டவணையில் உள்ள எழுத்துக்களில் இருந்து மேலே குறிப்பிட்டது போல ONE, TIME போன்று தொடர்ந்து வரும் எழுத்துக்களைப் பயன்படுத்தி எத்தனை சொற்களை உங்களால் எழுத முடியும்? உங்களால் கண்டுபிடிக்கப்படும் சொற்களை நீங்கள் ஓர் தபால் அட்டையில் எழுதி எமக்கு அனுப்பலாம். அதிகூடிய சொற்களை எழுதும் மூவருடைய பெயர் விபரங்கள் இச் சிறுவர் பகுதியில் பிரசுரிக்கப்படும். (கடந்த வாரம் வெற்றி பெற்றோரது பெயர் விபரம் அடுத்த வாரம் வெளிவரும்)

நீங்கள் பதில் எழுதி அனுப்ப வேண்டிய முகவரி:

''சிறுவர் பகுதி''
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

# முஸ்லிம் கலாசார அமைச்சு ஒழிப்பும் தலைவர்களின் அசட்டையும்

இலங்கை முஸ்லிம்களின் சமய ரீதியான நலன்களைப் பேணுவதற்கென கடந்த 27 வருட காலமாக செயற்பட்டு வந்த முஸ்லிம் சமய, கலாசார விவகார அமைச்சை புதிய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு இல்லாதொழித்திருப்பது முஸ்லிம் மக்களிடையே பெரும் கவலையையும், விசனத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தலைமையிலான ஆட்சியில் முஸ்லிம்களின் நலன்கள் பேணப்படும் எனவும் அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் எனவும் கடந்த பொதுத் தேர்தல்



பேரியல் அஷ்ரப்

காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பிரசாரம் இதன் மூலம் பொய்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதியின் இந்நடவடிக்கையானது புதிய அரசு தொடர்பில் முஸ்லிம்களிடையே நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்குப் பதிலாக அச்ச உணர்வைத் தோற்றுவித்திருக்கிறது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு பதவியேற்ற முதல் தினத்தன்றே முஸ்லிம் சமூகத்துக்கு இடிவிழுந்து விட்டது.

முஸ்லிம்கள் தொடர்பில் ஜனாதிபதியின் நிலைப்பாடு எத்தகையதாக இருக்கிறது என்பது முஸ்லிம் விவகார அமைச்சை அவர் இல்லாதொழித்திருப்பதன் மூலம் புரிந்து கொள்ளலாம். அதைவிட சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது தொடர்பில் ஜனாதிபதி வெளியிட்ட முதலாவது பிரகடனத்தின்போது முஸ்லிம்களை கணக்கில் எடுக்காது விட்டிருந்தமை அவரது நிலைப்பாட்டை மேலும் தெளிவாகக் காட்டியிருக்கிறது. ஜனாதிபதியின் இத்தகைய நிலைப்பாட்டிற்கு பின்னணிக் காரணம் ஒன்று இல்லாமல் இல்லை.

### முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு வழங்காததன் பிரதிபலிப்பு

அறுதிப் பெரும்பான்மை அற்ற ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவு கிடைக்காததன் பிரதி பலிப்பாகவே ஜனாதிபதி இத்தகைய நிலைப்பாட்டுக்கு வந்திருக்கிறார். சுதந்திரக் கூட்டமைப்பு அரசுக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு கொடுப்பதன் மூலமே தமது நலன்களையும், உரிமைகளையும் பேணிப்பாதுகாக்க முடியும் என்ற உணர்வை முஸ்லிம் மக்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்ற எண்ணத்திலேயே ஜனாதிபதி இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்.

அதன் மூலம் அரசுக்கு ஆதரவு வழங்குமாறு முஸ்லிம்மக்கள் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு அழுத்தம் கொடுப்பார்கள் என ஜனாதிபதி எதிர்பார்த்தார். அரசின் முக்கிய அமைச்சர்களும், ஊடகத்துறை பிரதி அமைச்சர் எம்.எச்.சேகு இஸ்ஸதீன், மேல் மாகாண ஆளுனர் எஸ்.அலவி மௌலானா, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவர் எம்.எம்.சுஹைர் போன்ற முஸ்லிம் அரசியல்வாதிகளும் ஊடகங்கள் மூலம் வெளியிட்ட கருத்துக்கள் ஜனாதிபதியின் நிலைப்பாட்டையே வெளிப்படுத்தியிருந்தன.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், சுதந்திரக் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவு வழங்குவதன் மூலமே வடக்கு –கிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்பதோடு நாட்டில் பரவலாக வாழ்கின்ற முஸ்லிம் மக்களுக்கு சேவையாற்றலாம் என பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன் அறிக்கையொன்றில் தெரிவித்திருந்தார். ஆகவே முஸ்லிம் காங்கிரஸ் கூட்டமைப்பு அரசுக்கு ஆதரவு வழங்க முன்வராவிட்டால் அந்த அரசு முஸ்லிம்கள் விடயத்தில் கவனம் செலுத்தாது என்பதையே சேகு இஸ்ஸதீனின் கருத்து வெளிப்படுத்துகின்றது.

### முஸ்லிம் விவகார அமைச்சின் முக்கியத்துவம்

எவ்வாறாயினும் முஸ்லிம் சமய, கலாசார விவகார அமைச்சை இல்லாதொழித்திருப்பதானது இலங்கை முஸ்லிம்களை ஒட்டுமொத்தமாகப் புறக்கணித்தது ஆகும். அவர்கள் தமது மார்க்க உரிமைகளை அனுபவிப்பதிலிருந்து தடுக்கப்பட்டிருகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐ.தே.க.ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்ட முஸ்லிம் விகார அமைச்சு கடந்த 27 வருடங்களாக மிகச் சிறப்பாக இயங்கி வந்திருக்கிறது. இந்த அமைச்சின் முதலாவது அமைச்சராக எம்.எச்.முஹம்மட் பணியாற்றினார். அதனைக் தொடர்ந்து ஏ.எச்.எம். அஸ்வர், எஸ்.அலவி மௌலானா, ஏ.எச்.எம்.பௌஸி ஆகியோரும், இறுதியாக கடந்த அரசாங்க காலத்தில் ரவூப் ஹக்கீமும் முஸ்லிம் விவகார அமைச்சராகப் பணியாற்றி இருந்தனர்.

முஸ்லிம் கலாசார திணைக்களம், வக்பு சபை போன்றவற்றை நிருவகிப்பதும், இலங்கை முஸ்லிம்களின் ஹஜ் விவகாரங்களை கவனிப்பதும், றமழான் நோன்பு காலத்தில், அதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதும், நாட்டிலுள்ள பள்ளிவாசல்களை புனரமைப்புச் செய்வதும், தேசிய மீலாத் விழாக்களை நடத்துவதும், முஸ்லிம் கிராமங்களின் வரலாற்றைத் தொகுத்து, நூல்கள் வெளியிடுவதும் முஸ்லிம் விவகார அமைச்சின் முக்கிய பொறுப்புகளாக இருந்து வந்தன.

### அஸ்வர் ஹாஜியாரின் பொற்காலம்

முன்னாள் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர், ஜனாதிபதி ஆர்.பிரேமதாசவின் அரசில் முஸ்லிம் விவகார அமைச்சராகப் பணியாற்றிய ஆறு வருட காலமும் அந்த அமைச்சின் பொற்காலம் என வர்ணிக்கப்படுகிறது.

மீலாத் விழாக்களை அரச அங்கீகாரத்துடன் தேசிய விழாக்களாக நடத்தும் திட்டத்தை அறிமுகப்படுத்தி, அதனை மிகச் சிறப்பாக நடத்திக் காட்டியதுடன் விழாக்கள் நடைபெறும் மாவட்டங்களின் முஸ்லிம் அரசியல், கலாசார, பொருளாதார வரலாற்றினை தொகுத்து நூல்களாக வெளியிட்டு இலங்கை வாழ் முஸ்லிம் சமூகத்தின் இன அடையாளத்தை சர்வதேசமயப்படுத்தியவர் அஸ்வர் ஹாஜியார் என்றால் அது மிகையாகாது.

அத்துடன் கலை, இலக்கிய, ஊடகத் துறைக்கு பெரும் பணியாற்றிய நூற்றுக்கு மேற்பட்ட பிரமுகர்களை 'வாழ்வோரை வாழ்த்துவோம்' விருது வழங்கல் விழாக்கள் மூலம் கௌரவித்து, பொற்கிளி வழங்கி அவர்களை கைதூக்கி விட்டவர் என்ற பெருமையையும் அஸ்வர் ஹாஜியார் பெறுகின்றார்.

இலங்கையிலிருந்து புனித மக்காவுக்கு ஹஜ் கடமைக்காக செல்கின்ற முஸ்லிம்களுக்கு நிறையச் சலுகைகளையும் , வசதிகளையும் பெற்றுக் கொடுத்து ஹஜ் விவகாரத்தை சிறப்பாக வழிநடத்திய அஸ்வர் ஹாஜியார் முஸ்லிம் கலாசார அமைச்சை சமூகத்தின் சமய விடயங்களுக்காக நன்கு பயன்படுத்திக் காட்டினார்.

அவரது முன்மாதிரியான செயற்பாடுகளை பின்னர் பதவி வகித்த அலவி மௌலானா, பௌஸி, ரவூப் ஹக்கீம் ஆகியோர் ஓரளவு பின்பற்றி முஸ்லிம் கலாசார அமைச்சின் சேவைகளை சமூகத்திற்குப் பெற்றுக்கொடுத்திருக்கின்றனர். முஸ்லிம் கலாசார திணைக்களத்துக்கென ஐந்து கோடி ரூபா செலவில் புதிய கட்டடத் தொகுதி ஒன்று ரவூப் ஹக்கீமின் முயற்சியினால் நிர்மாணிக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### அரச தரப்பினரின் நொண்டிச்சாட்டு

முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த அமைச்சு ஒன்றை புதிய அரசில் இல்லாதொழிப்பதற்கு நியாயமான காரணம் எதுவுமே கிடையாது.

ஒருவேளை அமைச்சுகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக முஸ்லிம் விவகார அமைச்சை இல்லாமல் செய்திருந்தால் அதனை ஓரளவு ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், அமைச்சுக்கள் அதிகரிக்கப்பட்ட நிலையில் முஸ்லிம் விவகார அமைச்சு ஒழிக்கப்பட்டதானது மிகவும் கண்டனத்துக்குரிய விடயம் ஆகும்.

இது போன்றே 1994 ஆம் ஆண்டில் முதல் முதலாக பதவிக்கு வந்த ஜனாதிபதி சந்திரிகா தனது முதலாவது அமைச்சரவையில் முஸ்லிம் கலாசார அமைச்சை உருவாக்காது விட்டார். அதனால் அப்போது எழுந்த கண்டனக் குரல்களை தணிப்பதற்காக அப்போதைய அமைச்சர்களான எம்.எச்.எம்.அஷ்ரப், ஏ.எச்.எம்.பௌசி ஆகியோரிடையான போட்டி காரணமாகவே அந்த அமைச்சு எவரிடமும் கையளிக்கப்படவில்லை என்ற கதை பரப்பி விடப்பட்டது.

பின்னர் ஒரு வருடம் கடந்த நிலையில் முஸ்லிம் கலாசார அமைச்சு உருவாக்கப்பட்டு, அலவி மௌலானாவிடம் கையளிக்கப்பட்டது. அதேவேளை ஹஜ் விடுமுறை, மகா சிவராத்திரி விடுமுறை போன்றவற்றிலும் ஜனாதிபதி கைவைத்திருந்தார். முஸ்லிம்களினதும், இந்துக்களினதும் முக்கிய விடுமுறைகளை ஒழித்தார். அதனால் எதிர்ப்புக் கிளம்பவே இரு வருடங்களின் பின்பு அவற்றை மீள வழங்கினார்.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா, காலத்துக்குக்காலம் சிறுபான்மையினரின் உரிமைகளில் கைவைப்பதை வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறார். அந்த வரிசையிலேயே இப்போது முஸ்லிம் விவகார அமைச்சையும் ஜனாதிபதி இல்லாமல் செய்திருக்கிறார்.

சுதந்திரக் கூட்டமைப்பு அரசமைத்து இரண்டு மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இன்னும் முஸ்லிம் விவகார அமைச்சு ஏற்படுத்தப்படவில்லை. அகில இலங்கை ஜம்மியதுல் உலமா சபை, பள்ளிவாசல்கள் சம்மேளனம், தேசிய முஸ்லிம் கவுன்சில், வடக்கு – கிழக்கு ஐக்கிய மறுமலர்ச்சி மன்றம் உட்பட பல்வேறு முஸ்லிம் அமைப்புகளும், நிறுவனங்களும் முஸ்லிம் விவகார அமைச்சை உருவாக்குமாறு விடுத்துவருகின்ற கோரிக்கையை ஜனாதிபதி செவிமடுப்பதாகத் தெரியவில்லை.

முஸ்லிம் விவகார அமைச்சு உருவாக்கப்படாதிருப்பது குறித்து ஜனாதிபதியிடமிருந்தோ, அரசிடமிருந்தோ பதில் எதுவும் வெளியிடப்படவில்லை. அப்போது அஷ்ரப் – பௌசி இழுபறி இருந்தது போன்று இப்போது பேரியல் – பௌசி – அதாவுல்லா கயிறிழுப்பு நடைபெறுகிறதா என்ற கேள்வியும் எழுகின்றது.

அரசு தரப்பில் உத்தியோகப்பூர்வமாக பதில் அளிக்கப்படாத நிலையில் ஜனாதிபதிக்கு மிக நெருக்கமானவரான மேல் மாகாண ஆளுனர் எஸ்.அலவி மௌலானா வெளியிட்ட கருத்து மிகவும் கேலிக்கூத்தானதாகத் தெரிகிறது. முஸ்லிம் கலாசாரத் திணைக்களத்தை மறுசீரமைக்க வேண்டியிருப்பதாலேயே முஸ்லிம் விவகார அமைச்சு உருவாக்கப்படவில்லை என்றும், அந்தப் பணி பூர்த்தியடைந்ததும் வேறொரு அமைச்சின்கீழ் அந்தத் திணைக்களம் கொண்டு வரப்படும் எனவும் கூறியுள்ளார்.

பொதுவாக புதிய அரசு ஒன்று பதவிக்கு வந்ததும் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மறுசீரமைக்கப்படுவது வழமையே. அதற்காக குறித்த அமைச்சை இல்லாதொழிப்பதில்லையே. அது முஸ்லிம் விவகார அமைச்சு விடயத்தில் மாத்திரம் கடைப்பிடிக்கப்பட்டது ஏன்? குறித்த திணைக்களம் மறுசீரமைக்கப்படும்போது அதனை மேற்பார்வை செய்யும் அமைச்சர் யார்?

முஸ்லிம் கலாசார திணைக்களம் மறுசீரமைக்கப்பட்டதும், அதனை வேறொரு அமைச்சின் கீழ் ஜனாதிபதி கொண்டு வரவிருக்கிறார் என அலவி மௌலானா தெரிவித்துள்ளார். அப்படியானால் முஸ்லிம் விவகார அமைச்சு உருவாக்கப்படமாட்டாது என்பது தானே அர்த்தம். ஆனால், முஸ்லிம்கள் கேட்பது முஸ்லிம் விவகார அமைச்சு ஏன் உருவாக்கப்படவில்லை – அதற்கென ஏன் ஒரு முஸ்லிம் அமைச்சர் நியமிக்கப்படவில்லை என்பதுதான்!


### முஸ்லிம் விவகாரத்துக்கு ஜே.வி.பி. விஜித ஹேரத் பொறுப்பு?

இந்த நிலையில் கலாசார, புத்தசாசன அமைச்சரான ஜே.வி.பியின் விஜித ஹேரத் முஸ்லிம் சமய, கலாசார விவகாரத்துக்கு பொறுப்பானவரா என்ற கேள்வி எழுப்பப்படுகிறது. முஸ்லிம் விவகாரத்துக்கென தனியான அமைச்சு உருவாக்கப்படாதிருப்பதால் கலாசார, புத்தசாசன அமைச்சரே அதையும் நிருவகிப்பார்.

முஸ்லிம் கலாசார திணைக்களம், வக்பு சபை, ஹஜ் விவகாரம், மீலாத் ஏற்பாடு என அனைத்து விடயங்களையும் விஜித ஹேரத்தே கையாள்வார். இதனால் முஸ்லிம்கள் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்க நேரிடும். முஸ்லிம் விவகாரத்துக்கென பிரத்தியேகமாக நிதிஒதுக்கப்படமாட்டாது. கலாசார, பௌத்தசாசன அமைச்சர் விஜித ஹேரத்திடம்தான் முஸ்லிம் கலாசார திணைக்களம் கையேந்த வேண்டியிருக்கும்.

### பேரியல், அதாவுல்லா அணியினர் அசட்டை

சுதந்திரக் கூட்டமைப்பு அரசு பதவியேற்ற முதல் நாளன்றே முஸ்லிம் சமூகத்திற்கு வேட்டு வைக்கப்பட்டது குறித்து அந்த அரசில்



அதாவுல்லா

அமைச்சர்களாகப் பதவி வகிக்கும் முஸ்லிம் தலைவர்கள் மூச்சுக்கூட விடவில்லை. குறிப்பாக அமைச்சர்கள் பேரியல் அஷ்ரப், ஏ.எல்.எம்.அதாவுல்லா ஆகியோர் முஸ்லிம் விவகார அமைச்சு ஒழிக்கப்பட்டது தொடர்பாக ஜனாதிபதியிடம் எந்த விதமான ஆட்சேபனையையும் தெரிவிக்கவில்லை.

அவர்கள் தத்தம் பதவிகளில் குறியாக இருந்து தேவையான திணைக்களங்களை ஜனாதிபதியிடம் பெற்றுக் கொண்டனரே தவிர முஸ்லிம் விவகார அமைச்சு தொடர்பில் கவனம் செலுத்தவில்லை. அமைச்சர் அதாவுல்லாவை பொறுத்தவரை தனது கிழக்கு உட்கட்டமைப்பு அமைச்சுடன் எந்த வகையிலும் தொடர்பில்லாத இலங்கை கனிப்பொருள் கூட்டுத்தாபனம், கந்தளாய் சீனித் தொழிற்சாலை, ஒலுவில் துறைமுகம், ரெப்பியா போன்றவற்றை ஜனாதிபதியிடம் பேரம்பேசி பெற்றுக் கொள்ள முடியுமானால் ஏன் அவர் முஸ்லிம் விவகார அமைச்சு விடயத்தில் அசட்டையாக இருக்கிறார்?

அல்லது அமைச்சர்கள் பேரியல் அஷ்ரப்பும், அதாவுல்லாவும் முஸ்லிம் விவகார அமைச்சை உருவாக்குமாறு ஜனாதிபதியிடம் வற்புறுத்திக் கேட்டும், அதனை ஜனாதிபதி ஏற்றுக்கொள்ளாது – அவர்களை புறக்கணித்தாரா?

கடந்த பொதுத் தேர்தலில் பேரியல் அணியினரும், அதாவுல்லா அணியினரும் ஜனாதிபதிமீது பூரண நம்பிக்கை தெரிவித்தும், அவரே முஸ்லிம்களின் உரிமைகளையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்தக்கூடிய ஒரே தலைவர் எனவும் பிரசாரம் செய்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசும், அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் முஸ்லிம்களின் நலன்களைப் புறக்கணிப்பதாகக் குற்றஞ்சாட்டியே அதாவுல்லா அணியினர் ஜனாதிபதி தலைமையிலான சுதந்திரக்கூட்டமைப்பில் இணைந்து கொண்டனர். ஆனால், ஜனாதிபதியும், கூட்டமைப்பு அரசும் முஸ்லிம்கள் விடயத்தில் படுமோசமாக நடந்து கொள்வார்கள் என்பதையே முஸ்லிம் விவகார அமைச்சை இல்லாது ஒழித்ததிலிருந்து புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

இவ்வாறான ஓர் அரசிடமிருந்து முஸ்லிம் விவகார அமைச்சை பெற்றுக்கொள்ள முடியாத முஸ்லிம் தலைவர்கள் சமாதானப் பேச்சில் தனித்தரப்பு, தனி அதிகார அலகு, அம்பாறை கரையோர மாவட்டம், வடக்கு – கிழக்கு மேலதிக மாகாண செயகம் போன்றவற்றை முஸ்லிம்களுக்கு எவ்வாறு பெற்றுக் கொடுக்கப்போகிறார்கள்.

தொடர்ந்தும் மக்களின் வாக்குகளை சூறையாடுவதற்கான கோஷங்களாகவே மேற்படி கோரிக்கைகளை முஸ்லிம் தலைவர்கள் கொண்டிருக்கப்போகின்றனரா?

-அஸ்லம் எஸ். மௌலானா-

# அதிபர் சந்திரிகாவுக்கு ஓர் திறந்த மடல்!

கனம்,

அம்மணி அவர்கட்கு!

சிரம்தாழ்ந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டமானது மிகவும் உக்கிரமடைந்த கால கட்டத்தில் நாட்டின் தலைவியாக தொடர்ந்து இரண்டாவது தடவையாகவும் இருந்திருக்கிறீர்கள்.

உங்கள் பதவிக்காலத்தின் இறுதியில் தேசம் சுமந்து கொண்டிருக்கும் தீர்க்கப்படாத இனப்பிரச்சினையை நல்ல ஒரு தீர்வுக்கு கொண்டு சென்று கரைசேர்க்கும் கடப்பாடும் இப்போது உங்கள் தலையில் சுமத்தப்பட்டிருக்கிறது என்ற வகையில் நீங்கள் ஒரு தீர்க்க மான சக்தியாக இருக்கிறீர்கள் என்பதையும் உங்களுக்கு முதலில் தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

சம காலத்தில் விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்துவது தொடர்பாக தாங்கள் இணங்கியுள்ள விடயங்கள் தொடர்பில் தங்களை ஒரு உன்னதமான தலைவியாக நான் கருதிக் கொண்டபோதும், கடந்த 18 ஆம் திகதிய நாடாளுமன்ற அமர்வுக்குப் பின்பு கட்சிகளை அணுகும் விடயத்தில் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவராக தாங்கள் இருந்து வருகின்றீர்கள்என்பதே எனது கணிப்பு.

உங்களை ஆதரிப்பவர்கள், ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி ஆகிய கட்சிகளை விடுதலைப்புலிகளுக்கு எதிராக பேச வைப்பதன் மூலம் உங்களை நல்ல பிள்ளையாக தமிழ் மக்களுக்கு காட்ட முயற்சிப்பது தான் எனக்குச் சகிக்க முடியாத பிரச்சினையாக இருக்கிறது.

பிரதிச் சபாநாயகர் தெரிவு மற்றும் குழுக்களின் பிரதித் தலைவருக்கான தெரிவுகளை உங்கள் பிரதான பங்காளியான ஜே.வி.பிக்கு தெரியாமல் எதிர்க்கட்சியுடன் சேர்ந்து ஏக மனதாக தெரிவு செய்து கொண்டதன் மூலம் ஜே. வி.பியை உங்கள் கட்சியுடனும், பின்பு தமிழ் தரப்புக்களுடனும்முரண்படவைத்தபெருமை உங்களையே சாரும் என்பது தான் எனது முடிவு.

அது மட்டுமன்றி, ஹெல உறுமய எம். பி. ஒருவரின் இராஜினாமா கடிதத்தை சபா நாயகர் ஏற்றுக் கொண்டதன் மூலம், 19 ஆம் திகதிய நாடாளுமன்றக் கூட்டத்தில் கந்தப்பளை விவகாரம் தொடர்பான ஒத்திவைப்பு விவாதத்தை ஜே.வி.பி குழப்பியதற்கும் நீங்கள் தான் பொறுப்புக்கூற வேண்டும்.

ஆறுமுகம் தொண்டமானை அமைச்சுப் பதவி காட்டி வளைத்துப் பிடித்துக் கொண்டீர்கள். அவ்வாறே ஹக்கீம் மீதான அவதூறுகள் பற்றி நீங்கள் மௌனம் சாதித்துக் கொண்டிருப்பதும் எங்களுக்குப் புரியாத விடயமல்ல.

முக்கியமாக, நோர்வேக்கு நீங்கள் உறுதியளித்த விடயங்களை நாடாளுமன்றத்தில் உங்கள் பங்காளிகளும், தென்னிலங்கை சிறுபான்மை கட்சிகளும் மறுதலிப்பதை கண்டும் காணாதிருக்க நீங்கள் முயற்சிப்பதாகவே நான் கருதுகிறேன்.

-இவ்வாறு நீங்கள் இருப்பதன் மூலம்

* தமிழ் மக்களின் அபிலாஷைகளை நீங்கள் புரிந்து கொள்பவர்களாக உங்களை வெளிப்படுத்த முயற்சிக்கிறீர்கள்.

* இதன் மூலம் நடை பெற இருக்கும் மாகாண சபைத் தேர்தல் மற்றும் அடுத்த வருடம் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படும் "பொதுத் தேர்தல்" என்பவற்றில் நீங்களும் உங்கள் கட்சியும் வெற்றி பெற வேண்டும் என விரும்புகிறீர்கள்.

*புலிகளின் கோரிக்கைக்கு இணங்கியுள்ளதன் மூலம் வலுவிழந்து போய் இருந்த இனவாதிகளை நீங்கள் உஷாரடையச் செய்து இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதானப் பேச்சுக்களின் மீது தேவையற்ற குழப்பங்களையும், தடைகளையும் ஏற்படுத்த முயற்சிக்கிறீர்கள்.

*நீங்கள் இணக்கம் தெரிவிக்கும் விடயங்களை நாடாளுமன்றத்தில் உங்கள் பங்காளிகள் மறுதலிப்பதை ஏதோ அதெல்லாம் அவர்களின் பிரச்சினை இதுபற்றி எனக்கு தெரியாது என காண்பிக்க முயற்சிக்கிறீர்கள்.



*மொத்தமாக நாட்டில் நடை பெறும் எல்லா அனைத்து அடாவடித்தனங்கள் மற்றும் இனநீதியான வன் செயல்கள் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு பேசாமல் இருப்பதன் மூலம் விடுதலை புலிகள் நீங்கள் எடுத்துக் கொண்ட விடயங்களிலும் நம்பிகையிழந்து அவர்களாகவே சண்டைக்கு வரட்டும் என்று எதிர் பார்க்கிறீர்கள்.

*அவ்வாறு புலிகள் யுத்தத்திற்கு வராமல் இருந்து விட்டால் நிலவுகின்ற சமாதான சூழலின் பெயரால் சர்வதேச சமூகத்திடமிருந்த நல்ல பெயரையும் வாங்கிக் கொண்டு, கூடவே வடக்கு-கிழக்கிற்கு வெளி நாடுகள் தரும் நிதியையும்வாங்கி மனம்போல் தென்னிலங்கைக் கும் செலவு செய் யலாம் என எதிர்பார்க்கிறீர்கள்.

எல்லாத்தையும்கூட்டிக்கழித்துப் பார்க்கும் போது நாட்டில் நிலவும் சமாதானத்தின் மூலமான அனுகூலங்களை உங்கள் கட்சி பெற வேண்டும்என்பதில் குறியாக இருக்கிறீர்கள்.

அது முடியாமல் யுத்தம் என்று வந்து விட்டால் நாம் எல்லாவற்றுக்கும் இணங்கினோம், புலிகள் தான் சண்டைக்கு வருகிறார்கள் என்று கூறி நல்ல பிள்ளையாக உங்களை வெளிப்படுத்த முயற்சிப்பது என்பவை தான் உங்கள் நோக்கமாக எனக்குப் படுகின்றது.

கடந்த பொதுத்தேர்தலுக்கு பின்பு தங்களது போக்கை மேற்கண்டவாறு தான் நான் புரிந்து கொண்டுள்ளேன் என்பது சிலவேளை உங்களுக்கு உடன்பாடு இல்லாததாக இருக்கலாம்.

2005 ஆம் ஆண்டுடன் தங்கள் பதவிக் காலம் நிறைவு பெறுகிறது.

தாங்கள் நாட்டின் தலைவியாக இருந்த 10 வருட காலத்தில் தமிழ் மக்களுக்காக எதைச் செய்திருக்கிறீர்கள்?

இப்போதும் காலம் செல்லவில்லை; இலங்கையின் அரசியலமைப்பு தங்களுக்கு வழங்கியிருக்கும் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி இப்போதும் கூட சாத்தியமான, சரியான முடிவுகளை நீங்கள் தமிழ் மக்களுக்காக எடுக்கலாம்.

அதன் மூலம் தமிழ் மக்களை மட்டுமல்ல; சிங்கள தேசத்தையும் போரின் ஆபத்திலிருந்து மீட்சிபெறச் செய்யும் அரியவாய்ப்பும் உங்களிடம்தான் இருக்கிறது என்பதையும் தங்களுக்கு நினைவு படுத்த விரும்புகின்றேன்.

தங்களின் எதிர் கால செயற்பாடுகள் ஆரோக்கியமாக அமைந்து தாங்களும் நலமுடன் நீண்டகாலம் வாழ வேண்டுமென கேட்டுக் கொண்டு விடை பெறுகிறேன்.

நன்றி,

கீழ்ப்படிவுள்ள,

-விசித்திரன்- 24. 05. 2004

---

## இவ்வார 'ராசிபலன்' 31-05-2004 - 06-06-2004

### பொ. சந்திரன்

# ராசி பலன்

**இவ் வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | ராகு | புதன் சூரியன் | செவ்வாய் சுக்கிரன் சனி |
| | | | |
| | | | குரு |
| | | கேது | |

| | | |
|---|---|---|
| செவ்வாய் | புனர்பூசம் | ராகு |
| சுக்கிரன் | திருவாதிரை+மிருகசீரிடம் | ராகு+செவ்வாய் |
| புதன் | ரோகிணி | சந்திரன் |
| குரு | பூரம் | சுக்கிரன் |
| சூரியன் | ரோகிணி | சந்திரன் |
| சனி | திருவாதிரை | ராகு |

சந்திரன் கடகம்முதல் கன்னிவரை

புதன் மேடம் முதல் இடபம் வரை

**மேடம்: அச்வினி, பரணி, கார்த்திகை 1.**

ராசிநாதன் செவ்வாய் மூன்றில் இருப்பது நல்லது. மேலும் குருவின் நட்சத்திர சாரத்தில் இருப்பது சிறப்பானது. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உள்ளது. ராகு ராசியில் இருப்பது குறை. குரு ராசியைப்பார்ப்பது நிறை.(2,7) உரிய சந்திரன் மூன்றில் இருப்பதால் திருமணவாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். நாலாம் வீடு சுத்தமாக இருப்பதால் வீடு,வாகன இலாபம் தரும். 10க்குரிய சனி மூன்றாம் வீட்டில் இருப்பதால் தொழில் துறைமுன்னேறு சனி மூன்றாம் வீட்டில் இருப்பது நல்ல பயனைக் கொடுக்கக் கூடியவர்.சூரியன்,புதன் இரண்டாம் வீட்டில் இணைவது கல்வியில் ஆர்வத்தைக் கொடுக்கும். நல்ல உணவு உண்ணக்கூடிய வாய்ப்பு உருவாகும்.

**இடபம்: கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2.**

ராசிக்குரிய சுக்கிரன் இரண்டில் இருப்பதும் இரண்டுக்குரிய புதன் ராசியில் இருப்பதும் அதாவது, பரிவர்த்தன யோகம் நல்லபலனைச் செய்யும். ஆனால், ஆரம்பத்தில் ராகுவின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லதல்ல. பிற்பகுதியில் செவ்வாய் சாலம்பெறுவது நல்லது. உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சிநல்ல முறையில் அமையும். சூரியன்,புதன் ராசியில் இருப்பது புதுப்புது எண்ணங்கள் உதயமாகும். கையில் பணம் இருக்கும். கல்வியில் நாட்டம் இருக்கும். நாலுக்குரிய சூரியன் ராசியில் இருப்பதால் வீடு,வாகனம் லாபம் தரும். (7,12) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பதால் திருமணபலன் உண்டு. 10க் குரிய சனி இரண்டில் இருப்பதால் தொழிற்துறை முன்னேறும். பக்க உதவிகள் கிடைக்கும்.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர் பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் 12ல் இருப்பது நல்லதல்ல.சந்திர சாரத்தில் இருப்பது நல்லது. எடுத்த முயற்சி தடைப்படலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வீடு,வாகனச் செலவை ஏற்படுத்தலாம். ஆனால்,பிரயாணவாய்ப்பு உண்டு.இரண்டாம் வீடு சுத்தமாக இருப்பதால் கையில் பணம் இருக்கும்.(7,10) உரிய குரு மூன்றில் இருப்பதால் திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. தொழிற்துறை பாதிக்கலாம். மேலும், ராசியில் சனி இருந்து குருவையும், 7ம் வீட்டையும், 10ம் வீட்டையும் பார்ப்பதால்இந்த வீடுகளில் கிடைக்கும் நன்மை இராது. அத்துடன், பாதகத் தன்மை இருக்கும்.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் துலாம் முதல் தனுவரை அதாவது 4ம்,5ம்,6ம்வீடுகளில் சஞ்சரிப்பார். 6ம் வீட்டைத் தவிர மற்றய இடங்களில் நன்மை செய்வார். ஆக, வாரஆரம்பத்திலும் மத்தியிலும் நல்ல பலனையும், பிற்பகுதியில் தீய பலனையும் தரக்கூடும். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். நாலுக்குரிய சந்திரன் 12இல் மறைவதால் வீடு, வாகன செலவை ஏற்படுத்தலாம்.(7,8) உரிய சனி 12ல் இருப்பதால் திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. இரண்டில் குரு இருப்பதால் திருமண முயற்சி நல்ல பலனைத்தரக் கூடும். கையில் பணம் இருக்கும். 10க் குரிய செவ்வாய் 12இல் இருப்பதால் தொழிற்துறையில் முன்னேற்றம் இருக்காது.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிநாதன் சூரியன் 10இல் இருப்பதால் நல்ல பலனைத்தரும். மேலும் சந்திர சாரம் பெற்று இருப்பது சிறப்புடையது. உடல் ஆரோக்கியம் உண்டு.எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். பக்க உதவிகள் கிடைக்கும். இரண்டுக்குரிய புதன் 10இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். (4,9) உரிய செவ்வாய் 11இல் இருப்பதால் பெற்றோருக்கு நல்லது. வீடு,வாகனம்லாபம் தரும்.ஆலய வழிபாடு அமையும்.7க்குரிய சனி 11இல் இருப்பது திருமணவாய்ப்பு உண்டு குடும்பத்தில் அமைதி இருக்கும். ஆயினும், குரு ராசியில் இருப்பது நல்ல பலனைக்கொடுக்காது.10க் குரிய சுக்கிரன் 11இல் இருப்பதால் தொழிற்துறை முன்னேறும்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 9இல் இருப்பதால் நல்லபலனை எதிர்பார்க்கலாம். மேலும், சந்திர சாரம் பெற்று இருப்பதும் விசேஷமே. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. தொழிற்துறை முன்னேறும். பிரயாண வாய்ப்பு உண்டு.(2,9) உரிய சுக்கிரன் 10இல் இருப்பதால் அங்கு செவ்வாய்,சனி இருப்பதாலும் பணப்பற்றாக் குறை நிலவும்.பிதாவுக்கு நல்லதல்ல. (4,7)உரிய குரு 12ல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். தாய்க்கு நல்லதல்ல. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். பத்தாம் வீட்டில் சனி இருந்து நாலாம், ஏழாம் வீடுகளைப் பார்ப்பதனால் தீய பயன்களையே அவ் வீடுகள் செய்யும். நாலாம் வீட்டைக் குரு பார்ப்பதால் ஒரு மன ஆறுதல் உண்டு.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

ராசிக்குரிய சுக்கிரன் ஒன்பதில் இருப்பது நல்ல பலனைச் செய்யும். மேலும், ஆரம்பத்தில் ராகு சாரத்தில் இருந்தாலும் பின் செவ்வாய் சாரத்தில் சஞ்சரிக்கும் காலம் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பக்க உதவிகள் கிடைக்கும். (2,7) உரிய செவ்வாய் 9இல் இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. 7இல் ராகு இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. கையில் பணம் இருக்கும். (4,5) உரிய சனி 9இல் இருப்பதால் வீடு,வாகனம்லாபம் தரும். தாய்க்கு நல்ல பலன் உண்டு. 10ஆம் வீட்டில் தீய கிரகங்கள் இல்லாமல் இருப்பது தொழிற்துறைக்கு நல்லது. ராசியில் கேது இருப்பது குறை. குரு சுகம் இருப்பது நிறை.

**விருச்சிகம்: அனுசம், கேட்டை**

ராசிக்குரிய செவ்வாய் 8இல் இருப்பது நல்ல தல்ல. மேலும், குருவின் நட்சத்திர சாரத்தில் இருப்பது சிறப்பானது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். பக்க உதவிகள் கிடைக்கும்.(2,5) உரிய குரு 10இல் இருப்பது சிறப்பில்லை என்று வைத்துக் கொண்டாலும், இரண்டாம் வீட்டை குரு பார்ப்பதால் கையில் பணம் இருக்கும். குழந்தைகளின் செயற்பாடு திருப்திகரமானதாக இருக்கும். (3,4) உரிய சனி 8இல் இருப்பதால் வீடு,வாகன செலவை ஏற்படுத்தலாம்.சகோதரர்களுக்கு நல்லதல்ல.(7,12) உரிய சுக்கிரன் 8இல் மறைவதால் திருமணவாய்ப்பு பாதிக்கலாம். 10க்குரிய சூரியன் புதனோடு 7இல் இருப்பதால் தொழிற்துறை முன்னேறும்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

ராசிக்குரிய குரு 9இல் இருப்பது விசேஷம். மேலும் சுக்கிரசாரம் பெற்று இருப்பது சிறப்பானது. எடுத்தமுயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. ஆலய வழிபாடு அமையும்.(2,3) உரிய சனி 7இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். சகோதர உதவி இருக்கும். குரு 4ம் ஆதிபத்தியம் பெற்று இருப்பதால் தாய்க்கு நல்லது. வீடு, வாகனம் லாபம் தரும். (7,10) உரிய புதன் 6இல் இருப்பது திருமணவாய்ப்பை பாதிக்கலாம். தொழிற் துறைக்கு நல்லதல்ல. மேலும் 7இல் உள்ள சனியால் குடும்பத்தில் அமைதி இருக்காது. குருவையும் ராசியையும் 4ஆம் வீட்டையும் பார்ப்பதால் அவ்விடங்களால் வரக்கூடிய நல்ல பலனைப பாதிக்கலாம். ராசியை குரு பார்ப்பது நல்லது.

**மகரம்: உத்தரடாம்2,3,4,.திருவோணம்,அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி 6இல் இருப்பது நல்லது. ஆறாம் வீட்டில் சனி நன்மை செய்யக் கூடியவர். ஆனால் ராகுவின் சாரத்தில் இருப்பதால் பெரிதாக நன்மை செய்ய வாய்ப்பில்லை. மேலும், குரு 8இல் மறைவதும் குறைதான். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். கையில் பணம் இருக்காது. பக்க உதவிகள் கிடைக்கும். (4,11) உரிய செவ்வாய் 6இல் இருப்பதால் செவ்வாய்க்கும் 6ஆம் வீடு நல்லது. வீடு, வாகனம் இலாபம் தரும்.7ம் வீடு சுத்தமாக இருப்பினும் குரு மறைவதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம்.10க்குரிய சுக்கிரன் 6ல் மறைவதால் தொழிற்துறைக்கு நல்லதல்ல. சனியும் செவ்வாயும் சேர்ந்து இருப்பது கூடாது. ஆனால் சுக்கிரன் அங்கு இருப்பதால் அமைதி நிலவும்.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

ராசி நாதன் சனி 5இல் இருப்பது நல்லதல்ல. மேலும், ராகுவின் சாரத்தில் இருப்பதும் கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தடைப்படலாம்.பக்க உதவிகள் கிடைக்கும். குரு 7இல் இருந்து ராசியைப் பார்ப்பது நல்லது. ஆறுதல் உண்டு. (2,11) உரிய குரு 7இல் இருப்பது கையில் பணம் இருக்கும். மூத்த சகோதரர்களுக்கு நல்லது. நண்பர்களால் உதவியுண்டு. (4,9) உரிய சுக்கிரன் 5இல் இருப்பதால் வீடு,வாகனம்லாபம் தரும். பெற்றோருக்கு நல்ல பலன் உண்டு. 7க்குரிய சூரியன் 4இல் திருமண பலன் உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். 10க்குரியசெவ்வாய் 5இல்இருப்பது தொழில்துறைக்கு பாதகம்இருக்காது.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 6இல் இருப்பது கூடாது. ஆனால், சுக்கிரசாரம் பெற்று இருப்பது ஒரு மன ஆறுதல் உண்டு. எடுத்த முயற்சி தடைப்படலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். தொழில் துறைக்கு பாதிப்பு இருக்கும். (2,9) உரிய செவ்வாய் 4ல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்லது. (4,7) உரிய புதன் 3இல் இருப்பதால் வீடு, வாகன செலவை ஏற்படுத்தலாம். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். ராசியையும் ராசிநாதனையும் குருவையும் 10ம் வீட்டையும் சனி பார்ப்பது கூடாது. குருவும் மறைவதால் ஆறுதல் இருக்காது. 4இல் உள்ள சுக்கிரனால் ஒரு மன ஆருதல் இருப்பினும், அவதானம் வேண்டும். பிரார்த்தனையும் நன்மை செய்யும்.

# அலை அடங்கவில்லை!

செல்வச் சன்னதி முருகன் திருவிழாக் கோலத்தில் சிறப்பாகத் தெரிந்தான். கருவறையில் காட்சிதரும் முருகனை வணாங்கி விட்டு கோயிலையும் மூன்று முறை வலம் வந்து மூலவரை வணங்குகிறார்கள் பக்தர்கள் . கோயிலின் உள்ளே தவில் சத்தம் தொடங்குவது கேட்கிறது. நாதஸ்வரமும் தொடர்ந்தது.

அங்கே ஆலய முன்றில் வானளாவ வளர்ந்திருந்த ஒரு பெரு மரத்துக்குக் கீழே அவன் நின்று கொண்டிருந்தான். அந்த இடங்களிலெல்லாம் நடந்து திரிகின்ற இளம் பெண்களின் மேனியில் வர்ண ஒளிகள் கவிந்ததால் — தேவதைகளோ, இவர்கள்? — என்று வியக்குமளவிற்கு அவனுக்குத் தெரிந்தார்கள்.

இந்த நிலையில் பூக்களா, இல்லை பூவையரா, உண்மையில் அழகிற் சிறந்தவர்? என்று விடை காண முடியாமல் அங்கே நின்ற படி நாலா புறமும் நடந்து திரிகின்ற அந்தப் பெண்களை யெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

இளமை இருக்கும் வரை எல்லாருமே அழகானவர்கள் தான்! அந்த அழகு என்னிடம் அதிக நாள் நிலைக்க வேண்டும் என்று அவனது மனம் ஆசைப்பட்டது.

ஒரு மனிதன் தனது வாழ்க்கைக் காலத்தில் எத்தனை விசித்திரமான அனுபவங்களைக் காண்கிறான்.

குழந்தைப்பருவம், இளமைப்பருவம், முதுமைப்பருவமென்று மாறுபடும் இந்த வாழ்க்கைக் கோலத்தில் எது தான் ஒருவனுக்கு நிலைத்திருக்கிறது. அவனது பார்வை மணல் தரையில் விழுந்தது.

அங்கே இருளும் ஒளியுமான ஒரு இடத்திலே இருக்கும் அந்த இளம் பெண்ணின் பார்வை தன்னைத் துளைப்பது மாதிரி அவனுக்குத் தெரிகிறது. இடையிடையே ஆனந்தமான புன் சிரிப்பும் அவளிடத்தே இருந்து பிறக்கிறது.

ஏதோ மின்னலைத் திடீரென்று பார்த்தது போல சிறிது நேரம் அவன் செயலோய்ந்து நின்றான். அவளை யாரென்று அவனுக்குத் தெரியவில்லை.

சுழற்சியாக வருகின்ற சிந்தனை வட்டத்துக்குள்ளே அவளை யாரென்று ஞாபகத்தில் கொண்டு வர முடியாத நிலையில் அவன் திண்டாடுகிறான். இப்படி சிரிப்பதற்கு என்னை நன்றாக அறிந்தவளாக அவள் இருக்க வேண்டும்.

இவள் யார்? — என்று அறிய இன்னும் தன் மூளையைப்போட்டு குடைகிறான். அவளோ இவன் மீது வைத்த கண் பார்வையை விலக்கவில்லை.

அவள் இதழோரங்களில் தொடர்ச்சியான புன்னகை.

இங்கே என் அருகில் வா! — என்ற விதமான அந்தப் பார்வை, இப்போ காந்தம் போல் அவனை அவளிடத்திற்கு இழுக்கிறது.

அவன் கூச்ச சுபாவம் உள்ளவன்தான்! என்றாலும், அதையெல்லாம் அந்த இடத்திலே போக்கிவிட்டு அவளின் பார்வை கொடுத்த துணிச்சலில் அவளை நோக்கி நடந்தான்.

அவள் காலை மடித்து உட்கார்ந்து கொண்டிருக்கும் அழகே தனி அழகுதான். அந்த ஒயிலான சுந்தரி அவன் நடந்து வருகின்ற பக்கமாய் தன் கழுத்தைத் திருப்பிப் பார்க்கிறாள்.

மயில் தோகைபோல் அவள் உடுத்திருக்கும் அந்த குடைவெட்டுக் கவுண் அவளைச் சுற்றி நிலத்தில் விரிந்துகிடக்கிறது. அந்த ஆடைக்கு அவளது தேகவாளிப்பும் சோபையும் உயர்ந்து தோன்றிற்று

அவள் ஒரு ரோஜாப் பூவை தலையிலும் சூடியிருக்கிறாள். கற்றையான தலைமுடியில் இருக்கும் அந்த ஒற்றை ரோஜா மலரின் மூலம் இன்னும் அவள் எடுப்பாகத்தெரிகிறாள். அவளது நெற்றியிலே நிலாப்பிறை போல் இருக்கும் அந்தப்பொட்டு மின் ஒளிபட்டு வர்ண ஜாலம் காட்டுகிறது.

அவளது யௌவனத்தின் நிறைவு ஒவ்வொரு அங்கத்தின் அசைவிலும் தென்பட — அவளது மாந்தளிர் நிற மேனியழகை விழுங்குமாப்போல பார்த்துக் கொண்டு அவளுக்குக்கிட்டவாய் அவன் சென்றான்.

"சேகர்!" — என்று அவனின் பெயரை மயிலிறகு உதடுகளால் மென்மையாக அழைக்கிறாள் அவள்! — பின்பு சிரிக்கிறாள். சிரிக்கும் போது கன்னங்கள் நாவல் பழச்சிகப்பாய் மாறுகிறது.

"என்ரை பெயர எப்படித்தெரியும் உங்களுக்கு?" — என்று அவன் கேட்க, "எனக்குத் தெரியும்!" — என்று சொல்லிய படி விழிகளை அகலத்திறந்து முகம் விகஸித்தாள் அவள்.

"உங்களின்ரை முகத்தை எங்கையோ முந்தி நான் கண்ட மாதிரிதான் இருக்கு.. எண்டாலும் எங்க எப்ப கண்டனான் எண்டது தான் இப்ப ஞாபகம் வருகுதில்ல!"

கடற்சோழிகளை நிலத்தில் கொட்டினாற்போல மீண்டும் அவன் சொல்வதைக் கேட்டு அவள் "கலகல" வென்று சிரிக்கிறாள். அப்படிச் சிரித்தவள் தனது சிரிப்பை இடைநிறுத்திவிட்டு.

"இன்னும் உங்களுக்கு நான் ஆரெண்டு ஞாபகத்துக்கு வரேல்லயே.... கொஞ்சம் ஊண்டி யோசிச்சுப்பாருங்கோ..... இந்தக் கமலி ஆரெண்டு அப்ப உங்களுக்குத் தெரியும்."

"கமலியெண்டா... எந்தக் கமலி?"

என்று விட்டு மீண்டும் தன் நினைவுகளை காலத்தின் பின்னோக்கிச் செலுத்தினான்.

'இவள் அவளாகத்தான் இருக்கவேண்டும்?.... இருக்க வேண்டுமென்பதாய் ஏன் ஒரு கேள்விக் குறியை வைக்க வேண்டும்..... அவள் தான்!.... .' என்ற முடிவுக்கு வந்துவிட்டு.

"நீங்க.... நீ....

நீ கமலம் மாமியின்ரை மகள்தானே!" — என்று அவளைக் கேட்டான் இவன்!

அவன் அப்படிக்கேட்டதும் அவள் இதழ்க்கடையில் சிரிப்பு சுழித்தது. உடனே தன்கை விரல்களை பந்தாய் வாய்க்குள் அடக்கிக்கொண்டு "ஓம்!" என்கிறதாய் இருக்க தலையை மட்டும் ஆட்டினாள்.

"கனகாலம்.... உன்னைக்கண்டு.... எட்டு வருசங்கள் இருக்குமா?"

"ம்..."

"அப்பவெல்லாம் நாங்க மாமி மாமியெண்டு உன்ரை அம்மாவைக் கூப்பிட்டு பகிடி பண்ணுவம் அது உனக்கு ஞாபகம் இருக்கா?"

அவன் அப்படி சொல்லவும் அவளுக்கிருந்த உற்சாகம் 'புஸ்' சென்று இறங்கி விட்டது. அவளுக்குக் கவலைவந்துவிட்டது. சொட்டுநீர்சுமந்த விழிச்சுடர்களோடு அவள் கீழே தலையைத்தாழ்த்தி நிலத்தைப் பார்த்தாள். பின்பு விரல்களால் நிலத்தில் கோடு கிழித்தபடி இருந்தாள்.

அந்த நேரம் அவனது நினைவுகள் அவளது சின்ன வயதுக்காலத்தை ஊன்றி ஊன்றி ஆராய்ந்தது. இப்பொழுதுக்கும் அப்பொழுதுக்கும் உள்ள இடைவெளி எட்டு வருஷங்கள்...

அப்பொழுது இவளுக்கு பன்னிரெண்டு வயதிருக்கும். இவளும் தாயுமாக சேர்ந்து அந்நேரம் கடைத்தெரு வழியே பிச்சை எடுத்துக்கொண்டு திரிந்தார்கள். கழுகுமாதிரி அலையும் காமுகரினது கண்பார்வைகள் அப்பொழுதே, பேதைக்கும் மங்கைப் பருவத்துக்கும் இடையே இளமை நெருடும் அவள் மேனியை துளைக்கத் தொடங்கிவிட்டன.

தங்கள் காமப்பசிக்கு மலைபபாம்பு போல் அவளை விழுங்க அவர்களெல்லாம் காத்துக் கிடந்தார்கள். அவர்களிடமிருந்தெல்லாம் இவள் பிழைப்பாளா? — என்று இவனுக்குச் சந்தேகம் இருக்கவும் செய்தது. இவளின் தாய் ஒரு மனநோயாளி. இந்தப் பூவைப்பாதுகாக்க ஒரு முள்வேலியாய் அவள் இருக்கமாட்டாள் என்றே அவன் நினைத்தான். இப்படியாய் இருந்த காலத்தில் திடீரென்று இந்த இருவரையும் அந்த ஊரில் காணவில்லை!

என்ன நடந்தது அவர்களுக்கு? — என்று எல்லோரும் தான் விசாரித்தார்கள். என்றாலும் பிற்பாடு அவர்களைப் பற்றிய கதை அவர்களுக்கு ஓர் பழங்கதையாய் ஆகிவிட்டது. அந்த நினைவுகளிலிருந்து அவன் விடுபட்ட பின்...

"உன்ரை அம்மாவுக்கு என்ன நடந்தது?" — என்று அவளைக் கேட்டான்.

"அம்மாவுக்கு மூளைப்பிசகு கூடி ஒரு வாய்ச் சோறு கூட சாப்பிடாமலும் விட்டுட்டா.... பிறகு அப்பிடியேயிருந்து அன்னந்தண்ணி ஒண்டுமேயில்லாமத் தன்ரை உசிரையே விட்டுட்டா..." இப்படிச் சொல்லியதோடு அவள் சிறிது நேரம் மௌனமாக இருந்தாள்.

"அதுக்குப்பிறகு?" — என்று கேட்டு அவன், அவளது மௌனத்தைக் கலைத்தான்.

"எங்க நான் இனி போறதெண்டு அதுக்குப் பிறகு எனக்கு ஒண்டுமே தெரியேல்ல. எங்களுக்கும் சொந்தக்காரர் இருக்கினமெண்டுதான் முந்தி அம்மா எனக்குச் சொல்லிக்கொண்டிருந்தவ... எண்டாலும் அம்மா செத்தாப்பிறகு சொந்தக்காரரின்ரை வீடுவழிய போக எனக்கு விருப்பம் வரேல்ல... அம்மா இல்லாம றோட்டு வழிய திரிய எனக்குப்பயமாயிருந்திச்சு... அதால ஒரு வீட்டில வேலைக் காரியா வேலைக்குச் சேர்ந்தன்..."

"அங்கே நடந்த கதையைச் சொல்லேக்க கொஞ்சம் மறைச்சும் சொல்லவேணும்... அந்த வீட்டுக்காரன் காம வெறிபிடிச்ச தூர்த்தத்தனம் நிரம்பியவன். என்னை இரவு வழிய வந்து படுத்தபாயில வைச்சு தொந்தரவு செய்வான்.

எங்கேயும் நான் அப்ப போகவழி தெரியாததால பிறகு அவன்ரை சபல சித்தம் போக்க நானும் அவன்ரை விருப்பத்துக்கு 'ஓம்' பட்டுப் போனன். இது அவன்ரை மனுசிக்கும் பிறகு தெரிய வந்திச்சு. அதால அந்த வீட்டில இருந்து நான் கலைக்கப்பட்டன்.

அதுக்குப் பிறகு ஒழுங்கா வாழ ஒரு வழியும் தெரியாம வேற ஒரு பிழையான வாழ்க்கைக்கு நான் என்னை தயார் படுத்தினன். வாழ்க்கை என்னை கடுமையாகச் சோதிச்சதால அதுக்கெல்லாம் நான் துணிஞ்சன்.

இப்ப நான் பழைய கமலி இல்ல. பலருக்கும் தெரிஞ்ச கமலி. நான் இப்ப சாம்பலைத்திண்டு வெண்ணெய்யைப் பூசிக் கொண்டு திரியிறன். நான் எருக்கம் பூ மாதிரியானவள். ரோசாப்பூ மாதிரியானவளல்ல சேகர் நான்!"

"என்ன சொல்லுறாய் நீ?"

"பொம்பிளையளை விட ஆம்பிளையள்தான் ஒண்டுமே தெரியாதவயள் போல வேசம் போடுறனவயள் நான் பச்சையாகச் சொல்ல வேணுமே என்ரை வாயால நான் ஒரு விலைமகள் எண்டு"

பட்டவர்த்தனமாக அவனைக் கேட்டாள் அவள்!

அவன் விழி இமைக்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான. அப்படி அவள் சொன்னாலும் அவனால் அவள் சொல்வதையெல்லாம் நம்பமுடியவில்லை. அவள் கைபடாத ரோஜா போன்றே அவனது கண்களுக்குத் தெரிந்தாள். பரிசுத்த தன்மை கர்ணனின் கவசம் போல் அவளைச் சுற்றி இருப்பதாக அவனுக்குத் தெரிந்தது.

ஒரு பெண்ணுக்குரிய பரிபூரண லட்சணங்களும் அடங்கியதாய் காட்சி தரும் இவளா விபசாரி?

"இல்லை நான் நம்பேல்ல. உன்ரை மனச்சுத்தம் முகத்தில தெரியுது. கள்ளங்கபடமில்லாதவள் மாதிரித்தான் நீ எனக்குத் தெரியிறாய். நான் பூவாக நினைச்சு உன்னைப் பார்க்கிறன். நீயேன் முள்ளாய் உன்னை நெனைக்கிறாய்?"

"நீங்கள் உங்களையே ஏமாத்துறீங்க சேகர்.... உங்களுக்கு நீர்த்தந்தையும் தெரியேல்ல. சாக்கடையையும் தெரியேல்ல, உலகத்தை அறியாத ஒரு அப்பாவியாத்தான் நீங்க எனக்குத் தெரியிறீங்க."

"நீ நெனைக்கிறதுதான் பிழை. உன்ரை பழைய சீவியத்தை நான் திரும்பிப் பார்க்கேல்ல. நீயும் கடந்து போன காலத்தில் நடந்து போன சம்பவங்களையெல்லாம் மறந்திடு. அதுக்கெல்லாம் நான் ஒத்தாசையாயிருக்கிறன். உண்மையா என்ரை மனதைத் திறந்து சொல்லுறன். உன்னை நான் வாழ வைக்கிறன் கமலி என்னை நம்பு."

இதைக் கேட்டதும் அவள் தனக்குவந்த சிரிப்பை அடக்க முடியாது கெக்கட்டமிட்டுச் சிரித்தாள். அவளது சிரிப்பில் கரைந்து மறைந்திருக்கின்ற உண்மை என்ன என்று அவனுக்குப் புரியவில்லை. அவர்களுக்குத் தூரமாய் இருந்தவர்கள் கண்பார்வையெல்லாம் இவர்களதுபக்கமாக அந்த நேரம் ஒருமித்துத்திரும்பின.

கண்களா அல்லது கட்டு விரியன்களா என்பதுமாதிரியாக இருந்தது அவர்களது பார்வை. அவர்களது பார்வையிலிருந்து தப்பிவிட அவனது பார்வை மரங்களிலே உள்ள வர்ணவிளக்குகளின் பக்கமாகக் கவிந்தது.

"எல்லாஞ்சரி... உன்னை நான் வாழ வைக்கிறனெண்டு மன உறுதி எடுத்துக் கொண்டு முன்னம் நான் அதையெல்லாம் உனக்கு மனசைத்திறந்து சொன்னன் அதைக்கேட்டிட்டு நியேன் சிரிக்க வேணும்?"

"ஓமோம் சிரிச்சனான்தான்... உண்மையிலேயே நீங்க சொன்னதுகளைக் கேட்டு மனம் சந்தோசப்பட்டுத்தான் நான் சிரிச்சன். இந்த விசயத்தில ஏகப்பட்ட எதிர்ப்புவருமெண்டு இருந்தாலும் அதுக்கெல்லாம் துணிஞ்சு நீங்க நிக்கிறீங்க. அதை நினைச்சு எனக்கு சந்தோசம்தான்! உங்கடை கொள்கையள் உங்களை பெரியவராக்கும். ஆனா, உங்களைப்போல என்னால வாழமுடியாது. குற்ற உணர்ச்சிகளோட உங்களோட சேர்ந்து வாழேக்க நான் மனம் கருகிப்போயிடுவன். வேண்டாம் சேகர்!

இப்பிடியெல்லாம்செய்து உங்களை நீங்க குலைக்க வேணாம். நான் உங்களை உண்மையிலேயே மதிக்கிறன். வாடுற பயிரைக் கண்டாக்கூட வாடுகிற மனம் கொண்டவராய் நீங்க இருக்கிறீங்க. அப்பிடி நல்லதொருமனம் உங்களுக்கு! அது எனக்கு நல்லாய் விளங்குது.

உங்களை மாதிரி குணம் உள்ளவர்களை நான் உண்மையாகவே மதிக்கிறன். என்ரை உயிர் இருக்குமட்டும் உங்களை நான் ஞாபகத்தில வைச்சிருப்பன், எண்டாலும் இப்போதைக்கு நீங்கள் இந்த இடத்தைவிட்டுப் போயிடுங்கோ... பிளீஸ் சேகர்... நான் சொல்றதைக் கேளுங்கோ... என்னை நிம்மதியா இருக்கவிடுங்கோ"

அப்படி அவள் சொல்வதைக் கேட்டு உடனே அவன் மனம் சோர்ந்து விட்டான். எந்தச் சந்தர்ப்பத்திலும் அவன் உணர்ச்சி வசப்படுபவன். எப்போதுமே உண்மை பேசவேண்டும் என்ற கொள்கை உடையவன். அப்படியானவனுக்கு அவள் அவ்வாறு சொல்லியது யாரோ நான்கு பேர்முன் அம்மணப்படுத்தப்பட்டது மாதிரியான கூச்சமாக வந்தது.

திடீரென்று அவனது உள்ளத்தில் விழிப்பு ஏற்பட்டது. இந்தச் சொற்பநேரத்தில் இப்படியெல்லாம் உணர்ச்சி வசப்பட்டு விட்டேனா? — என்று அவன் தன்னையே மனதுக்குள்ளாக கேட்டுக்கொண்டான்..

அந்த மரங்களிலிருந்தெல்லாம் சடசடவென இறகடித்துக் கீழ் இறங்கும் காக்கைகள் கூட்டம் போல அவன் சற்று முன் எடுத்த தீர்மானம் மனதிலிருந்து வெளிக்கிட்டு எங்கேயோ பரந்தவெளியில் பறந்தது மாதிரி இருந்தது..

'கூரையேறிக்கோழி பிடிக்காதவன் வானத்திலேறி வைகுண்டம் போக ஆசைப்பட்டானாம்!' என்று யாரோ ஒருவன் அவனைப் பார்த்து கேள்வி கேட்டுவிட்டு கேலி செய்து சிரிப்பது போலவும் ஒரு பிரமை அவனது மனதில் எழுந்தது..

உடனே அங்கிருந்த கமலியிடம் கூட கூறி விடை பெற்றுக்கொள்ளாது அவ்விடத்தை விட்டு கிறுகிறுவென்று அவன் நடந்தான். கோயில் வளாகத்தைத்தாண்டி பஸ்தரிப்பு நிலையத்தை அவன் சென்றடைந்தபோது, தட்டிவான் ஒன்று அச்சுவேலிக்குப் போக வென்று புறப்பட ஆயத்தமாயிருந்தது.



நீ.பி.அருளானந்தம்

# விக்டோரியா ஈழத் தமிழ்ச் சங்கம் நடத்தும் முத்தமிழ் விழா

கடந்த ஆண்டு தனது வெள்ளி விழாவைக் ஆஸ்திரேலியாவில் கோலகலமாகக் கொண்டாடிய விக்டோறியா ஈழத் தமிழ்ச் சங்கம் இவ்வாண்டு தனது 12 ஆவது முத்தமிழ் விழவைக் கொண்டாட உள்ளது.

கண்டங்கள் கடந்தாலும், கருத்தாலும், எழுத்தாலும் உலகத் தமிழருடன் உறவு கொண்டாடும் தமிழ்ச் சங்கம் இவ்வாண்டும் சிறுகதை, கவிதைப் போட்டிகள் மூலம்தன் தொடர்பைப் புதுப்பிக்கின்றது.

உலகளாவிய இப்போட்டியில் திக்கெங்கும் வாழும் தமிழர் பங்கு கொள்ளலாம். எத்தனை கதைகளையும் போட்டிக்கு அனுப்பலாம். ஆக்கங்கள் தாளில் ஒரு பக்கத்தில் மாத்திரமே அச்சுப் பதிவு செய்யப்பட்டோ அல்லது தெளிவாக எழுதப்பட்டோ இருத்தல் வேண்டும். தனித் தாளில் பெயரும் முகவரியும் இணைத்திடல் அவசியம்.

ஆக்கங்கள் எழுத்தாளரின் சொந்தப் படைப்பாக இருப்பதோடு இதுவரை காலமும் பிரசுரிக்கப்படாததாகவும், போட்டிகளில் பங்கு பற்றாததாகவும் இருத்தல் வேண்டும். இப்போட்டிக்கு அனுப்பப்படும் கதை, கவிதைகளைப் பிரசுரிக்கும், காட்சிக்கிடும் உரிமை ஈழத் தமிழ்ச் சங்கத்திற்கு உண்டு. தமிழ்ச் சங்க நடுவரின் தீர்ப்பே இறுதியானது.

(அ) சிறுகதைப் போட்டிச் சிறப்பு விதிகள்.

1. சிறுகதை 3000 சொற்களுக்கு மேற்படாமலும் 1000 சொற்களுக்குக் குறையாததாகவும் இருத்தல் வேண்டும்.

* முதலாவது பரிசு அவுஸ்திரேலிய வெள்ளிகள் 200. * இரண்டாவது பரிசு அவுஸ்திரேலிய வெள்ளிகள் 150
* மூன்றாவது பரிசு அவுஸ்திரேலிய வெள்ளிகள் 100

(ஆ) கவிதைப் போட்டிச் சிறப்பு விதிகள்.

1. கவிதைகள் பின்வரும் தலைப்புகளுக்குள் அமைய வேண்டும்.
2. ஒருவர் ஒவ்வொரு தலைப்பிலும் ஒரு கவிதைக்கு மேல் அனுப்புதலாகாது.
3. தரப்பட்டுள்ள தலைப்புகளுக்குள் ஒவ்வொரு தலைப்பிலும் ஒரு கவிதையாக ஒருவர் நான்கு கவிதைகள் வரை அனுப்பலாம்.
4. மரபுக் கவிதைகள் 40 வரிகளுக்குக் குறையாமலும், புதுக்கவிதைகள் 240 சொற்களுக்குக் குறையாமலும் இருத்தல் வேண்டும்.

(இ) கவிதைத் தலைப்புகள்

1. விழித்த விழிகள் இனித் தூங்காது.
2. விரிந்த கடலும் பிரிக்காத உறவுகளே
3. தலை நிமிர்ந்த தமிழினமே
4. தமிழ் மண்ணில் விளைந்த மாவீரமே

(ஈ) பரிசுகள்

* முதலாவது பரிசு அவுஸ்திரேலிய வெள்ளிகள் 150.
* இரண்டாவது பரிசு அவுஸ்திரேலிய வெள்ளிகள் 100
* மூன்றாவது பரிசு அவுஸ்திரேலிய வெள்ளிகள் 75

முடிவுத் திகதி:– 30.08.2004

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# மணி விழாக் காணும் மலையக ஜீவா



மலையக கலை இலக்கிய வளர்ச்சிக்காக கடந்த கால் நூற்றாண்டுகளுக்கு மேலாக சிறப்பாக செயலாற்றி வரும் மலையக கலை இலக்கியப் பேரவையின் செயலாளரான அந்தனிஜீவாவின் மணி விழாவை சிறப்பாக நடத்துவதற்கு பேராதனை பல்கலைக் கழக பேராசிரியர் எம்.சின்னத்தம்பி தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. எழுத்தாளரும் நாடகக்கலைஞருமான அந்தனிஜீவாவின் மணி விழாவை முன்னிட்டு சில முக்கிய நிகழ்ச்சிகள் ஜூன் முதல் இவ்வாண்டு டிசம்பர் இறுதிவரை நடைபெற உள்ளன.

அந்தனி ஜீவா பத்துக்கு மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவர் ''அக்கினிப் பூச்சிகள்'' நாடக நூலுக்கு தேசிய அரச விருதினை பெற்றுள்ளார். மலையகத்தில் 'வீதி' நாடக முயற்சிகளில் அக்கறை காட்டி பல பயிற்சி பட்டறைகளை நடத்தியுள்ளார்.

இவரது மணிவிழாவை முன்னிட்டு இவர் எழுதிய சிறுவர் நாவலான ''திருந்திய அசோகன்'' வெளியீட்டு விழா ஜூன் மாதம் நடுப்பகுதியில் கண்டியில் நடைபெற உள்ளது.




நாடக கலைத்துறையை மேம்படுத்தும் நோக்கில் வட்டுவத்திலிருந்து 'கூத்தரங்கு' என்ற இதழ் வெளிவந்துள்ளது. நாடளாவிய ரீதியில் நாடக கலைத்துறையோடு ஈடுபாடு கொண்டுள்ள கலைஞர்கள் இந்த இதழை படிக்க வேண்டியது அவசியமாகும்.

நாடகக் கலைஞர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து இந்தக் கலையை மேலும் வளம்படுத்துவது எமது இதழின் நோக்கம் என இதழ் ஆசிரியர்கள் முதலாவது இதழில் தெரிவித்துள்ளார்கள். கடந்த மாதம் இதன் இரண்டாவது இதழும் வெளியாகி உள்ளது.

இரண்டாவது இதழ் யாழ்ப்பாணத்தின் பெரும் கவிஞரான இ.முருகையனின் அட்டைப்படத்தைத் தாங்கி வெளிவந்துள்ளது. நாடகம் தொடர்பான விமர்சனம், முருகையன் உடனான அனுபவப் பகிர்வு, மற்றும் பல அம்சங்களுடன் பன்னிரண்டு பக்கங்களில் வெளியாகியுள்ளது.

இதழை வெளியிடுவதற்கான கால வரையறை எதனையும் இதழாசிரியர்கள் தெரிவிக்கவில்லை எனினும் முடிந்த வரையில் ஒவ்வொரு இதழையும் விரைவில் வெளியிட அவர்கள் உறுதி அளித்துள்ளனர்.

நாடக கலை தொடர்பான தத்தமது நிகழ்வுகள் பற்றிய விபரங்களையும், ஆய்வுகளையும், இவ்விதழ்களுக்கு அனுப்புவதை வெளியீட்டாளர்கள் பெரிதும் விரும்புகிறார்கள். பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் இளைஞர்கள் மத்தியிலும் இவ்விதழினை முன்னெடுத்துச் செல்ல உறுதுணைய செய்ய வேண்டும் என கலையமுதம் கேட்டுக் கொள்கிறது.



கொழும்பு - பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அண்மையில் சைவ நீதி விழா அமைப்புக் குழுவினரால் நடத்தப்பட்ட சைவ எழுச்சிப் பெருவிழாவின் போது, கலாபூஷணம் - தேவார இசைமணி தாவடியூர் கே.எஸ்.ஆர். திருஞானசம்பந்தன் திருமுறைப் பண்ணிசை விருந்தளிப்பதையும், விழாவில் கலந்து கொண்டு, வாழ்த்துரை சிறப்புரைகள் ஆற்றிய, தமிழ்நாடு காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ திருவம்பலதேசிக ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள், கலாபூஷணம் தாவடியூர் திருஞானசம்பந்தனுக்குப் பொன்னாடை போர்த்தி அருளாசி வழங்குவதையும் படங்களில் காண்க.

# ஆபாசத் திரைப்படங்களை தடை செய்க

சலன சித்திரம் திரைக்கலை அமைப்பின் மே – தினக்கூட்டம் ''உழைக்கும் உலகக் கலைஞர்களே, ஒன்று சேருங்கள்'' என்ற தலைப்பில் கொழும்பு நகரின் வெள்ளவத்தைப் பொதுச்சந்தை மைதானத்தில் நடைபெற்றது.

தேசியக்கலை வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்து அமரத்துவமடைந்த கலைஞர்களுக்கான மௌன அஞ்சலியுடன் ஆரம்பமான இக்கூட்டத்தில் சலன சித்திரம் அமைப்பின் மாவட்டப் பிரதிநிதிகளான நீலன் மயில்வாகனம் – (கொழும்பு), சி.கஜிலசேரன் – (திருகோணமலை), க.லெ.ஹைதர் – (அம்பாறை) அ.மபூஸ் – (மட்டக்களப்பு) ஆகியோர் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர். மேலும், விரும்புவோர் கருத்துக்கூறும் விதமாக இக்கூட்ட மேடை திறந்தமேடையாக விடப்பட்டிருந்ததும் இங்கு குறிப்பிடப்பட்டிருந்தது.

''சுதந்திர நாட்டில் சுதந்திர இனங்கள்'', ''சுதந்திர சமூகத்தில் சுதந்திர மனிதர்கள்'' என்ற இலக்கு அடையானப்பட வேண்டும். அழகிய தீவின் அமைதிக்காக கலைஞர்கள் களம் இறங்கவேண்டிய காலம் வந்துவிட்டது.

''கலாசாரப்புரட்சி இன்றைய காலத்தின் கட்டாயமாகி விட்டது. எம்மை ஆக்கிரமித்து நிற்கும் அந்நியக் கலைகளை அடித்துவிரட்டுவோம். ஆபாசத்திரைப் படங்களையும் ஆபாசத் திரைப் பாடல்களையும் ஆபாசப் புத்தகங்களையும் முற்றாகத் தடை செய்வோம். எமது இளைய சந்ததியின் முற்போக்குச் சிந்தனையைச் சிதறடித்துச் சீரழித்துச் சிறுமைப்படுத்தும் செயலை எவர் செய்தாலும் அத்தகையவர்களை எதிர்த்தெழுவோம்.

பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ள தனிக்கைச் சபையும் கலாசார அமைச்சின் கீழுள்ள தேசியத்திரைப்படக்கூட்டுத் தாபனமும் ஆபாசத் திரைப்படங்களுக்கு ஏன் அனுமதி வழங்க வேண்டும்? பாதுகாப்புக்கும், கலாசாரத்திற்கும் ஆபாசம் அவசியம் என்பதா அரசின் கொள்கை?

அரசுகளின் இத்தகைய சமூகவிரோதச் செயற்பாடுகளைத் தட்டிக்கேட்க மக்கள் தயாராக வேண்டும்'' எனகருத்துத் தெரிவிக்கப்பட்டது.

# சுவிற்சர்லாந்தில் ''ஊசிஇலைத் துளிர்'' அறிமுக விழா




சுவிற்சர்லாந்தில், லூட்சேர்ன் மாநிலத்தில் அமைந்துள்ள தமிழ் மன்றத்தில் கடந்த சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஊசி இலை எனும் அரை ஆண்டு சஞ்சிகை வெளியீட்டு விழா நடைபெற ஏற்பாடாகி இருந்தது.

கடந்த 14 ஆண்டுகளாக தமிழ் மொழியையும், தமிழர் தம் அடையாளத்தையும் ஒருமைப்பாட்டையும் வளர்க்கும் அரியாசனமாகத் திகழும் தமிழ் மன்றம், புலம்பெயர் ஈழத்தமிழர் இளைய தலைமுறையினர், பெற்றோர், ஆசிரியர்கள், சிறார்கள் ஆகியோரின் உணர்வுகளை உள்வாங்கி ஊசி இலை எனும் சஞ்சிகையை பிரசவிக்கிறது.

தமிழ் மன்றத்தின் கலை, கலாசாரப் பிரிவினரால் வெளியிடப்படும் இச் சஞ்சிகை, வேற்று மொழிகளுக்குள் நசுங்கிக் கொண்டிருக்கும் எமது அடுத்த சந்ததியினரின் தமிழ் வாசனைத் திறனையும் எழுத்துத் திறனையும் ஊக்குவிப்பதை நோக்காகக் கொண்டுள்ளது.

-தயா லோகதாசன்-



வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி உடற்கல்வி சிரேஷ்ட விரிவுரையாளர் த.ம.தேவேந்திரன் ஆங்கிலமொழியில் எழுதிய ''EXERCISES'' எனும் நூல் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட அருட்செல்வி யூட் மருத்தீன், நூல் பிரதியை ப.நோ.கூ.சங்க பொது முகாமையாளர் பாரதி ஆனந்தனிடம் வழங்குவதையும், உபபீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் உரையாற்றுவதையும், நிகழ்வில் நடைபெற்ற நடன நிகழ்ச்சியையும் படங்களில் காணலாம்.

# சுடரின் கல்வி வழிகாட்டி


A/L Exam அடுத்து என்ன?... ஆங்கிலம் கற்கலாமே

இலகுவாக ஆங்கிலம் கற்க சிறக சிறந்த வழி ELI யின் இலவச தபால் மூல ஆங்கில பாட நெறிகள்

ஆங்கிலத்தில் எழுத, பேச, வாசிக்க, 90 நாட்களில் பயிற்சி அளிக்கப்படும்

* ஆங்கிலத்தை ஆரம்பம் முதல் இலகுவான முறையில் வீட்டில் இருந்த வாரே கற்கமுடியும்.
* தமிழ் விளக்கத்தில் கூடிய பாடத் தொகுதிகள்.

இலவசம்... இலவசம்... FREE... FREE...

அழகிய கிடெக் ஒன்றுடன்
2500 சொற்களுக்கும் மேல் உள்ளடக்கப்பட்ட
30 Days Easy Way English புத்தகம் ஒன்றும் இலவசமாக வழங்கப்படும்

Easy Way English 30 Days ELI-Kandy

மேலதிக விபரங்களுக்கு ரூ.50/– பெறுமதியான 8 முத்திரை அனுப்பி பெற்றுக்கொள்ளவும்

THE ENGLISH LANGUAGE INSTITUTE
P.O. Box 083, Kandy.
Tel No.: 0777 802849, 0777 220002


## மெட்ரோ பொலிட்டன் வர்த்தகக் கல்லூரி வழங்கும் கற்கை நெறிகள்

கொள்ளுப்பிட்டி பகதல வீதியில் நிறுவப்பட்டிருக்கும் மெட்ரோபொலிட்டன் வர்த்தகக் கல்லூரியானது ஐக்கிய இராச்சியத்தின் நிர்வாக முகாமைத்துவ கற்கைக் கூடத்தின் கற்கை நெறிகளை இலங்கையில் அறிமுகப் படுத்தியிருக்கும் முதலாவது கல்லூரி ஆகும்.

மெட்ரோ பொலிட்டன் வர்த்தகக் கல்லூரியின் நிர்வாக முகாமையாளர் எம்.சிராஸ் கிழக்கு மாகாணத்தினதும் கொழும்பு சாஹிரா கல்லூரியினதும் வரப்பிரசாதமானவர்.

நிர்வாக முகாமைத்துவ மேற்படிப்புகளை மேற்கொள்வதற்காக கிழக்கு இங்கிலாந்து சென்ற இவர் டப்ளின் மெட்ரோ பொலிட்டன் பல்கலைக்கழகத்தின் முதுமாணிப் பட்டம் பெற்றார்.

கல்வியியல் ஆலோசகராக 6வருடங்கள் இங்கிலாந்தில் பணியாற்றியதுடன் இங்கிலாந்தின் நிர்வாக முகாமைத்துவ கற்கைக் கூடத்தில் இதற்கான சான்றிதளையும் பெற்றுள்ளார்.

இலங்கையில் முதன்முதலாக அறிமுகப் படுத்தப்பட்டிருக்கும் இக்கற்கை நெறி உலகளாவிய ரீதியில் சர்வதேச ரீதியாக அங்கிகரிக்கப்பட்ட கற்கை நெறி ஆகும்.

நான்கு பிரிவுகளாக கற்பிக்கப்படும் இப் பாடநெறிகள் கீழே தரப்பட்டுள்ளன.

1) நிர்வாக முகாமைத்துவ சான்றிதழ்
2) நிர்வாக முகாமைத்துவ டிப்புளோமா
3) நிர்வாக முகாமைத்துவ உயர் டிப்ளோமா
4) திறன் வாய்ந்த நிர்வாக முகாமைத்துவ பட்டம்.

இங்கிலாந்தின் நிர்வாக முகாமைத்துவ கற்கை பீடமானது உலகின் சிறந்த கல்வி நிறுவனங்களில் ஒன்றாகும். இங்கு வழங்கப் படும் வர்த்தக அறிவும், பயிற்சிகளும் நடைமுறையில் காணப்படும். நிறுவனங்களுக்கு வர்த்தக ரீதியாக உதவுவதால் இக் கல்லூரியில் இருந்து வெளியேறுவோர் இலகுவாக வேலை வாய்ப்புகளை பெறுகின்றனர்.

எனவே வேறுபட்ட வர்த்தக நிறுவனங்களில் பணி புரியும் பணியாளர்கள் தங்களது நிர்வாகத் திறமையை விருத்தி செய்வதற்கு இக் கல்லூரி சிறந்த ஒரு நிறுவனமாகக் கருதப்படுகிறது.

உயர்தரப் பெறுபேறுகளுக்காக காத்திருக்கும் பாடசாலை மாணவர்கள் இக்கல்வியை கற்பதன் மூலம் எதிர்காலத்தில் வேலைவாய்ப்புகளின் போது முன்னுரிமையை பெற்றுக் கொள்ள முடியும்.


Computer Courses
MS Office XP
Computer Studies
Web Designing
Java Programming
Desktop Publishing
Graphic Designing
Visual Basic Programming
M. Jeyanthini
J.A.Elvis
FREE 20-65% discount

Multimedia
Digital Video Editing (Adobe Premiere) Rs. 30,000 Rs. 10,000
INDIAN LECTURER
Digital Compositing (Adobe After Effects)
Digital Audio Editing (Sound Forge)
3D Studio Max 6.0 (Modeling, Special Effects, Animation)
FREE 65% discount
K.Kamalathasan (B.com)

English
Spoken English
TOFEL IELTS
For..... Students, School Leavers, Officers, Housewives, and Others

Hardware
S.Nicholas (B.sc)
IT Fundamentals, Configurations, Multimedia Installations, Assembling, Repairing & Servicing, Hard Disk, CD Drive, Fundamentals of Electronics, Anti Virus Electric Circuit Diagrams, I/O Cards, Operating Systems & Software Installations

Computer Seles & Services
PHOTO COPY Rs.1/75
CD WRITING 30/=
DUPLO Printing

IT SOLUTION
4651/2, Galle Road, Wellawatte. ☎2551148(2 Lines) 2551548
நிபுணர்களிடம் மட்டுமே பயிலுங்கள்



கணனி மற்றும் கணக்கியலில்தரம் மிக்க கல்விக்கு!

INFORMIX

எமது நிறுவனம் வழங்கும் சர்வதேச தரம் மிக்க பாடநெறிகள் சில....

DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING with ACCPAC / MYOB/QUICK BOOKS PRO
DIPLOMA IN COMPUTER STUDIE, DIPLOMA IN WEB DESIGNING
DIPLOMA IN HARDWERE & NETWORKING , MS OFFICE Xp

| | | | | |
|---|---|---|---|---|
| aat | (SL) | ACS | (AUS) | MCP |
| IAB | (UK) | BIT | (SL) | MCSA |
| CMA | (CANADA) | BCS | (UK) | MCSE |
| CIMA | (UK) | | | |

SOFTWARE DEVELOPMENT
NETWORK IMPLEMENTATION
HARDWARE MAINTENANCE

Total Solution provider for all your Computing & Accounting needs

மேற்குறிப்பிடப்பட்ட மற்றும் குறிப்பிடப்படாத பாடநெறிகள் சம்பந்தமாகவும், JUNE மாதம் நடத்தப்படவுள்ள இலவச கருத்தரங்கு சம்பந்தமாகவும்
மேலதிக தகவல்களுக்கு..... INFORMIX
COMPUTING & ACCOUNTING
#545/3,Negombo Road,Wattala.
Tel:+(94)11-2943905
E-mail:Informix@wapda.com
www.informix.ITgo.com
Opposite to Sweet House & Near by the Police Station



A/L பரீட்சை முடிந்து விட்டது... அடுத்து என்ன?

நான் 90 நாட்களில் ஆங்கிலம் கற்றேன்

எப்படி தெரியுமா?

கண்டி Jeffwoolar கல்வி நிலையத்தில் ஒரு மாணவனாக சேர்ந்து தபால் மூலம் சரளமாக ஆங்கிலத்தில் எழுத, பேச வாசிக்க கற்றுக்கொண்டேன்.
பாடநெறி முடிவில் Diploma in English சான்றிதழையும் பெற்றுக்கொண்டேன்

நீங்களும் தபால் மூலம் ஆங்கிலம் கற்க விருப்பமா?

மேலதிக விபரங்களை தபால் மூலம் பெற முத்திரை ஒட்டிய நீள கடிதவுறையை அனுப்பவும்
Tel: 0812 - 201 433, 0777 - 806 606

பரிசு குவியல்கள்   Saree Saree

நீங்கள் செய்ய வேண்டியது இது தான். எமது நிறுவனத்தில் பாடநெறியை தொடர விரும்பும் உங்கள் நண்பர்கள் ஐவரின் பெயரையும், முகவரியையும், தொலைபேசி இலக்கத்தையும் ஒரு Halfsheet தாளில் எழுதி அனுப்புங்கள்.

தெரிவு செய்யப்படும் 25 மாணவர்களுக்கு இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சாரிகள் இலவசமாக வழங்கப்படும்

விண்ணப்ப முடிவு திகதி: 2004.07.30

J.E.I. Institute
P.O. Box No. 119, Kandy.



# சுடரின் கல்வி வழிகாட்டி



## இலங்கையில் சர்வதேச கணினிக் கல்வி

கம்யூட்டரானது இன்று சர்வதேச ரீதியான ஊடகமாகத் திகழ்கிறது. எந்தவொரு கணினிக்கல்வியையும் கணினிசார் திறமையையும் எந்த ஒரு நிறுவனத்தில் பெற்றுக்கொண்டாலும் உலகின் எந்த மூலையிலும் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்து வருகின்றது. அந்த வகையில் Hiiway Informatics கணினி நிறுவனம் கணினித் துறையில் தனது ஆதிக்கத்தைச் செலுத்தி வருகிறது.

இந்தியாவில் பல கல்வி நிறுவனங்களுக்கிடையில் Hiiway Informatics கணினி நிறுவனம் சென்னையில் தனக்கொரு முத்திரை பதித்துள்ளது. சுமார் ஆறு வருடங்களுக்கு மேலாக கணினிச் சேவையில் இயங்கி வரும் இந் நிறுவனம் ஆரம்பத்தில் Hii TECH Computer Technology எனும் பெயரிலேயே இந்தியாவில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தியாவில் ஒன்பது கிளைகளை கொண்டமைந்துள்ள இந்நிறுவனம் கணினிக் கல்வியை சர்வதேச ரீதியில் விரிவுபடுத்தும் நோக்குடன் தனது பத்தாவது கிளையை அண்மையில் இலங்கையில் ஆரம்பித்துள்ளது.

கொழும்பு கொட்டாஞ்சேனை ஷூ வீதியில் அமைந்துள்ள இக்கணினி நிறுவனத்திற்கு குறுகிய காலத்திற்குள் பெரும் வரவேற்பை அளித்திருப்பது விசேட அம்சமாகும்.

கல்வி நெறிகளானது புதிய தொழினுட்பம் அதி நவீன மென்பொருட்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில்

1.ஆரம்ப பயிலுநர்களுக்கு ஏற்ற குறுகிய காலப் பாடத்திட்டங்கள்.

2.அனுபவம் உள்ளவர்களுக்கான Visual Basic, Java,Oracle போன்ற பாடநெரிகள்.

3.சிறுவர்களுக்கான பாடநெறிகள்

4.நவீன தொழில் நுட்பம் மற்றும் பல்லூடக தேவைகளுக்கு ஏற்றவாறு அமைக்கப்பட்ட மல்டிமீடியா பாடநெறிகள்.

5.அச்சுக் கலைக்குத் தேவைப்படும் கணினி சார்பான அனைத்து நுட்பங்களையும் வழங்கும் DTB பாடநெறி.



திரு.த.சுதாகரன்
(Hiiway Informatics நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர்.)

6.இணையத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்ட பாடநெறிகள்.

7.கணினி ஒன்றை சுயமாக அமைத்துக் கொள்ளவும் பிழைகளை, கண்டறிந்து நிவர்த்தி செய்வதற்குமான அறிவை வழங்கும் ஹார்ட்வெயார் பாடநெறிகள்

இவை அனைத்திற்கும் சர்வதேச தரம் வாய்ந்த சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இவை தவிர இவ் Hiiway Informatics நிறுவனத்தின் பாடநெறிகள் சர்வதேச தரம் வாய்ந்ததாகக் காணப்படுவதுடன் லண்டனில் CCL (Commission for Continuous Learning) பல்கலைக்கழகத்தின் தர அங்கீகாரத்துடனான சான்றிதழ்களை லண்டனில் LES (London Executive School) பல்கலைக்கழகம் வழங்குவது விசேட அம்சமாகும். அதாவது மேற்குறிப்பிட்ட பாடநெறிகளுக்கான லண்டன் பரீட்சைக்கு தோற்றி செய்முறை, அறிமுறை ஆகிய இரண்டிலும் சித்தியடையுமிடத்து மேற்படி CCL, LES சான்றிதழ்கள் வழங்கப்படும் இப்பாடநெறிகள் தவிர CCL, LES தரச்சான்றிதழ்கள் வழங்கப்படும் நீண்டகாலப் பாடநெறிகளாவன.

1.Professional in Hardware and Networking Engineering.

2.Professional in Software Engineering.

3.Professional in Web Curriculum.

4.Professionals in multimedia Techonoligy.

ஆகியனவாகும்.

இதைவிட மேலதிகமாக ஐரோப்பிய ஒன்றியத்திலுள்ள ஐஐ க் (Irish International University) மூலமான சர்வதேச அங்கீகார சான்றிதழ்களை பெறுவதற்கான நீண்டகாலப் பாடநெறிகளும் Hiiway Informatics நிறுவனத்தால் கற்பிக்கப்படுகிறது. சுமார் மூன்று வருட பட்டப் படிப்பிற்குள் DCS (Diploma in Computer Science). ADCS (Advanced Diploma In Computer Studies), HDCS (Hiier Diploma in Computer Studies) ஆகிய பாடநெறிகளை உள்ளடங்குகின்றன இப்பாடநெறிகளை முழுவதுமாக பூர்த்தி செய்த மாணவர்கள் ஐஐக் சான்றிதழைப் பெற்று B.Sc கணினிக் கல்வியைத் தொடர்ந்து பட்டம் பெற முடியும்.

சர்வதேச லண்டன் மற்றும் ஐரோப்பிய பல்கலைக்கழக கணினிப் பாடநெறித் திட்டங்களுக்கமைவாக கணினிக் கல்வியை Hiiway Informatics நிறுவனம் கற்பித்து வருகிறது. மும்மொழிகளிலும் அனுபவம் வாய்ந்த கணினிப் பட்டதாரி விரிவுரையாளர்களினால் விரிவுரைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொருவர் மீது தனிக்கவனம் செலுத்தப்படுவதுடன் இலகுவான முறையில் கணினி நுட்ப அறிவும் போதிக்கப்படுகிறது.

தமது வசதிக்கேற்ப வகுப்பு நேரங்களை தெரிவு செய்யக்கூடியதாக இருப்பதுடன் செய்முறைப் பயிற்சிக்கான நேரம் வரையறுக்கப்படாமலும் இருக்கிறது. இதைத் தவிர தவணைக்கட்டணமுறைகளும், இலவச பாடநெறி நூல்களும் வழங்கப்படுகின்றன. அத்துடன் Hiiway Informatics நிறுவனத்தில் கணனிக் கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கு லண்டனில் மேற்படிப்பைத் தொடர்வதற்கு தேவையான அனைத்து வசதிகளையும் மேற்படி நிறுவனம் வழங்குவது சிறப்பம்சமாகும்.

தற்போது Hiiway Informatics நிறுவனம் கணினி உலகில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட Dot.net.technology, video and film techonology பாடநெறிகளையும் திறமையான விரிவுரையாளர்களால் கற்பித்து வருகிறது. இப்பாடநெறிகளை முதலில் இலங்கையில் ஆரம்பித்த பெருமை Hiiway Informatics யே சாரும். இதைத்தவிர கொழும்பு பல்கலைக்கழக அங்கீகாரத்துடனான BIT பாடநெறியையும் வழங்கி வருகிறது.




தலைவர் திரு. மனோகரன், Hiiway Informatics நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் திரு.த.சுதாகரனுக்கு சான்றிதழ் வழங்குகிறார், Irish International University உபவேந்தர் திரு.ரால்ஃப் தோமஸ் மற்றும் EIPEL நிறுவன நிர்வாக பணிப்பாளர் லோரன்ஸ் தோமஸ் ஆகியோர் அருகில் காணப்படுகின்றனர்.


இந்தியாவின் முன்னோடி கல்வி நிறுவனமான

# Hiiway Informatics (PVT) LTD.

Global Education

India - Sri Lanka Validated by

*London Executive School (LES)-UK, Commission for Continuous Learning (CCL)-UK*

## Degree program

B.sc (Information Technology)

Degree Awarded by Irish International University European Union

| | | |
|---|---|---|
| Diploma In Computer Science (DCS) | 1 Year | 42,000/= |
| Advanced Diploma In Computer Studies (ADCS) | 1 Year | 48,000/= |
| Higher Diploma In Computer Studies (HDCS) | 1 Year | 40,000/= |

**Long Term Professional Courses Awarded by LES -UK**

| Course Name | Duration | Fees | No of Installment |
|---|---|---|---|
| Network Centered Software Engineering | 18 Months | 38,100/= | 15 |
| Network Centered Multimedia Technology | 18 Months | 49,500/= | 15 |
| Network Centered Web Curriculum | 12 Months | 30,000/= | 10 |
| Higher Diploma In Hardware and Networking Engineering | 06 Months | 15,000/= | 05 |

**Dot.Net Technology**

Diploma in Dot.Net Technology
Visual Basic.Net
Asp.Net — Duration: 6 Months
ADO.Net, — Course Fees: 13,000/=
C#.Net
SQL 2000 Server

**B.Sc (Information Technology)**

3 Years:
1 Year — HDCS
1 Year — ADCS
1 Year — DCS

*Path Way to Foregin Degree*

**Features**

*World Recognised Certificates
*Placement Opportunities
*High Qualified Lecturers (All Graduates Including India Lecturer)
*Un Limited Practical time.
*Flexable Time Table
*Leading European University syllabus
*Practical Approach
*Training Through Pentium - III and Pentium - IV Computers
*Easy Instalment. (Monthly)

**Certificate In Computer Accounting**

Daybook & Intergrated Accounting.
Setting UP of Ledger Automated Extraction of Trial Balance, P&I and balance Sheet, Accurals.
Prepayments And Petty cash Systems.
Sales Analysis, Debtors/Creditors Controls, Banking and Bank Reconciliation.
Duration: 4 Months Course Fees: 5,000/=

IAB. AAT வகுப்புகளும் நடாத்தப்படுகிறது
Individuan and Group Classes

**Short Term Courses**

| Course Name | Duration | Fees |
|---|---|---|
| Diploma In MS Office | 3 Months | 4,000/= |
| Diploma In Software Engineering (MS Word, MS Excel, MS Power Point, MS Assess, C++, VB 6.0, Java) | 6 Months | 8,000/= |
| Diploma In Hardware Engineering | 3Months | 4,500/= |
| Diploma In Networking Technology | 3 Months | 5,000/= |
| Diploma In Desk Top Publishing (Corel Draw, Photoshop, Pagemaker) | 4 Months | 6,000/= |
| Diploma In Web Designing (HTML, Java Script, VB Script, ASP, Photoshop, Flash MX, Dream Weaver) | 6 Months | 10,000/= |
| Diploma In Multimedia Technology (Pagemaker, Photoshop, Flash, Dreamweaver, 3D Studio Max or Maya 5.0) | 6 Months | 9,000/= |

## Hiiway Informatics (Pvt) LTD

Video and Film Technology Courses

| Course Name | Duration | Fees |
|---|---|---|
| Diploma in Video Editing (Latest Software) | 3 Months | 7,000/= |
| Diploma in Video and Film Technology | 6 Months | 10,000/= |

| | |
|---|---|
| Maya 5.0 | ASP (Active Sever Page) |
| Java | Auto Cad |
| Visual Basic 6.0 | Dream Weaver |
| Oracle | SQL 2000 Sever VB.Net |
| Sound Forge | ADO.Net |
| Adobe Premier | ASP.Net |
| Adobe Illustrator | C#.Net |

82, Shoe Road, (Near Commercial Bank) Kotahena, Colombo-13. Tel: 4615254, 2452739.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்




## International Qualification From
# IAM Institute of Administrative Management (IAM - UK)

First time in Sri Lanka



Professionalism in Management...
...Excellence in Administration

### Entry Criteria

- Open to everyone → Certificate in Administrative Management
- IAM certificate. 2 years relevant experience. GCE / A levels or Equivalent International Qualifications. → Diploma in Administrative Management
- Associate members of the IAM. IAM Diploma. UK Degree or HNC or HND Equivalent International Qualifications. → Advanced Diploma in Administrative Management
- Advanced Diploma in Administrative Management. → BA (Hons) Strategic Administrative Management

The Institute of Administrative Management is the leading membership organization for today's Administration Professional.

Established in 1915, the institute of Administrative Management - UK is the only international professional body for both practising and aspiring Administrative Managers.

The IAM supports and promotes continuous professional development and recognition for Administrative Managers.

Employers in small to large enterprises, commerce and public non profit sectors all equally value IAM programmes. The broad nature of the courses ensure applicability across all sectors and specialisms giving the student excellent skills.

**Courses commencing on 21st June 2004**

Enrol with :

**METROPOLITAN BUSINESS SCHOOL**
562/9, Lower Bagatalle Road, Colombo 03.
Tel: 2505954 Fax : 4520976
E-mail : infombssl@hotmail.com
peacsri@hotmail.com
Web site : www.mbssl.com

### Certificate in Administrative Management
MODULES
- Business Administration
- Systems and Activities
- The Individual and The Organisation

### Diploma in Administrative Management
MODULES
- Effective Management
- Management Information
- Human Resources plus either
- Work Project Report or Case Study

### Advanced Diploma in Administrative Management
MODULES
- Managing Contemporary Issues
- Managing People
- Managing Processes plus either
- Managing Financial Resources
- Work Project or Case Study

OPTIONAL MODULES (choose two)
- Managing Information and Technology
- Managing Marketing
- Managing Training and Development
- Managing Facilities
- Managing Information (Analysis and Presentation)

### The Bachelor of Arts (Honours) Strategic Administrative Management
MODULES
- Personal Effectiveness
- Strategic Management
- Administrative Management in Context

OPTIONAL MODULES (choose one)
- Culture and Change Management
- International Business Management
- International Marketing

DISSERTATION (the dissertation is in two parts)
- Research Methodology
- Written Dissertation (15,000 words)

Certificate | Diploma | Advanced Diploma | BA(Hons) in Strategic Administrative Management



# Study at Bangalore University

## BRINDAVAN COLLEGE
[Formerly NATIONAL FIRST GRADE COLLEGE]
Affiliated to Bangalore University
Bangalore 94 , India
Email : enquiry @ brindavancollege.com
Website : www. Brindavancollege.com

**FREE SEMINAR & SPOT ADMISSIONS**

B.Sc. Microbiology/Biotechnology/Genetics/Computer Sc.
B.B.M. , B.C.A. B.Com. M.C.A. M.B.A.
M.Sc. Microbiology/Biotechnology/Genetics

| Kandy | Matara | Colombo |
|---|---|---|
| Queens Hotel | Ruhunu Cultural Centre | Hilton Hotel |
| May 31st | June 1st | June 2nd |
| 10.00 - 4.00 | 10.00 - 4.00 | 11.15 - 5.00 |

# Eligibility - 2 A/L # Reservation Fee US$ 400
# Students awaiting results are welcome

Graduation Ceremony at Colombo Hilton on 2nd June at 9.00 a.m.

TV Program on Channel Eye 30th May at 10.15 p.m

Further details See Newspaper on 31st May & 1st June
Telephone Mr.Gunawardena 011-2811524
Mr.Gunasekera 038 -2232657 038 - 2234154
Company Secretarial Services (Pvt) Ltd
#2 85C-1/1, Stanley Tillakaratne Mw., Jubilee Post, Nugegoda
Tel: 011-2854438 / 0777-387273 E Mail yapadd @ sol . lk



இப்பொழுது வெள்ளவத்தை மற்றும் கொட்டாஞ்சேனையில்

ஆசியாவில் தகவல் தொழில்நுட்ப பயிற்சி மற்றும் கல்விசார் சிங்கப்பூர் நிறுவனமான Informatics Holdings Ltd. உலகில் உள்ள 40 நாடுகளில் 450 உப நிலையங்களைக் கொண்டுள்ளது. இதன் ஓர் உப நிறுவனமே இலங்கையின் Singapore Informatics நிறுவனமாகும்.

## உங்கள் தொழில்நுட்ப அறிவை இன்றே வளர்த்துக் கொள்ள....

## DCS Diploma in Computer Studies

Dual Certificates are awarded by NCC (UK) &
University of Cambridge Local Examination Syndicate.

## CCS Certificate in Computer Studies

## OIS Office Information Technology

* Excelent Opportunity with Certificate awarded by University of cambridge local Examinations syndicate (UCLES)
* National Computing Center (NCC)
* Manchester UK Informatics
* International Singapore

### OUR MULTIMEDIA DIVISION
**Certificate in Desktop Publishing & Graphic Designing** (Photoshop, COREL Draw, Page Maker, Illustrator)
**Certificate in Web Designing.** (HTML, Photoshop, Flash, JAVA Script)
**Certificate in Multimedia.** (Photoshop,Premiere, After FX, 3D Max)

### CERTIFICATE IN COMPUTER HARDWARE TECHNOLOGY

### PROGRAMMING LANGUAGES
C/C++, JAVA, Visual Basic

## SINGAPORE INFORMATICS
COMPUTER SCHOOL
KOTAHENA & WELLAWATTE

No: 18/1, Ramakrishna Road, Colombo - 06.
Tel No: 5 552468/9
e-mail: wellawatta@singaporeinformatics.lk
No: 117, New Chetty Street, Colombo - 13.
Tel No: 2 433291



# சுடரின் கல்வி வழிகாட்டி



# Cisco Training

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழுக்கான கற்கை நெறிகள்

| | |
|---|---|
| CCNA | Rs.12,000/= |
| CCNP 4-Modules | Per module Rs.15,000/= |

- 100% Guaranteed For Success
- Online Practicals
- தமிழில் மேலதிக விளக்கம்

## Programming Languages

| | |
|---|---|
| VISUAL FOX PRO | Rs.4,500/= |
| VISUAL BASIC | Rs.4000/= |
| JAVA | Rs.3,500/= |

## Computerized Accounting

-Job Oriented Course-

- Accounting System
- Inventory Control System
- Payroll System

Duration:2Months

Only 5,000/=

**10% Discount** Up to End of June

**COMPUTER POINT(Pvt)Ltd**

No: 309-3/1(3rd Floor) Galle Road, Colombo-6

Tel:2505969

e-mail:cpoint@eureka.lk (opposite to French Corner)

## மின்னஞ்சல் அனுப்பும் போது...

நீங்கள் குறித்த மின்னஞ்சல் முகவரி ஒன்றுக்கு மின்னஞ்சலை அனுப்பும் போது சில சந்தர்ப்பங்களில் 'Daemon failure' என்ற செய்தி வருவதை அவதானித்திருப்பீர்கள். இதற்குப் பிரதானமாக இரண்டு காரணங்கள் இருக்கலாம்.

1. பெறுநர் மின்னஞ்சல் முகவரி தவறாகக் கொடுக்கப்பட்டிருக்கலாம். நீங்கள் தவறாகக் கொடுத்திருந்தாலும் அப்படியொரு முகவரியை வேறொருவர் வைத்திருந்தால் அவருக்கு மின்னஞ்சல் அனுப்பப்பட்டுவிடும். நீங்கள் கொடுத்த முகவரியில் அதுவரையில் யாரும் மின்னஞ்சல் முகவரியைப் பெற்றுக் கொண்டிராவிட்டால் இந்த failure செய்தி வரக்கூடும்.

2. பெறுநரின் மின்னஞ்சல் பெட்டி (Inbox) அனுமதிக்கப்பட்ட கொள்ளளவையும் கடந்து நிரம்பிப்போயிருந்தால் நீங்கள் அனுப்பும் மின்னஞ்சல் ஏற்றுக் கொள்ளப்படாது இருந்தால் இவ் Failure செய்தி வரலாம்.

உங்களது மின்னஞ்சல்திரும்பி வருமாயின் அதற்கான காரணமும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும். அதனைவாசித்துத்தெரிந்துகொண்டு மீண்டும்சரியாகமின்னஞ்சலிடலாம்.

## GLOBAL STUDIES INFO TEC

**COMPUTER COURES**

*Diploma in MS Office*
*Diploma in Hardware*
*Dip. in Graphis Designing*
*Dip. in Web Designing*
*Dip. in Multimedia*
*Visual Basic*
*Java 2*
*Internet & E-mail*

Course Fee 1400/= Only

*Diploma in Computerised Accounting*

AccPac + Quick Books Pro + MYOB ஆகிய சர்வதேச Accounting Packages ஊடாக கற்பிக்கப்படும்.

**COURS MODULES**

Fundamentals of IT
Manual Accounting
Financaial Accounting
Bank Reconciliation
Stock Control
Taxation (VAT)
Payrolls
Budgeting & Chshflow

Course Fee ~~11,000/=~~ 3500/= Only

80% Off

சிறப்புச்சலுகை JUNE 15 ஆம் திகதிவரை மட்டுமே

DURATIONS 1 Month - Week Days, 3 Month - Weekend Day

**GLOBAL STUDIES INFO TEC**

No: 370 1/1, Gale Road, Colombo - 06 (Next to Hotel Rolex)

Tel: 0112 360 449



**STUDY IN**

LONDON, U.S.A, ITALY, SINGAPORE, CANADA, AUSTRALIA, INDIA, CYPRUS

ALL COURSES AVAILABLE IN ANY FIELD

இலங்கையின் பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்ற முகவர் நிலையம்.

University Admission Fee Only 550 £

Basic Qualification G.C.E. O/L

Free Counselling

- ஜூலை, செப்டெம்பர் பதிவுகள் இப்பொழுது இடம்பெறுகின்றன.
- இலகுவாக செலுத்தக் கூடிய தங்குமிட வசதிக் கட்டணம்.
- 15% கழிவுடன் விமானச் சீட்டு.
- பகுதி நேர வேலைவாய்ப்பு (Part Time Jobs)

**COLOMBO BUSINESS COLLEGE**

Professional Overseas Educational Consultants

No: 379 - 1/5, First Floor, Gall Road, Wellawatta, Colombo - 06

Tel: 011 4 518 580, Fax: 011 4 519 130

E.mail: colvuco@yahoo.co.in

(Opposite to Delmon Hospital & Nations Trust Bank)

## இலவச புலமைப் பரிசில் 2004

இப் புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றுவதன் மூலம் **Maya, Multimedia** உட்பட அனைத்துப் பாடநெறிகளையும் 50% சலுகைக் கட்டணங்களுடன் கற்க முடியும்.

மாணவர்களின் வசதிக்கேற்ப பரீட்சை திகதியினைத் தெரிவு செய்யலாம்.

ADVANCED MAYA 5

MYOB
ACC PACK
QUICK BOOK

Multimedia

Ms Office XP
Computer Studies
Web Design
Graphics Design
Hardware Eng.

- Flash MX
- 3D Max 5.1
- Poser 5
- Video Editing
  - Adobe Premiere
  - Ulead Media Pro 6.5
  - Holly wood FX Gold
- Director MX
- After Effects 6
- Sound Editing
  - Sound Forge 6
  - Cool Edit 2000
  - Fruity Loops

Programming
Autocad
Java
VB
C++

இலங்கையின் கணனித்துறை வரலாற்றில் முதன்முறையாக CD வழிப்பயிற்சி (தமிழ்)

Maya 5

| | |
|---|---|
| 3D Max 5 | Sound Forge 6 |
| Flash MX | Photo Shop 7 |
| Premiere 6.5 | Illustrator 10 |
| After Effects 6 | Corel Draw 10 |

**LEARN TODAY EARN FUTURE**

மேலதிக விபரங்களுக்கான தொடர்புக்கு:

LONDON INFO TECH

Professional Computer Training College

No: 36 - 1/1, Station Road, Wellawatte. Colombo - 06

Tel: 011 2 598 059

# SPOKEN ENGLISH

CERTIFICATE IN EFFECTIVE

## SPOKEN ENGLISH

அடிப்படையில் இருந்து ஆரம்பிக்கும் ஆறு மாதகால சான்றிதழ் பாடநெறி

வெற்றி நிரூபிக்கப்பட்ட இலங்கையின் No: 1 Spoken English பாடநெறி.



- இயல்பாக ஆங்கிலம் பேசிட இலகுவான வழிநடத்தல்.
- இலக்கண விளக்கம் கிரகித்தல் மற்றும் சொல்வள விருத்திக்கான பயிற்சிகள்.
- ஒலி நாடாக்களின் உபயோகம்.
- அருமையான பாடக் குறிப்புப் புத்தகங்கள்.
- அகில இலங்கைப் புகழ்பெற்ற ஆசிரியர்களின் விரிவுரை.

**இப் பாடநெறி யாருக்கு?**

O/L கற்று முடித்தோர்
A/L பரீட்சை எழுதியோர்
பாடசாலை மாணவர்கள்
பல்கலைக்கழக மாணவர்கள்
குடும்பப் பெண்கள்
தொழில் புரிவோர்
வெளிநாடு செல்லவிருப்போர்

| கொழும்பு - 13 கொட்டாஞ்சேனையில் | கொழும்பு - 06 வெள்ளவத்தையில் | கண்டி மாநகரில் |
|---|---|---|
| JUNE 05 முதல் | JUNE 07 முதல் | JUNE 09 முதல் |
| Sat / Sun 10.30am - 1.30pm | Mon / Tue 9.30am - 12.30pm | Wed / Thu 9.30am - 12.30pm |
| BRILLIANT INSTITUTE NO: 136, Sangamitha Mawatha Colombo - 13 Tel: 0112 347 728 | SANGAM ACADEMY NO: 07, 57th Lane, (Off Rudra MW) Colombo - 06 Tel: 0112 365 | MECK NO: 13, 9 Samagi Mawatha. (Off Peradeniya Road) Kandy Tel: 0777 316 981 |

என்றும் புத்திசாலி மாணவர்களின் ஒரே தெரிவு

**மாஹுன் ரக்கீம்**

Hot Line: 0714 896 141

Eng Tr. Dip in Eng Teaching

பொதுசன நூலகம்

# மலையக ஓட்டுக்கு வேட்டு தலைவர்களுக்குள் குத்து வெட்டு

இரட்டைத் தோணியில் கால் வைத்துக் கொண்டிருக்கும் மலையகத் தலைவர்களை நம்ப தோட்டத்தொழிலாளர்கள் ஏற்கத் தயாராக இல்லை. மலையகத்தில் ஏகப்பிரதிநிதிகள் என்று கூறிக் கொள்ளும் இந்த தலைவர்களின் இரட்டை வேடங்களும் திரை மறைவுப் பேச்சுக்களும் சிறிது சிறிதாக அம்பலத்துக்கு வர ஆரம்பித்துவிட்டன. இதனால் மலையக மக்களின் சந்தேகம் அதிகரிக்க ஆரம்பித்து விட்டது.

ஏன் இந்த தலைவர்களை மலையக மக்கள் மஞ்சள் கண்ணாடி போட்டுப் பார்க்கின்றனர்?

இந்த மலையகத் தலைவர்களின் கடந்த கால நடவடிக்கைகளும், நிகழ்காலப் பேச்சுக்களுமே இந்த சந்தேகத்துக்கான காரணம் என்றும் வெளிப்படையாகவே கூறுகின்றனர்.

இந்த அமைப்புகளில் தலைவர், செயலாளர், அமைப்பாளர்கள் எனப்பலர் இருக்கின்றனர். கட்சி ஒன்று கருத்துகள் பல என அனைவரும் தத்தமது எண்ணப்படி கருத்துக்களை வெளியிடுகின்றனர். இவர்கள் பலவாறான கருத்துக்களை வெளியிடும் போது இவர்களை நம்பி இருக்கும் தொழிலாளர்கள் எந்தக் கொள்கையைக் கடைப்பிடிக்கப் போகின்றனர்? எவரை நம்பி, எவர் பின் செல்வது என்பது தெரியாமல் தடுமாற்றம் அடைந்துள்ளனர்.

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தல் மு[illegible]கள் பலருக்கும் பல்வேறு வகையில் பா[illegible] புகட்டிவிட்டது. இப்பொழுது மாகாண சபை தேர்தல்களை எதிர்நோக்கி உள்ளனர்.

இப்படியான வேளையில் இந்தத்தலைவர்களின் பேச்சுகள், மலையக மக்கள் முடியைப் பிய்த்துக் கொள்ளும் நிலையை ஏற்படுத்தி இருக்கின்றது.

கடந்த காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற பெருந்தலைவர்கள் அக்கட்சி ஆட்சி அமைக்க முடியாமல் போனபோது பல்டி அடித்து மாற்றுக் கட்சியுடன் சேர்ந்து அமைச்சர்களாகிவிட்டனர்.

'தேர்தலின் பின்பு மலையகத் தமிழர்கள் மீது பெரும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட விருந்தன. நான் எனது அமைச்சர் பதவிக்காகக் கட்சிமாறவில்லை, மலையக மக்களைப் பாதுகாப்பதற்காகவே கட்சி மாறினேன்' என்று சப்பைக்கட்டு கட்டினார்கள்.

அப்போதும் கூட இவர்கள் மக்களைப் பாதுகாக்க அல்ல, மாற்றுக் கட்சியில் இருந்த மற்றும் ஒரு மலையகத் தலைவரை செல்வாக்கிழக்கச் செய்ய வேண்டும் என்பதற்காகத் தான் பல்டி அடித்தனர் என்பதும் காலப் போக்கில் அம்பலமானது.

இதனால் முன்பு மாத்தளையில் இருந்த தலைவர் அமைச்சுப் பதவியையே தூக்கி எறிந்து விட்டு வெளியேறிய சம்பவங்களையும் மலையகமக்கள் மறந்து விடவில்லை.

அதேபோன்று நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்களுக்கு வாக்களிக்க வேண்டாம் என்ற தொனியில் பேசிய பேச்சுக்கள் இப்பிரதேசமக்கள் மத்தியிலும் இம் மலையகத் தலைவரின் செல்வாக்கைப் பெரிதும் பாதித்துள்ளன. மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடக் கூட எவரும் முன்வராத நிலை ஏற்பட்டுள்ளது.

அண்மையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவின் போதும் இந்த மலையகத் தலைவர்கள் மயக்க நிலையிலேயே இருந்தனர் எனக் கூறப்படுகின்றது.

இவ்வேளையிலும் கூட முழு அமைச்சுக்கள் எத்தனை பிரதி அமைச்சுக்கள் எத்தனை எனப் பேரம் பேசப்பட்டதாம். இப்போதும் இங்கே நிற்பதா அல்லது அங்கே பாய்வதா என்ற தடுமாற்றத்துடனேயே காணப்படுகின்றனராம்.

இந்தச் சந்தர்ப்பத்திலா மாகாண சபைகளுக்கான தேர்தல் வரவேண்டும்? இந்த மாகாணசபைத் தேர்தலிலாவது ஏகமனதான ஒரு முடிவைக் கண்டுள்ளனரா என்றால் அதுவும் இல்லை. அங்கேயும் கூட குத்து வெட்டுக்கள்தான்.

ஒரு மாகாணத்தில் யானையில் சவாரி விடப் போகின்றனராம். மற்றுமொரு மாகாணத்தில் சேவல் கூவப்போகுது என்கின்றனராம். தோல்வி [illegible] வோம் எனக்கருதும் இடங்களில் யானையுடன் ஒட்டிக்கொண்டும், மற்றவர்களைத் தோற்கடிக்க வேண்டும், அங்கே தமிழர்களின் வாக்குகளைப் பலவாறு பிரித்து எந்த ஒரு தமிழனையும் வெற்றி அடையவிடக் கூடாது என்ற நோக்கத்துடனேயே தனிச் சின்னத்தில் போட்டியிடப் போவதாகவும் கூறுகின்றனர்.

இதோடு மட்டும் நின்று விடவில்லை. மாகாண சபைகளில் வெற்றிபெறும் உறுப்பினர்களுடன் ஒட்டு மொத்தமாக ஆளும் கட்சியுடன் சேர்ந்து கொள்வதற்கான ஒரு திட்டம் இருப்பதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இப்படி பல்டி அடிக்கும் நோக்கத்துடன் யானையிலும், தனியாகவும் போட்டியிட்டு இவர்கள் பதவிகளைப் பெற்றுக் கொண்டு போய்விடுவார்கள். ஆனால், இவர்களை நம்பி வாக்களித்த அப்பாவி மக்கள் இடையில் கிடந்து அவதிப்படுவார்கள்.

கடந்த தேர்தலின் பின் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்தார்கள் என அப்பாவித் தோட்டத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டனர். அதேவேளை நீங்கள் எல்லோரும் ஒழுங்கா வாக்குப் போட்டிருந்தால் நாங்கள் வெற்றி பெற்றிருப்போமே என யானைக் கட்சியினரும் தமிழர்களை முறைத்துப் பார்த்தனர்.

இப்படி இரண்டும் கெட்டான் நிலையில் அவதியுறுபவர்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள்தான் என்பதை இந்த மலையகத் தலைவர்கள் மறந்து விடுகின்றனர். இது தான் வேதனையாக இருக்கின்றது.

இதேபோன்றுதான் இம்முறையும் மாகாண சபைத் தேர்தலில் இந்த மலையகத் தலைவர்கள் தமிழர்களின் வாக்குகளைச் சிதறடித்து சின்னா பின்னமாக்கியே தீருவோம் என கங்கணம் கட்டிக் கொண்டு களத்தில் குதித்துள்ளனர்.

குறிப்பாக சப்ரகமுவ மாகாணத்தில் இரத்திரனபுரி மாவட்டம் தமிழர்கள் கூடுதலாக வாழுமிடம். இங்கே 32 ஆயிரம் தமிழ் வாக்காளர்கள் இருக்கின்றனர்.

இவர்களுடைய வாக்குகளை எத்தனை பேர் திட்டமிட்டு சூறையாடப் போகின்றார்கள் பாருங்கள்.

மலையக மக்கள் முன்னணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மேல் மாகாண மக்கள் முன்னணி ஆகிய இந்த அமைப்புகள் மூன்றுமே ஐக்கிய தேசிய முன்னணிக்கு முட்டுக் கொடுப்பவைதான். இவற்றோடு ஐக்கிய தேசிய முன்னணி, மக்கள் ஐக்கிய முன்னணி என்பனவும் தலா ஒரு தமிழ் வேட்பாளரை நிறுத்தவுள்ளன. மேலும் சுயேச்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

தமிழர்களின் வாக்குகளை இப்படி பிய்த்துப் பிடுங்க போட்டி போட்டால் இவர்களுள் யார் வெற்றி பெறுவார்? இந்த தமிழ் தலைவர்கள் ஒன்றினைந்து ஒரே குழுவாகப் போட்டியிட்டால் நிச்சயமாகத் தமிழ் பிரதிநிதிகளை சப்ரகமுவ மாகாண சபைக்கு அனுப்ப முடியும். இன்றைய நிலையில் இவர்கள் ஆளுக்கு ஆள் குழி வெட்ட முற்படுவதால் இவர்களுள் ஒருவராவது வெற்றி பெற முடியுமா என்பது கேள்விக்குறியாகியுள்ளது.

இப்படியே தான் மலையகத்தின் ஏனைய பகுதிகளிலும் இந்த மாதிரியான போட்டா போட்டிகளும் ஏற்பட்டுள்ளன. இதனால் தமிழர்களின் வாக்குகள் சிதறடிக்கப்படுமேயன்றி தமிழர்களின் பிரதிநிதித்துவம் மேலும் குறையும் என்பது தான் யதார்த்தம். யாரைத்தான் நம்புவதோ இப்பாமர மக்கள். இவர்களை ஆண்டவன்தான் காப்பாற்ற வேண்டும்.






## டேஸ்ட்கடை தணிகாசலம்

''வெள்ளாட்டுக் கூட்டத்தில் கறுப்பாடு. கறுப்பாட்டுக் கூட்டத்தில் சில குழப்பக்கார ஆடுகள்...'' என்று பாடிக்கொண்டே தணிகாசலம் அண்ணன் வீட்டுக்குள் நுழைந்தாள் திலகா.

''என்ன திலகா இல்லாதது பொல்லாததை எல்லாம் பாடிக்கிட்டு வார. எல்லாம் உன்னுடைய கற்பனையா?'' என்றார் தணி அண்ணன்.

''ஆமாங்க அண்ணே இந்தக் கேடு கெட்ட தலைவர்மாரை நினைத்தால் இப்படி மட்டுமல்ல எப்படி எப்படி எல்லாமோ பாடவரும்'' என்றாள் துடுக்குக்காரியான திலகா.

''அப்படி என்ன திலகா நடந்துவிட்டது. ஒரே அடியாகக் கொதித்துப்போய் இருக்க?''

இப்படி தணிகாசலம் அண்ணன் கேட்கவும் திலகா கையில் இருந்த பேப்பரை விரித்துக் காட்டினாள். அங்கே தமிழ் தலைவர்கள் கறுப்புப்பட்டி அணிந்து நாடாளுமன்றத்துக்கு முன் ஆர்ப்பாட்டம் செய்த படமும், தலைப்புச் செய்தியும் விசேடமாகக் காணப்பட்டது.

''அடடே நம்ப தலைவர்மார் படம் இல்லியா போட்டு இருக்கு! அதோட கந்தப்பொலவில் தமிழர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளைக் கண்டித்து தமிழ் உறுப்பினர்கள் நடத்திய கண்டன ஊர்வலம், அங்கு அவர்கள் பேசிய பேச்சு எல்லாம் விபரமாப் போட்டு இருக்கு. இதைப் பார்த்து பெருமைப்படுறதைவிட்டு கோபமா யார் பாட்டுப்பாடுவாங்க'' என்றார் தணி அண்ணன்.

''என்னங்க அண்ணே அந்தப்படத்தைப் பாருங்க. அதுல யார் யார் எல்லாம் இருக்காங்க?''

''நம்ப மகேஸ்வரன் ஐயா இருக்கார், சந்திரசேகர் ஐயா இருக்கார், ஜோஸப் ஐயா இருக்கார், ரவிராஜ் ஐயா இருக்கார், ஜூனியர் குமார் இருக்கார், அடடே நம்ப சம்பந்தன் ஐயாவும் இருக்கார். அதுக்கு மேல எல்லாம் புது முகங்களாக இருக்கு. அவ்வளவு அடையாளம் தெரியல புள்ள'' என்றார் தணி அண்ணன்.

''என்னங்க அண்ணே நம்ப மலையகத்தின் காவலர்கள் நாங்கள் தான் என்று கூறிக்கொண்டு ஓட்டுக்கேட்க வருவாங்களே! அந்தத் தலைவர் மார் யாராவது இருக்காங்களா?'' என்று நக்கலாகக் கேட்டாள் திலகா.

''அடி ஆத்தே! ஆமாம் நம்ப தொண்டமான் ஐயாவோட ஆளுங்களையும் காணோம், மனோகணேசன் ஐயாவோட ஆளுங்களையும் காணோம். என்னடா இது மலையகத்தின் காவல் தெய்வமே நாங்க தான் என்றவர்கள் இப்படிக்காலை வாரலாமா?'' என்று அங்கலாய்த்தார் தணி அண்ணன்.

''அத உடுங்க அண்ணன். ஊர்வலமாக வந்து தங்களை அடையாளம் காட்டிக்கத் தான் தயக்கம். அட்லீஸ்ட் சபைக்குள் கறுப்புப் படடியையாவது கட்டிக்கொண்டு தங்கள் ஆதரவைத் தெரிவித்து இருக்கலாம் இல்லியா? அதுக்கு காரணம் என்ன தெரியுங்களா அண்ணே'' என்று பீடிகை போட்டாள் திலகா.

''என்ன திலகா இது கூடவா தெரியல. இந்தப் போராட்டத்தை ஏற்பாடு செய்தவர்களைப் பாரு. சந்திரசேகரன் ஐயாவோட மலையக மக்கள் முன்னணியும் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் இல்லியா ஏற்பாடு செய்து இருக்காங்க. அதுல எப்படி இவுங்க கலந்துக்குவாங்க.''

''அண்ணன் சரியாகச் சொன்னீங்க. அப்படிப்பார்த்தால் இந்த டக்ளஸ் தேவானந்தா யாரு. அம்மாவோட அரசாங்கத்தில ஒரு மினிஸ்ட்டர். கூட்டணிக்கு நேர் விரோதமானவர். அப்படி இருந்தும்கூட அவர்கூட கறுப்புப்பட்டி அணிந்து கொண்டுதான் சபைக்குவந்தார். பார்த்தீர்களா? ' என்று ஒரு போடு போட்டாள் திலகா.

''அம்மாடி அவரும் ஒரு தமிழன். தமிழன் எங்கே இருந்தாலும் தமிழன் தமிழன்தான். என்பதை உணர்வு பூர்வமாக வெளிப்படுத்திவிட்டார். அவர் பாராட்டப்படவேண்டியவர்.'' என்றார் தணி அண்ணன்.

''அது மட்டும் இல்லீங்க அண்ணே! ரவூப் ஹக்கீம் ஐயா கூட காரசாரமாகப் பேசி இருக்காங்க'' ''ஏன் நம்ப சிகாமணி ஐயாவும் தான் பேசி இருக்கார். ஆனா எப்படிப் பேசி இருக்கார் பாருங்க. கந்தப்பொல அசம்பாவிதங்களை வைத்துக் கொண்டு அரசியல் இலாபம் தேடமாட்டோம் அப்படீன்னு பேசி இருக்காங்க அண்ணே'' என்று புட்டுக்காட்டினாள் திலகா.



''அடப்பாவிமனுசா! அப்ப இந்த ஆர்ப்பாட்டம் நடத்தினவங்க எல்லாம் அரசியல் இலாபம் கருதிபம்மாத்து காட்டுறாங்கனு சொல்லுறமாதிரி இல்ல சொல்லி இருக்கார் இந்த மனுசன்'' என்றார் தணி அண்ணன் ஆத்திரத்துடன்.

''அண்ணே அதோட நிக்கலயே! இது எல்லாம் நடந்து முடிந்த கதை–இதை போஸ்மோட்டம் செய்ய வேண்டியதில்லை என்றும் அல்லவா சொல்லி இருக்கார்'' என்று கொதித்தாள் திலகா.

''இது சரி தான் புடீள அவருபோய சேர்ந்த இடம் அப்படி. அவர் அப்படித்தானே பேசவேண்டும். தலைவன் சொற்படி தேரைக் கிளப்படி என்ற கதைபோல் பேசிவிட்டார் அவ்வளவு தான்'' என்று ஆறுதல் படுத்தினார் தணி அண்ணன்.

''இங்க பாருங்க அண்ணே சம்பந்தன் ஐயாவும் ஈழவேந்தன் ஐயாவும் நல்ல சூடு போட்டு இருக்காங்க. ஆண்ட இனம் மீண்டும் ஆள நினைப்பதில் என்ன தவறு? எதிரிகள் கூடாரத்தில் பலிக்கடாக்கள் போல மலையகத் தமிழர்கள் சிக்கித் தவிக்கின்றனர் என ஈழவேந்தன் ஐயா அப்பட்டமா வெளுத்து வாங்கி இருக்காரே'' என்று பேப்பரின் உள் பக்கத்தைக் காட்டினாள் திலகா.

''ஆமாம, ஆமாம் இங்க பாரேன்! சம்பந்தன் ஐயா கூட நல்லாச் சொல்லி இருக்கார். தமிழர்கள் மீதான தாக்குதல் 1956 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக நடைபெறும் திருவிழா போலாகி விட்டது, கந்தப்பொல சம்பவம் முடிந்த கதை என்கிறார்கள். அதைத்தொடர்ந்து இங்கிரியாவில் ஒரு தமிழன் கொல்லப்பட்டதை என்னவென்று சொல்கிறார்கள். இனிமேலும் இப்படியான தமிழ்க்கொலைகள் இடம் பெறக்கூடாது என்பதை உலகுக்கு உணர்த்தவே அதி உயர் பீடமான நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துகின்றோம் என்று பலமாக சூடு வைத்துள்ளார் சம்பந்தன்'' என்றார் தணி அண்ணன்:

''இப்படி கொஞ்சம் கூட சமுதாய உணர்வும் தமிழ் உணர்வும் இல்லாத ஜடங்களைப் பார்த்து வெள்ளாட்டுக் கூட்டத்தில் கறுப்பாடு என்று கூறாமல் வேறு என்னவென்று சொல்லுவது?'' என்று திருப்பிக்கேட்டாள் திலகா.

''சரி தான் அம்மா. உனனுடைய ஆதங்கம் நியாயமானது தான். அது சம்பந்தப்பட்ட ஜீவன்களுக்கும் புரியவேண்டுமே. சரி சரி வந்ததும் வராததும, ஒரே விவாதமாப் போச்சு. கலைப்பாய் இருக்கும். வா டீ குடிப்போம்'' என்று பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்தார் தணி அண்ணன்.

திருகோணமலையில்...

சுடர் ஒளி உதயன் விளம்பர பணிமனை

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-

011 4734401 - 3, 011 2399666 - 70

திருகோணமலையில் தொடர்புகளுக்கான தொலைபேசி இலக்கம் 026 2220783, 026 2221670



# பிறந்தநாள் வாழ்த்து



## த. குவின்ராஜ்

நற்பிட்டிமுனையைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்திராதேவி தங்கராசா தம்பதிகளின் செல்வப்புதல்வன் குவின்ராஜ் தனது 10 ஆவது பிறந்த நாளை (30.05.04) அன்று அவரின் இல்லத்தில் சிறப்பாக கொண்டாடுகின்றார்.
அவரை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, தம்பிலுவில் வசிக்கும் அப்பம்மா, சின்னத்தம்பி, சித்தப்பா குடும்பம், கொழும்பு பெரியமாமா குடும்பம் மற்றும் நற்பிட்டிமுனையில் வசிக்கும் கவிதா அக்கா, அம்மம்மாமார்கள், பெரியம்மாமார்கள், சித்தப்பாமார்கள், சித்திமார்கள், அண்ணன் மார்கள், தம்பிமார்கள் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் பிள்ளையார் அருள் பெற்று நீடுழிகாலம் வாழவேண்டுமென வாழ்த்துகின்றார்கள்.



அவுஸ்திரேலியாவில்

சுடர் ஒளி

பெற்றுக்கொள்ள

M.K.S.International

23-25 Pultney St.
Dandenong 3175
Australia :- 03 97 013165



சுவிஸில்

உங்கள் அபிமான

சுடர் ஒளி

விளம்பர முகவர்

MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND
Telephone :- 0041 - 043. 3179137 - 9



# TNS HARDWARE

S-lon

MITSUI CEMENT

கட்டிட, நீர்ப்பாசன, மின்சார தொழில்நுட்பங்களுக்குரிய இரும்புப் பொருட்கள், பைப் வகைகள் மற்றும் ஹாட்வெயார் (Hardware) உபகரணங்களை வெள்ளவத்தை நகரில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

TNS HARDWARE

No: 2A, Nelson Place,
Wellawatte, Colombo-06
Tel: 011 2 361907, 0777 630445



# EXPOAIR எக்ஸ்போ எயார்

your friend in the skies...

வானில் உங்கள் நண்பன்...

யாழ் பயணத்தின் போது
றோள்ஸ் றெய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை
அனுபவியுங்கள்!

யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: 011 4512666 (3 Lines) Fax: 011 4514700
வெள்ளவத்தை: 011 2360290, 2360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com

இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் — கொழும்பு விமான சேவை



# WWW.WTRUK.COM

தாய் மண்ணே வணக்கம்........ தமிழ் மண்ணே வணக்கம்........

தாயகத்தில் இருந்து தரணி எங்கும் ஒலிக்கும் ஒரே வானொலி....

# உலகத்தமிழர் வானொலி

## World Tamilar Radio

*24 Hours Online Radio*

www.wtruk.com
இணையத்தளத்தினூடாக

இலங்கைச் செய்திகளை
உடனுக்குடன் வழங்கும்
உங்கள் வானொலி

hiwtr@hotmail.com

add hiwtr@hotmail.com in your MSN Messenger to request songs

msn Messenger



??? Sneha Talk

**Listen WTR**

நடிகை, நடிகர்களின்
Live Talk

# WWW.WTRUK.COM



இப்பத்திரிகை கொழும்பு — 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் எண்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 மே 31 ஆம் திகதி வெளியிடப்பட்டது.